உ

சிவமயம்



# திருநள்ளாற்றுத் தலவரலாறு

திருநள்ளாறு ஆலய வெளியீடு

1972

விலை ரூ. 1–25

13 JUL 1972
MADRAS

உ
சிவமயம்

# திருநள்ளாற்றுத் தலவரலாறு



இயற்றியவர்

மகாவித்துவான் ச. தண்டபாணி தேசிகர்
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்

திருநள்ளாறு ஆலய வெளியீடு

13 JUL 1972
MADRAS

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| | | பக்கம் |
| முகவுரை | ... | v |
| திருநள்ளாற்றுத் தல வரலாறு | ... | 1 |
| தல அமைப்பு | ... | 4 |
| மூர்த்திகள் | ... | 17 |
| சனி பகவான் | ... | 19 |
| புராண வரலாறு | ... | 25 |
| நளன் வரலாறு | ... | 35 |
| பசுக்கொலைப் பாவத்தைப் போக்கிய வரலாறு | ... | 51 |
| உருசிராசன் வரலாறு | ... | 52 |
| அக்கினி வண்ணன் வரலாறு | ... | 54 |
| தீர்த்தங்களின் மகிமை | ... | 57 |
| விடங்கத்தலங்கள் ஏழில் ஒன்று | ... | 61 |
| சுற்றுத் தலங்கள் | ... | 71 |
| சுவாமி உலா வருங்காலங்களில் நிகழும் இசை பற்றிய மரபுகள் | ... | 93 |
| வரலாற்றுத் தொடர்புடைய கோவில் கிராமங்கள் | ... | 95 |
| திருமுறைகள் (திருஞானசம்பந்த சுவாமிகள்) | ... | 98 |
| (திருநாவுக்கரசு சுவாமிகள்) | ... | 115 |
| (சுந்தரமூர்த்தி சுவாமிகள்) | ... | 123 |
| திருப்புகழ் | ... | 132 |

# நிருவாகக் குழுவினர்

| | | |
|---|---|---|
| திரு. | R. சுப்பராயலு நாயக்கர் M. L. A. | தலைவர். |
| ,, | R. இரத்தினசபாபதிப் பிள்ளை | துணைத் தலைவர் |
| ,, | S. முத்துராமலிங்கம் பிள்ளை | செயலர். |
| ,, | V. கோவிந்தராஜு | நிருவாக அதிகாரி & பொருளாளர். |
| ,, | வித்துவான் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் | தருமை ஆதீனம் கட்டளை விசாரணை. |
| ,, | T. சீனிவாச பிள்ளை | உறுப்பினர். |

...LIBRARY
13 JUL 1972

# முகவுரை

"இன்ப அன்பு வேண்டினார்" இறைவனிடம் நம் தாயிற் சிறந்த தாயாகிய அம்மையார். இன்பத்திற்கும் அன்பிற்கும் உள்ள இயைபு அல்லது முறை என்ன தெரியுமா?

இன்பம் மகள். அன்பு தாய். அன்பு என்கிற தாய் பெற்றெடுத்த அருமை மகளே இன்பம். ஆகவே இன்பம் எய்த வேண்டுமானால் அன்பு செய்ய வேண்டும்.

அன்பு எப்படி உண்டாகும்?

பால் பசுவின் மடியில் எப்படிச் சுரக்கிறது? தேன் பூவில் எப்படியுண்டாகிறது? கன்றின் கனைப்புக் கேட்டவுடன் கறவைப் பால் சுரக்கிறது. அன்று கறவையின் உபகாரத்தை எண்ணுகிறது; கனைக்கிறது.

வண்டின் ரீங்கார ஒலியும் மெல்லிய காற்றின் அசைவுங் கண்டவுடன், பூ மலர்கிறது; தேன் சுரக்கிறது. பாலும் தேனும் புதிய பொருள்கள் அல்ல. பசுவிலும், மலரிலும் இயல்பாக உள்ள அப்பொருள்கள் வெளிப்படுகின்றன. அவ்வளவே. அதுபோல இறைவன் நமக்குச் செய்த உதவிகளை எண்ணுகின்றபோது அன்பு தானே வெளிப்படுகிறது.

இறைவன் எங்கும் எழுந்தருளியிருக்கிறார். அங்கங்கு இருந்து அவர் யார் யாருக்கு எவ்வப்போது அருளிச் செய்கிறார் என்ற உண்மைகளை உணரும்போது அங்கங்கு செல்லும் நமக்கும் அன்பு சுரக்கிறது.

கனிந்த அன்போடு கடவுளைக் கைதொழுதால் இன்ப நெறி தானே வந்தெய்துகிறது. ஆதலால் நள்ளாறர் இத் தலத்தில் எழுந்தருளியிருந்து செய்த அருட் செயல்களை அல்லது உபகாரங்களைத் தொகுத்து எண்ணவைப்பதே, இத்தல வரலாறு.


இங்ஙனம் வரலாற்றை அறிவதோடு இத்தலத்தை அடையும் வழி வகைகளையும் ஏனைய வசதிகளையும் திருக் கோயில் அமைப்பையும், இத்திருக்கோயிலிலுள்ள மூர்த்தி பேதங்களையும், இதனைச் சுற்றியுள்ள பிற தலங்கள் பற்றிய குறிப்புக்களையும், வரலாறுகளையும் இந்நூல் விளக்குகிறது.

இதில், இத்தலத்தைப்பற்றி அறியவேண்டிய எல்லாக் கருத்துக்களும் செறிந்துள்ளன. இந்நூல் இம்முறையில் அமைய வேண்டுமென்று, இவ்வாலய நிர்வாகக் குழுவினர் விரும்பினர்கள். குறிப்பாக, தருமை ஆதீனம் கட்டளை விசாரணை, வித்துவான். ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத்தம்பிரான் சுவாமிகள் அவர்களும் மிகப்பெரும் பங்கு பற்றினர். அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றி.

சிவநேயச்செல்வர்கள் இந்நூலைப் பெற்று முறைப்படி வழிபாடு செய்து இருமையிலும் எல்லா நல்லின்பங்களும் எய்துவார்களாக.

மகா வித்துவான்
**ச. தண்டபாணி தேசிகர்**
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

மாயூரம்
1—6—72



ஸ்ரீ சனீஸ்வர பகவான்



நளதீர்த்தம்

உ
சிவமயம்

# திருநள்ளாற்றுத் தல வரலாறு

திருச்சிற்றம்பலம்

உறவனாய் நிறைந் துள்ளங் குளிர்ப்பவன்
இறைவ னாகிநின் றெண்ணிறைந் தானவன்
நறவ நாறும் பொழிற்றிரு நள்ளாறன்
மறவன் ஆய்ப்பன்றிப் பின்சென்ற மாயமே.

— அப்பர் சுவாமிகள்

உலகம் ஐம்பெரும் பூதங்களின் சேர்க்கை. ஐம்பூதங்களின் சிறப்பான தன்மைகள் அனைத்திலும் இறைவன் கலந்திருக்கிறார். கலந்து நின்று அவற்றை இயக்குகின்றார். உலகம் காரியப்படுகின்றது. இவ்வண்ணம் இறைவன் உள்ளும் புறம்பும் கலந்தும் கடந்தும் இருக்கின்ற உண்மையை உள்ளவாறு உணர்கின்றவர்கள் உண்மை ஞானிகளே. 'ஞானத்தால் அறிவார் சில ஞானிகள்' என்பது அப்பர் சுவாமிகள் திருவாக்கு. ஞானிகள் இறைவனை ஞான சொரூபியாய் அறிகின்றார்கள் என்பது அதன் கருத்து.

ஞானிகள் அல்லாத உலகவர்களும் ஓரளவாவது கடவுள் உண்மையை உணர்ந்தாலல்லாது உலகத்தில் கட்டுப்பாடு, புண்ணியம், கடமை, நல்லொழுக்கம் முதலியன நிலை பெறமாட்டா. மனிதன் அயலானைப் பிடுங்கித் தின்ன அஞ்சுவதற்கெல்லாம் காரணம் 'எங்கும் உளனொருவன் காணுங்கொல்' என்று அஞ்சி அங்கம் குலைவதுதான்.

இவ்வண்ணம் மனித சமுதாயத்தை அச்சத்தாலும் அன்பாலும் கட்டுப்படுத்தி, ஒழுங்கின்கண்ணே நிலை பெறுத்துபவர் கடவுள். கடவுள் உணர்ச்சி இல்லாதவனுக்கு ஒழுங்குள்ளம் இல்லை.

அவர் வழிபடும் மக்களுடைய மனப்பண்புகளுக் கேற்ப பல பல உருவங்களும் பல பல நிறங்களும் தாங்கி, பல பல இடங்களிலிருந்து அருள் செய்கின்றார். அத்தனை வடிவங்களும் இறைவனே தமது திருவுள்ளக் கருத்தின் படி படைத்துக் கொண்டவை. இதற்கெல்லாம் அடிப்படைக் காரணம் உயிர்களாகிய நம்மீது வைத்த காரணமில்லாத கருணையேயாம்.

அங்ஙனம் அவர் கொண்ட திருவுருவங்கள் அருவம், உருவம், அருவுருவம் என முத்திறப்படும். எல்லாவற்றையும் எளிதில் இருந்த நிலையிலேயே உணரும் உண்மை ஞானிக்கு அருள் செய்ய இறைவன் ஞானமே வடிவாக அருவத் திருமேனியைத் தாங்குவர்.

புணையைப் பிடித்துக் கரையேறுபவன் போலவும், புத்தகத்தைக் கொண்டு அறிவை அடைபவன் போலவும், ஏதாவது ஒரு சாதனத்தைக் கொண்டு அருள்பெற விரும்புகின்றவர்களுக்காக இறைவன் வடிவமும் வடிவ மில்லாமையும் ஆகிய இரண்டும் கலந்த—அதாவது அடையாளமாக மட்டும் உதவக்கூடிய ஒரு திருமேனியைத் தாங்கி கோயிலில் சிவலிங்கமாக வீற்றிருப்பர். லிங்கம் அடையாளம். சிவலிங்கம் சிவபெருமானுடைய விளக்கத்தை அறிவிக்கும் அடையாளம். இதனையே அப்பர் சுவாமிகள் "குறிகளும் அடையாளமும் கோயிலும் என்பார்கள்" உறுப்புகளோடு கூடி நன்றாக விளங்காத ஏதோ ஒரு வகையான சக்தி பீடமும் பாணமாகிய குழவியும் கூடிய வடிவமிது. இது உருவும் அருவும் கலந்த ஒன்றாதலின் அருவுருவம் எனப்படும்.

உருவத்தையே ஞானமாகக் கொள்பவர் தொடக்கநிலை ஞானிகள். இறைவன் அவர்களுக்காக கண், காது, மூக்கு, நாக்கு முதலான உறுப்புக்களோடு அவரவர்களுடைய மல பரிபாக நிலைகளுக்கு ஏற்ப வீரனாக, வேந்தனாக, குழந்தை குட்டிகளோடு கூடிய சோமாஸ்கந்தராக, பிட்சாடனாக காட்சி அளிப்பார். இங்ஙனம் தோன்றிய வடிவங்களே சபாபதி முதலான 25 மாகேஸ்வர முகூர்த்தங்கள்.

இவ்வண்ணம் மக்களுடைய கருமேனி கழிக்க இறைவன் உருமேனி தாங்கி இடம் இடந்தோறும் எழுந்தருளியிருக்கின்றான். அப்படி எழுந்தருளியுள்ள இடங்களே தலங்கள்.

தலங்கள் கடவுளின் கருணையை வெளிப்படுத்தும் இடங்கள். பசுவின் உடல் முழுவதும் பால் பரவியிருந்தாலும் மடிக்காம்பின் வழியாகத்தான் நாம் அதை அடைய முடிகிறது. அதுபோல பரசிவம் எங்கும் எல்லாவற்றிலும் என்றும் கலந்திருந்தாலும் அவரைத் தலங்களிலும் திருக்கோயில்களிலும் சிவலிங்கத் திருமேனிகளிலுந்தான் காணக் கூடும். ஆகவே உலகம் பசு; கோயில் பசுவின் மடி; சிவத்திருமேனிகள் மடிக்காம்புகள்; சிவகருணை பால்; எனக் கருதலாமல்லவா? சிவ கருணையைப் பெற விரும்புகிற நாம் தலம், மூர்த்தி, தீர்த்தங்களை முறைப்படி தொழுதல் வேண்டும்.

தலங்களோ எண்ணிறந்தவை. அவற்றுள் சிலவற்றைத் தேர்ந்து சிவ முத்திரையிட்டு தமிழுலகம் உய்யுமாறு சமயாசாரியர்களால் அருளிச் செய்யப்பட்டவைகளே மிகச் சிறந்தவை. அவற்றுள் அவர்கள் அற்புதங்கள் பலவற்றை நிகழ்த்திய தலங்களே மிக மிகச் சிறந்தவை. அவற்றுள் சைவ சமயத்தின் பெருமையை அனல் வாதத்திலே பாண்டிநாட்டுத் தலைநகரிலே நிலை நாட்டிய 'பச்சைப்பதிக' மெனப்படும் போகமார்த்த பூண்முலையாள் என்ற பதிகம் பெற்ற திருநள்ளாறு மிக மிகச் சிறந்தது.

இத்தலம் சிவம் பெருக்கும் காவிரித் தாய் அரிசில், திருமலைராயன், குடமுருட்டி முதலான பல மக்களைப்பெற்று அனுப்பி நாட்டை வளம்பெறச் செய்யும் சோழநாட்டிலே காவிரித் தென்கரைத் தலங்களில் ஒன்றாக விளங்குவது. பேரளம் காரைக்கால் புகைவண்டிப் பாதையில் உள்ள திருநள்ளாறு நிலையத்திலிருந்து புறப்பட்டால் 2 பர்லாங் தூரத்தில் உள்ளது.

பேரளம் — காரைக்கால்; காரைக்கால்—கும்பகோணம்; காரைக்கால் — அம்பர் முதலான இடங்களிலிருந்து வர பஸ் வசதிகள் உள்ளன. மாயூரத்திலிருந்தும், கும்ப

கோணத்திலிருந்தும், நாகைப்பட்டினத்திலிருந்தும் பஸ் மூலமாக இத் தலத்தை அடையலாம்,

நாலாபக்கங்களிலும் பஸ் போக்குவரத்துக்குரிய நல்ல தார் பூசிய கற்சாலைகள் உள்ளன. பேருந்துகள் ஓடிக் கொண்டிருப்பதால் இத்தலத்தை வருத்தமின்றி எளிதில் எய்தலாம்.

## தல அமைப்பு

இத்தலம், நாற்புறமும் விளை வயலும் ஆறு குளங்களும், வாய்க்கால்களும் சூழ்ந்த அழகான இடம். நகரின் நடுவிலே கோயில் அமைந்திருக்கிறது. அதைச்சுற்றி நான்கு பக்கமும் தேரோடும் வீதிகள் உள்ளன. சந்நிதி கிழக்குப் பார்த்தது. சந்நிதியில் ஒரு விநாயகர் ஆலயம் உள்ளது. வீதியின் நான்கு மூலைகளிலும் தனித்தனியே விநாயகர் கோயில்கள் உள்ளன.

நாலு வீதிகளைத் தவிர திருநள்ளாறு புகைவண்டி நிலயத்திற்குச் செல்லும் தெரு ஒன்று உண்டு. அது ரயிலடித் தெரு என வழங்குகிறது. ஊரின் வடகிழக்குப் பகுதியில் வெள்ளாழத்தெரு என்ற ஒன்றும் உண்டு. ஆகவே வீதியோடு இரண்டொரு தெருக்களும், அவற்றில் சுமார் 500 வீடுகளும், 2000 மக்கள் தொகையும் உடைய அடக்கமான சிறிய ஊர்.

இங்குள்ள மக்களின் பெரும்பாலான தொழில் விவசாயம். இங்குப் பொதுச்சுகாதாரம் முதலியவற்றைக் கவனிக்க நகரசபை அலுவலகமான மேரி ஆபீசும் ஊர்காவல் நிலையமும் உள்ளன. ஊருக்கு வடமேற்குப் பக்கத்தில் சுமார் மூன்று பர்லாங்கு தூரத்தில் அரசாங்க மருத்துவ மனையும், அதற்கு அண்மையில் அரசாங்க உயர் நிலைப் பள்ளியும் உள்ளன. ஊருக்குள் தொடக்கப் பள்ளிகளும் உள்ளன. அஞ்சல் நிலையமும் உள்ளது.

தேவஸ்தான நிர்வாகத்தில் ஓர் அநாதை ஆச்சிரமம் நடைபெறுகிறது. அதில் முப்பத்தைந்து அநாதைக் குழந்தைகள்

எல்லா வசதிகளையும் பெற்றுத் திருநள்ளாற்றுப் பெருமான் அருளால் வளர்ந்து வருகிறார்கள். பசுமடம் ஒன்றுள்ளது. அதில் இப்போது முப்பது பசுக்கள் பராமரிக்கப் பெறுகின்றன. அவற்றின் பால் திருக்கோயில் அபிஷேகத்திற்கு முற்றும் பயன்படுகிறது.

பொருளாதார வசதிக்காக, விவசாயக் கூட்டுறவு வங்கியும், நெல் கொள்முதல் கூட்டுறவுச் சங்கமும் உள்ளன.

ஊருக்கு வடகிழக்கு மூலையில் காரைக்கால் செல்லும் கற்சாலைக்கருகில் சுமார் 300 அடிக்குள் சிறந்த மாரியம்மன் கோயில் ஒன்றுள்ளது. இப்பக்கத்தில் சிறந்த கண்கண்ட தெய்வமாக—பிரார்த்தனைத் தெய்வமாக மக்களால் பயபக்தியுடன் போற்றப்பெறுவது.

மாரியம்மன் கோயிலுக்குக் கிழக்கே சுமார் ஒருகல் தொலைவில் வழிக்கரை அம்மன் கோயில் ஒன்று உள்ளது. அம்மன் சந்நிதி வடக்கு நோக்கியது. இதுவும் சிறந்த நேர்த்தித் தலம். எந்தக் காரியத்தை நினைத்துப் பிரார்த்தனை செய்து கொண்டாலும் அது உறுதியாக நிறைவேறும் என்ற நம்பிக்கை மக்களுக்கு உண்டு.

இத்தலத்திலிருந்து நேர் வடக்கே ரயிலடித் தெருவைச் சாரக் கிராம தேவதையாகிய பிடாரியார் கோயில் இருக்கிறது. ஊருக்கு மேற்கே சுமார் 3 பர்லாங் தூரத்தில் ஐயனார் கோயில் உள்ளது. நள தீர்த்தக் கரையில் கலிதீர்த்த விநாயகராலயம் உள்ளது. இது இத்தல வரலாற்றோடு மிகத் தொடர்புடையது. திருப்பணி செய்விக்கப்பெற்றுத் திருத்தமாக விளங்குகிறது

சந்நிதியில் பிரமதீர்த்தமும், அம்பாள் சந்நிதிக்கு எதிரில் சரஸ்வதி தீர்த்தமும், அகத்திய தீர்த்தம், அம்ச தீர்த்தம் என வழங்கும் பொய்யாக் குளமும், மாரியம்மன் கோயில் குளமும், சம்பந்தர் ஓடை, வாணியன் குளம் முதலியனவும் உள்ளன, இவை இத்தலத்தைச் சூழ்ந்துள்ள நீர் நிலைகள்.

இவ்வண்ணம் அழகான சூழலின் நடுவே அமைந் திருக்கிறது இத்தலம்.

**பயணிகள் தங்க வசதிகள் :—**

பயணிகள் தங்க எல்லா வசதிகளுடனும் கூடிய தேவஸ்தான விடுதி ஒன்றுண்டு. அது வாடகைக்கு விடப் படுகிறது. தனியார்க்குச் சொந்தமான விடுதிகள் சிலவும் உள்ளன. விடுதிகள் அனைத்தும் தக்க பாதுகாப்பு உடையவை. திருக்கோயிலைச் சார்ந்த பயணிகள் மாளிகை மிகச் சிறந்தது. இது கீழைச் சந்நிதியில் உள்ளது. பஸ் நிலயத்திற்கு மிக அருகாமையிலும் தண்ணீர் வசதிகளுட னும் கூடியது.

உணவுச் சாலைகளும் பல உள்ளன. கோவிலில் ஏழைப் பயணிகளுக்குப் பகலில் உச்சிக் காலத்தில் சிலபேருக்கு உணவு அளிக்கப்பெறுகின்றது. சனிக்கிழமைகளில் பல பேருக்கு எள்ளன்னம் வழங்கப்பெறுகிறது.

அரசாங்க நிலயங்கள் :— திருநள்ளாறு ஒரு 'கொம்யூன்' ஆதலால், நகராட்சி அலுவலகமும், ஊர்காவல் அலுவலக மும், தந்தி வசதியோடு கூடிய அஞ்சல் அலுவலகமும், மருத் துவமனை தாய்சேய் நலவிடுதி முதலிய சுகாதார நிலயங் களும் உள்ளன.

நீர் வசதி :— இத்தலத்தின் வடக்கே நூலாறும் வாஞ்சியாறும், தெற்கே அரிசிலாறும் அதிலிருந்து பிரிந்த பல கால்வாய்களும் ஓடுவதால் நீர் வசதிக்கு என்றுமே குறைவில்லை. அல்லாமலும் அங்கங்கே பல குளங்கள் உள்ளன. குட்டைகளும் சாலையோர நீர்த்தேக்கங்களும் பல.

சிறப்பாகப் புதுவை அரசாங்கம் குடிதண்ணீர் வசதிக் காகப் பல குடிதண்ணீர்க் குழாய்களை அமைத்துள்ளது. சுகாதார நலன்குறையாத குடிதண்ணீருக்குக் குறைவே யில்லை,

**தனித்த வரலாற்றுப் பெருமை:**

வேறு எந்தத் தலங்களுக்கும் கிடைக்கப் பெறாத தனித்த தோர் பெருமை இத்தலத்திற்கு உண்டு. அதுதான் பச்சைப் பதிகம் பெற்றது. பச்சைப் பதிகமா? அது என்ன? என்று கேட்கத் தோன்றுகிறதல்லவா?

கி. பி. 7-ஆம் நூற்றாண்டில் நின்ற சீர்நெடுமாறன் என்னும் முற்காலப் பாண்டிய மன்னன் மதுரையைத் தலைநகராகக் கொண்டு பாண்டியநாட்டை ஆண்டுவந்தான். அப்போது மக்கள் அனைவரும் சமண சமயத்தைத் தழுவி இருந்தனர். 'குடிகள் எவ்வழி அவ்வழி அரசன்' என்ற நிலையில் அரசனும் சமணன் ஆயினன். அவ்வளவு பெரிய நாட்டிலே மன்னன் மனைவியாகிய மங்கையர்க்கரசியாரும், மந்திரியாகிய குலச்சிறை நாயனாரும் மட்டும் சைவர்களாக இருந்தனர். திருஞான சம்பந்தப் பெருமானுடைய அருட் செயல்களையும் அற்புதச் செயல்களையும் பற்றிக் கேள்வியுற்றிருந்தனர். அவர்களை இங்கு ஒருமுறை அழைப்போம்; தெய்வீகத் திருவருள் பெற்றுவது இருள்சூழ்ந்த நம் பாண்டிய நாடு ஞான நல்லொளி பெற்று உய்யாதா என எண்ணினர். ஞானசம்பந்தப் பெருமானை அழைத்து வந்தனர். அவர் வருகையை யறிந்த அமணர் உள்ளம் அஞ்சி நடுங்கியது. அவருக்குள்ள அருள் விளக்கத்தைக் கண்டு அஞ்சினர். அச்சம் பொறாமையாயிற்று. பொறாமை வஞ்சனைக்கும் சூழ்ச்சிக்கும் வழி செய்தது. பெருமான் எழுந்தருளியிருந்த திருமடத்திற்குத் தீயிட்டனர். ஞானசம்பந்தப் பெருமான் அரசு திருந்தினால் நாடு திருந்தும் எனத் திருவுள்ளம் கொண்டு அவனைத் திருத்த "பையவே சென்று பாண்டியற்கு ஆகவே" எனத் திருவருளை ஏவினார். பாண்டியனை வெப்பு நோய் பற்றியது. அரசன் கிடந்து துடிக்கிறான். இந்நிலையைக் கண்ட அமணர்களும், அரனடியார்களும் அரசனுடைய வெப்பு நோயைப் போக்குபவர் சமயமே உண்மைச் சமயம் என முடிவு செய்து வெப்பு நோயைப் போக்கத் தொடங்கினர். ஞானசம்பந்தப்பெருமான் அரசனுடைய வலப் பக்கத்தில் இருந்து 'மந்திரமாவது நீறு' என்னும் திருநீற்றுப் பதிகத்தை ஓதித் திருநீற்றைப் பூச, நோய் நீங்கியது; சமணர்கள் தம் அருகமந்திரத்தைச் சொல்லி மயிற்

பீலியால் இடப் பக்கத்தைத் தடவினர். நோய் முன்னிலும் மிகுந்து வருத்திற்று. அரசனும், அமைச்சரும் அது கண்டு இடப்பக்கத்து நோயையும் பெருமானே போக்கியருளவேண்டும் என வேண்டினர். அரசன் விருப்பின் படி திருநீற்றைத் திருக்கரத்தில் எடுத்துத் திருநீற்றுப் பதிகத்தை ஓதிப் பூசினர். அக்கணமே அந்நோய் அகன்றது. அரசன் சுரநோய் மட்டுமன்றிக் கூனல் நோயும் நீங்கப்பெற்று எழுந்தான். அமணர்கள் தோல்வியுற்றனர். பின்னும் வாதுக்கழைத்தனர். தங்கள் மந்திரங்களை ஏட்டில் எழுதித் தீயில் இடுவது என்றும், எவர் மந்திரம் எழுதிய ஏடு தீயில் வேகாதிருக்கிறதோ அவர் மந்திரமும், அம் மந்திரப் பொருளாகிய கடவுளும் அச்சமயமுமே உயர்ந்தன என்று தம்முள் ஒத்துக்கொள்வது என்றும் முடிவு செய்தனர். அப்படியே தீயை வளர்த்து தம் மந்திரத்தை எழுதி அமணர்கள் தீயிலிட்டனர் அவ்வேடு உடனே கருகி எரிந்து சாம்பலாயிற்று. திருஞானசம்பந்தப்பெருமான் திருவருள் காட்டிய வழியிலே தாம் முன் பல தலங்களி லும் பாடிய திருமுறை ஏட்டைக் கொணரச் செய்து அதைத் தம் திருக்கரங்களால் பிரித்துப் பார்த்தனர். "போகமார்த்த பூண்முலையாள்" என்னும் இத்தலத்துப் திருப்பதிகம் உதயமாயிற்று. பெருமான் அவ்வேட்டை உருவித் தீயி லிட்டனர். அவ் ஏடு எரியாது பச்சையாயிருந்தது; சைவ சமயத்தைக் காப்பாற்றியது: சிவபெருமானே தனி முழு முதல் என்பதைத் தெளிவித்தது. இங்ஙனம் சைவங் காத்த பெருமையாகிய பச்சைப் பதிகத்தைப் பெற்றதலம் என்பதொன்றே இத்தலத்திற்கு உள்ள தனிப் பெருமை.

**தலப் பெயர்கள் :**

இத்தலம் இன்று திருநள்ளாறு என்று வழங்கப் பெறுகின்றது. நள் ஆறு என்றால் ஆறுகளின் நடுவில் உள்ளது என்பது பொருள். நடு இரவை நள்ளிரவு எனவும், நடுப்பகலை நண்பகல் எனவும் வழங்குகிறோம் அல்லவா ? அதுபோல, இத்தலத்தின் தெற்கிலும், வடக்கி லும் இரண்டு ஆறுகள் ஓட இடைநடுவே இத்தலம் இருப்பதால் இந்தப் பெயர் வந்தது. சிலர், நளன் + ஆறு நள்ளாறு ஆயிற்று என்பர். இப்பெயரே திருமுறைகளிலும் குறிக்கப்படுவதால் கி. பி. 7-ஆம் நூற்றாண்டிலும் இப்பெயர்

வழங்கி வருவதை அறியலாம். கல்வெட்டுக்களிலும் இப் பெயரே குறிக்கப் பெற்றுள்ளது.

புராணங்களில், பிரமதேவர் பூசித்த தலமாதலால் ஆதிபுரி எனவும், தருப்பைக் காடாக இருந்தமையால் 'தர்ப்பாரண்யம்' எனவும், நகவிடங்கராகிய தியாகேசப் பெருமான் எழுந்தருளியிருப்பதால் 'நகவிடங்கபுரம்,' எனவும், நள மகாராசன் வழிபட்டுக் கலி நீங்கி மீண்டும் அரசு பெற்றமையால் 'நளேச்சுரம்' எனவும் அழைக்கப்பெறு கின்றது.

## தலப் பெருமை :

ஒரு தலத்திற்குப் பெருமை மூர்த்தி, தலம், தீர்த்தம், வரலாறு என்ற நான்கானும் அமைவது. இத்தலத்தில் உள்ள மூர்த்திகளுள் நக விடங்கப் பெருமானும், போக மார்த்த பூண்முலையம்மையும் தர்ப்பாரண்யராகிய நள்ளா றுடைய நாதரும், சனிபகவானும் இக் கலியுகத்திலும் கருத்தறிந்து முடிக்கும் கண்கண்ட தெய்வங்கள். அதனாலே ஒவ்வொரு நாளும் ஆயிரக்கணக்கான மக்கள் வந்து வழி பட்டு அருள் பெற்றுச் செல்கின்றனர். இதனாலே மூர்த்தி யின் பெருமை நன்கு விளங்கும்.

தலமோ ஒரு நாள் இறையுணர்ச்சியோடும்—விரத நியமங்களோடும் தங்கினாலும் போக மோட்சங்களை அளிக்க வல்லது. இதனை அப்பர் சுவாமிகள் 'நள்ளாறு என நம்வினை நாசமே' என அருளுவதாலும் அறியலாம்.

நளன் நீராடிக் கலி நீங்கப் பெற்ற நள தீர்த்தமும், பிரமன், இந்திரன், தூயகண்ட வன்மன், அக்னி வண்ணன் முதலானோர் நீராடிப் பழிபாவங்கள், நோய் இவை நீங்கிய தீர்த்தங்களும் உள்ளன. இதனாலும் தலப் பெருமை தனிச் சிறப்புடையது.

## திருக்கோயில் அமைப்பு :—

திருக்கோயில் இத்தலத்தின் இதயமாக நடுவில் அமைந் திருக்கிறது. திருக்கோயிலைச் சுற்றிலும் ஒருகாலத்து அகழ் அமைந்திருக்கவேண்டும். இன்று நள்ளாற்றுப் பெருமான்

சந்நிதியிலும், கோயிலின் மேற்குப் பக்கத்தும் அகழ் தூர்ந்து நிலப்பரப்பாக இருக்கிறது. அகழின் உட்பக்கத்தில் நாற்புறமும் உயர்ந்த மதில்கள் உள்ளன.

கோயிலின் திருமுற்றவெளி மிகப் பெரியது. அகல மானது. முற்ற வெளியை அடுத்திருப்பது இடப வாயில். முற்ற வெளிக்கு வடபக்கத்தில் திருக்கோயில் அலுவலகம் உள்ளது. அதனையடுத்து வாகன மண்டபமும், அதனையடுத் துப் பசு மடமும் உள்ளன. அலுவலகத்திற்கு எதிரில், சந்நிதியின் வலக்கைப் புறத்தில் இடையனார்கோயில் உள் ளது. இதில் இடையன், கணக்கன் உருவங்கள் உள்ளன. தியாகப்பெருமான் இவர்கள் இருவருக்கும் காட்சி வழங்கிய தாக வரலாறு. இதற்குப் பின்புறம் உள்ள வெளிச்சுற்றுலே யில் கல்யாண மண்டபம் கட்ட அடிக்கல் நாட்டப் பெற்றுள் ளது. இந்தப் பிராகாரத்தின் மேலக் கோடியிலும் பசுமடம் ஒன்றுள்ளது.

முற்ற வெளியை அடுத்து உள்ளது இராஜகோபுரம். இது ஐந்துநிலை மாடங்களை யுடையது. அழகான சுதைச் சிற்பங்களோடு கூடியது. இதனைக் கடந்து உள்ளே சென்றால் இரண்டாவது சுற்றுலை தொடங்குகிறது. இச் சுற்றுலையின் தெற்குப் பகுதியிலும், வடக்குப் பகுதி யிலும் சிறிய நந்தவனங்கள் உள்ளன. இச்சுற்றின் வடமேற்குக் கோடியில் தெற்குப் பார்க்கத் தியாகேசப் பெருமான் வசந்த விழாக் கொண்டருளும் வசந்த மண்டபம் உள்ளது. தென்கிழக்கு மூலையில் மடைப்பள்ளி உள் ளது. இதன் வட கீழ்க்கோடியில் ஸ்ரீ காளத்திநாதர் கோயிலும், அதன் பின்புறம் யாகசாலையும் உள்ளன. இவ்வளவையும் கண்டு, இதனை வலமாகக் கீழ்புறம் சந்நிதிக்கு வந்தால், உட்கோபுரமாகிய கட்டைக் கோபுரத்தை யடையலாம். கோபுர வாயிலின் தென்பால் கற்பக விநாயகரை வழிபடலாம்.

இதன் உள்ளே நுழைந்ததும் உட்பிராகாரமாகிய மூன்றும் பிராகாரத்தை யடையலாம். இதில் வலம் வந்தால் கட்டைக் கோபுரத்தின் தென்பாலுள்ள திருமாளிகைப்பத்தி மண்டபத்தில் முதலிற் காட்சி வழங்குபவர் தம்பிரான்

தோழராகிய சுந்தரமூர்த்தி சுவாமிகள். இவர் எழுந்தருளுந் திருமேனியாக நகவிடங்கப் பெருமானை வணங்கிய வண்ணம் மேற்கு நோக்கிய நிலையில் இருப்பார்.

அடுத்துத் தெற்குத் திருமாளிகைப் பத்தியின் தொடக்கத்தில் சமயாசாரியர் நால்வர் திருவுருவங்களும் உள்ளன. அதனையடுத்து விநாயகர், தர்ப்பாரண்யச் சிவலிங்கம் நந்தி இவ்வுருவங்கள் உள்ளன. அவற்றை யடுத்து அறுபத்து மூவர் திருவுருவங்கள் உள்ளன. அறுபத்துமூவர் வரிசையில் தர்ப்பாரண்யர் எழுந்தருளியிருப்பது அறுபத்து மூவரும் நள்ளாறனையே அனவரதமும் கண்டிருப்பதாக ஐதீகம் எனக் கூறப்படுகின்றது. அறுபத்து மூவர்க்கும் கடைசியில் தனித்த சிறிய மண்டபம் ஒன்றில் கலிநீங்கிய நளனும், சிவலிங்கத் திருமேனியும் இருக்கின்றன. நளன் இத்தலத்திற்குத் தனிச் சிறப்புடையவன். ஆதலால் அடியார்கள் வரிசையில் இடம் பெற்றனன். அறுபத்து மூவருக்கு எதிரில் தியாகராசர் கோயிலின் தென்பால் தென்னந் திருவாசலும், அதனையடுத்து தட்சிணமூர்த்தி சந்நிதியும் உள்ளன.

மேற்குத் திருமாளிகைப் பத்தியின் தென்மேற்குக் கோடியில், அதாவது கோயிலின் கன்னி மூலையில் ஸ்தல விநாயகர் இருக்கிறார். அவருக்குச் சொர்ண விநாயகர் என்று திருநாமம்.

மேற்கு திருமாளிகைப் பத்தியில் விநாயகரை அடுத்து சோமாஸ்கந்தர் அம்மை இவர்கள் திருஉருவங்கள் கருங்கற் சிற்பமாக மிக அழகாக அமைந்துள்ளன. சோமாஸ்கந்தரின் எதிரில் முனிவரைப் போன்று மூன்று உருவங்கள் உள்ளன. அவற்றில் ஒன்று அறையில் உடைவாளோடு இருப்பதால், சோழமன்னரின் உருவமாகலாமோ என்று சந்தேகிக்கப்படுகிறது. சிதம்பரத்தில் நிருத்த சபையின் வாயிலில் உள்ள ராஜராஜன் திருஉருவம் போல இது இருத்தல் எண்ணி ஆராய்தற்குரியது.

சோமாஸ்கந்தரை அடுத்து சப்தவிடங்க ஸ்தலங்களில் உள்ள விடங்கலிங்கங்கள் இடம் பெற்று உள்ளன.

அடுத்து அம்மண்டபத்திலேயே நின்ற திருக்கோலத்தில் திருமால் திரு உருவம் உள்ளது. அதனைச் சார்ந்த பைரவர் திருக்கோலங்கள் மூன்று உள்ளன.

அடுத்து வள்ளி தேவசேனை சமேத சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் தனி ஆலயமாக திருமாளபத்தி மண்டபத்தில் அமைக்கப்பட்டுள்ளது. அங்கேயே வடமேற்குக் கோடியில் திருமகள் சுதை வடிவிலும், சிலைவடிவிலும் காட்சி வழங்குகிறார்.

வடக்கு திருமாளிகைப்பத்தியின் வடமேற்குக் கோடியில் தியாகராஜப் பெருமான் எண்ணெய்க்காப்புக் கொண்டருளும் எண்ணெய்க் காப்புமண்டபம் இருக்கிறது. இதன் தூண்கள் பல்லவர்காலச் சிற்பத்திறமும் அழகும் செறிந்தவை. அம் மண்டபத்திற்கு கீழ்பால் திருமாளிகைப்பத்தியும் அதன் கீழ்கோடியில் க்ஷேத்திரபாலர் ஆகிய பைரவர் ஆலயமும் இருக்கிறது. கோவில் அர்த்தசாமம் ஆனதும் இவரையும் வழிபட்டு ஆலயப் பாதுகாப்புப் பணியை அவர் கையில் ஒப்புவித்துச் செல்லுவது வழக்கமாம். வடகீழ்க் கோடியில் ஈசானமூலையில் சபாநாயகராகிய நடராஜப் பெருமான் சிவகாமி அம்மையாரோடு எழுந்தருளியிருக்கிறார். வடபக்கத்து கிழக்குத் திருமாளிகைப்பத்தியில் சூரியன் இருக்கிறார். அன்றாடம் சூரியபூசையை முடித்துக்கொண்டு தான் திருக்கோயில் திருப்பள்ளி எழுச்சி முதலிய நாட்கால பூசையைத் தொடங்குவது வழக்கம். முறையான இவை அனைத்தையும் வணங்கிக்கொண்டு இரண்டாம் கோபுரத்தின் உள்புறத்தில் உள்ள சந்நிதியை அடைந்தால் கொடிமரம் காணப்படும். கொடிமரத்தையும் கடந்து தியாகேசப் பெருமான் சந்நிதி மண்டபத்தில் ஏறி பக்கவாயில் வழியாக நள்ளாறன் திருஅணுக்கன் திருவாயிலை அணுகவேண்டும். நள்ளாறர் திருமுன்பு மகாமண்டபத்தில் நந்தி பல்லவகால சிற்பமாக அமைந்து இருப்பதும் சந்நிதியில் துவாரபாலகர் இருவரும் இரண்டு கைகளைமட்டும் உடையவராக காலை தூக்கி கதைமேல் சுற்றிவைத்துக்கொண்டு ஒரு கையில் அதட்டுகின்ற முத்திரை தோன்ற அமைந்து இருப்பதும் பல்லவர்காலப் பணி என்பதனைக் காட்டுகிறது. இவற்றைக் கண்டு பெருமானை வணங்கிக்கொண்டு தெற்குபக்க வாயிலின் வழியாகவே தியாகராஜப் பெருமான் சந்நிதியை

அடைய வேண்டும். வரும் வழியில் நள்ளாறன் கர்பக்கிரு கத்துச் சுவரில் அர்த்தநாரீஸ்வரர் சுதைச் சிற்பம் ஒன்று தெற்கு நோக்கி இருக்கிறது. அதனையும் கண்டு தியாகேசப் பெருமான் சந்நிதியில் வணங்குதல் முறை. அச்சந்நிதியில் இத்தலத்திற்குச் சிறப்பான மரகத விடங்கர் பெட்டகத்தில் எழுந்தருளியிருக்கிறார். சாதி பச்சை ரத்தினத்திலான சிவலிங்கத் திருமேனி இது. இதற்கு காலசந்தி, உச்சிக்காலம், சாயரக்ஷை, இரண்டாங்காலம் ஆகிய நாங்கு காலங்களிலும் அபிஷேகம் நடைபெறும். தீபாராதனை நடக்கும்போது ஒளி வடிவான இறைவனை தரிசித்தல் மிக வியப்பான நிகழ்ச்சி களில் ஒன்று. தியாகராஜப்பெருமானின் மகா மண்டபத்தின் மேற்றலத்தில் புராண வரலாற்றுத் தொடர்பான பல வண்ண ஓவியங்கள் தீட்டப்பெற்றுள்ளன.

திருநள்ளாற்றுப் பெருமான் சந்நிதியில் பலிபீடம் சிறிது விலகி இருப்பது பழமையான செவிவழிச் செய்தி ஒன்றை விளக்குவது.

முன்னொரு காலத்தில் இடையன் ஒருவன் அரசன் ஆணையின் வண்ணம் கோயிலுக்குப் பால் அளந்து வந்தான். அக்காலத்தில் இருந்த கணக்கன் கோயிலுக்கு அளக்க வேண்டிய பாலைத் தன் வீட்டில் அளக்கும்படியும் கோயில் கணக்கில் பதிய வைக்கும்படியும் வற்புறுத்தினான். இடையன் மறுக்க, அதனை அரசற்குத் தெரிவித்துத் தண்டனை வாங்கிக் கொடுப்பதாக அச்சுறுத்தினான். இடையன் நள் ளாற்றுப் பெருமானிடம் விண்ணப்பித்துக் கொண்டான். பெருமான் பொய்க் கணக்கு எழுதிய கணக்கன் தலை யைக் கொய்ய தன் கைச் சூலத்தை ஏவினார். சூலத் திற்கு வழிமறையாக இருக்கக் கூடாது என்ற எண்ணத் தால் பலிபீடம் மண்டபத்தின் பக்கமாக விலகியது. ஆகையால் இன்றும் பலிபீடம் விலகியிருப்பது குறிப் பிடத் தக்கது. கர்ப்பக் கிருகத்தின் வடபக்கச் சுவரில் கோமுகிக்குக் கீழ்பால் உள்ள துர்க்கை மிகச் சிறந்த கருணைத் தெய்வம். வெள்ளி செவ்வாய்க் கிழமைகளி லும் நவராத்திரி, பௌர்ணமி தினங்களிலும் சிறப்பு வழிபாடுகள் உண்டு. துர்க்கைக்கு அருகில் பிக்ஷாடனர் திரு வுருவம் உள்ளது. இவ்வுண்ணம் பெருமானை வழிபட்டு மூன்று

முறையாக வலம்வந்து சுவாமிக்கு வடபால் உள்ள சண்டே சரை வணங்கி வெளியே வந்தால் சுவாமி சந்நிதிக்கு வலப்பக் கத்தில் இத்தலத்திற்குச் சிறப்பான சனீஸ்வர பகவான் கட்டைக் கோபுரச் சுவரில் உள்ள சிறிய மாடத்தில் எழுந்தருளி யிருக்கின்றார். அவருடைய சந்நிதி மிகச் சிறப்பானது. மகிமை வாய்ந்தது. எப்போதும் மக்கள் கூட்டமும், வழி பாடும் தில தீபங்களும் விளங்கும். சனி பகவான், இத் தலத்தில் அனுக்கிரகமூர்த்தியாக இருப்பது சிறப்பு. அவரை வணங்கிக் கொண்டு அம்பிகையின் சந்நிதியை அடைய வேண்டும். அம்மை அருளே வடிவாய்க் கண் கண்ட தெய்வமாக விளங்குகின்றார். அவர் சந்நிதி தெற்குப் பார்த்தது. இதுவே இக்கோயிலை வழிபாடு செய்யும் முறை. இதனை இவ்வளவில் சிந்தித்து இத்தலத்தின் பிற சிறப்புகளைப் பற்றிச் சிறிது சிந்திப்போம்.

**தீர்த்தங்கள் :**

இத்தலத்தில், திக்குப்பாலகர்கள் எட்டுபேர்களாலும் அமைக்கப்பெற்ற எட்டு தீர்த்தங்கள் உள்ளன. சந்நிதிக்கு எதிரே பிரம தீர்த்தமும், அம்மன் சந்நிதிக்கு எதிரே வாணி தீர்த்தமும், கோயிலின் வடதிக்கில் அன்ன தீர்த்தமும், அகத்தியர் தீர்த்தமும், வடமேற்கில் நள தீர்த்தமும், அதற் குப் பக்கத்தில் நளகூபமும் உள்ளன. இவற்றின் பெரு மையும் பயனும் புராண வரலாறுகள் என்ற பகுதியில் நன்குணர்த்தப்படும்.

**சம்பந்தரோடை :**

இது கோயிலின் மேல்பால் உள்ளது. இது திருநள் ளாற்றிலிருந்து பேரளம் செல்லும் கற்சாலையில் சுமார் 3 பர்லாங் தூரத்தில் உள்ளது. இதில் செங்கழுநீர்ப் பூக்கள் மிகுதியாகப் பூக்கும் என்றும் அவற்றைத் தியாகேசப் பெருமானுக்குச் சாத்துவது வழக்கம் என்றும் கூறுகிறார்கள்.

**ஸ்தல விருட்சம் :**

இந்தத்தலம் ஆதியில் தருப்பைக் காடாக இருந்தமை யாலும் இறைவன், அதன் அடியில் எழுந்தருளியிருந்தமை

யாலும் தருப்பைகளே ஸ்தலவிருட்சமாகும். உட்பிரகாரத்தில் சுவாமிக்கு வடபால் இதனைக் காணலாம். ஸ்தல விருட்சம் இறைவன் எழுந்தருளியிருக்கும் இடமாதலின் அதனைக் கிள்ளுதலோ, ஒடித்தலோ, முடிபோடுதலோ கூடாது. ஆயினும் இன்று மக்கள் தாங்கள் எண்ணிய காரியம் நிறைவேறும் பொருட்டு முடியிட்டு வருகிறார்கள்.

**மண்டபங்கள் :**

ஏனைய சிவாலயங்களில் உள்ளதுபோல இங்கும் கர்ப்பக்கிருகத்தை ஒட்டி அர்த்த மண்டபம் மகா மண்டபம் அந்தராள மண்டபங்கள் உள்ளன. தியாகத்தலமாதலின் எண்ணெய்க்காப்பு மண்டபம், வசந்த மண்டபம், ஆஸ்தான மண்டபம் இம்மூன்றும் சிறப்பாக உள்ளன. அவற்றுள் ஆஸ்தான மண்டபம் இன்று வாகன மண்டபமாக விளங்குகிறது. தியாகராஜப் பெருமான் திருவோலக்கம்கொண்டருளும் காலத்து இம்மண்டபத்திற்கு எழுந்தருளி குடிமக்களின் குற்றங் குறைகளை ஆராய்வது வழக்கமாம்.

**சிற்பங்களும், சித்திரங்களும் :—**

முற்கூறியபடி சோமாஸ்கந்தர், இரண்டு தக்ஷிணா மூர்த்திகள், காலபைரவர் இவைகள் சிறந்த வேலைப்பாடமைந்த சிலைச் சிற்பங்கள். தியாகராஜர் சந்நிதி பக்கத்துள்ள அர்த்தநாரீசுவரர் இறைவன் உமையொரு பாதியனாக விளங்கும் சுதைச் சிற்பம். இவை மிகப் பழமையானவை. இன்று விமானம் கோபுரதளம் இவற்றில் புதிய சுதைச் சிற்பங்கள் பல புராண வரலாறுகளை ஒட்டி அமைக்கப் பெற்றுள்ளன.

சுவாமி, அம்பாள், தியாகராஜர், சனி பகவான் சந்நிதிகளில் சரவிளக்குகள் உள்ளன. அம்பாள் சந்நிதியில் சுமார் இரண்டு அடி உயரம் உள்ள பாவை விளக்கு உள்ளது. தியாகராஜர் சந்நிதியில் தியாகேசர் எழுந்தருளியிருக்கும் ரத்தின சிம்மாசனத்தை ஒட்டி ஐந்து கிளைகள் உள்ள விருட்சதீபம் இருக்கிறது. மற்றபடி குடை கொடி ஆலவட்டம் நாகதீபம் இடபதீபம், புருஷாமிருகதீபம் முதலான பதினாறு உபசாரப் பொருள்களும் உள்ளன.

**பூசையும் விழாவும்:—**

நாள்தோறும் ஐந்துகால பூசைகள் முறையாக நடைபெறுகின்றன. ஒன்பதுமணி அளவில் கால சந்தியும், பன்னிரண்டு மணி அளவில் உச்சிக்காலமும், மாலை ஆறு மணி அளவில் சாயரட்சையும், எட்டு மணி அளவில் இரண்டாங்காலமும், பத்து மணி அளவில் அர்த்தசாமமும் நடைபெறுகின்றன.

சனிபகவானுக்கு நான்குகால பூசைகள் நடைபெறுகின்றன. இவை அன்றி சனிக்கிழமைகள் தோறும் விஷேச அர்ச்சனை ஆராதனைகள் நடைபெறும். சனிப் பெயர்ச்சி என்பது சனி பகவான் ஒரு இராசியிலிருந்து மற்றொரு ராசிக்குப் பிரவேசிக்கும் காலம். கோட்சாரப்படி அவரவர்கள் சாதகப்படி நன்மையும் தீமையும் விளையக்கூடும். அந்நாளில் சனி பகவானை வழிபட்டால் தீமை குறையும் நன்மை பெருகும். ஆதலால் அந்நாளில் ஆயிரக்கணக்கான அர்ச்சனைகள் நடைபெறும். அபிஷேக ஆராதனைகள் நடக்கும்.

வைகாசி மாதம் உத்திரட்டாதி நாளில் கொடியேறி பதினெட்டு நாள் பெருவிழா நடைபெறும். இதுவே இத்தலத்தில் நடக்கும் பிரமோற்சவம். இவ்விழாவின் இறுதி நாளில் இடையனுக்குக் காட்சி கொடுத்த ஐதீகம் நடத்தப் பெறுகிறது. புரட்டாசி மாதப் பௌர்ணிமை நாளில் தியாகேசரை இந்திரன் வழிபட்ட சிறப்பு விழா நடைபெற்று வருகிறது. மார்கழி மாதத்து பௌர்ணமி நாளில் பலரும் வந்து அன்னதானம் முதலியன செய்வார்கள். இவை அன்றி பிரதோஷம், விநாயகசதுர்த்தி, நவராத்திரி சுக்கிரவாரம், சித்திரை விஷு, ஐப்பசி விஷு முதலான புண்ணிய காலங்களில் விழாக்களும் விஷேச பூசைகளும் நடைபெறுவதுண்டு.

**வழிபட்டு உய்தி பெற்றோர்கள்:**

ஆதியில் திருமால், பிரமன், இந்திரன், அஷ்டதிக்குப் பாலர்கள் முதலிய தேவர்களும் அகத்தியர் குலத்தியர், முதலான சப்த ரிஷிகளும் அருச்சுனன் நளன், கலிங்கன், வருஷராசன் முதலிய அரசர்களும், அன்னப் பறவையும்

பூசித்து வழிபட்டு நற்கதியை அடைந்து இருக்கிறார்கள். ஞானசம்பந்தப் பெருமான், திருநாவுக்கரசு சுவாமிகள், சுந்தரமூர்த்தி நாயனார் முதலிய சமயாசாரியர்கள் இங்கு வந்து வழிபட்டு உள்ளனர். அருணகிரிநாதரும் வந்து வழிபட்டமைக்குச் சான்றாக திருப்புகழ் உள்ளது.

---

# மூர்த்திகள்

இத் தலத்திற்குச் சிறப்பான மூர்த்தி தருப்பாரண்யேஸ்வரர். இவர் ஆதி மூர்த்தி எனவும், நள்ளாறர் எனவும் வழங்கப்பெறுகிறார். கிழக்குப்பார்த்த சந்நிதி. ஒளியான திருமேனி. கல்வெட்டுக்களில் நள்ளாறுடைய நாயனார் எனவும் திருநள்ளாறு உடையார் எனவும் குறிக்கப் பெறு கின்றார். சுயம்புமூர்த்தி. ஆதியில் தருப்பை வனத்தில் எழுந்தருளியிருந்ததால் தருப்பையிலான வடுக்கள் திருமேனியில் உள்ளதாகக் கூறுகின்றார்கள்.

**அம்மை :**

அம்மையார் திருநாமம் திருமுறைகளில் போகமார்த்த பூண்முலையாள் என வழங்கப்பெறுகின்றது. வடமொழியில் பிராணேஸ்வரி என வழங்கப் பெறுகின்றது. சமணர்களால் சைவ சமயத்திற்கு நலிவு வந்த காலத்தில் போகமார்த்த பூண்முலையாள் என்ற பதிகம் சைவத்திற்குப் பிராணனை கொடுத்தமையாலும், நம்முடைய உயிருக்குயிராயிருந்து காப்பதாலும், பிராணேஸ்வரி என்ற திருநாமம் உண் டாயிற்று எனவும் கருதலாம். கல்வெட்டுகளில் பூண்முலை நாச்சியார் என வழங்கப் பெறுகிறது. அம்மையின் பெயராலேயே கோயில் கிராமங்களிலும் ஒன்றன் பெயர் பூண்முலையாள்மங்கலம் என்று இருப்பது சிந்திக்கத்தக்கது.

**தியாகப்பெருமான் :**

தியாகராஜர் சப்தவிடங்கர்களில் இரண்டாவது மூர்த்தி. இவர் பெயர் நகவிடங்கத் தியாகர் என்பது. இவர் செய்யும் நடனம் உன்மத்த நடனம். முசுகுந்த சக்ரவர்த்தி தேவேந்

திரனிடமிருந்து பெற்றுவந்த மூர்த்திகளில் ஒன்று. இவர் எழுந்தருளும் திருமேனியாக விளங்குகிறார். இவர்க்கு உரிய அம்மை நீலோத்பலாம்பிகை.

**சோமாஸ்கந்தர் :**

இது கற்சிற்பம். மிக அழகான உருவம். மேலத் திருமாளிகைப்பத்தியில் உள்ளது. நாள்தோறும் பூசை உண்டு.

**சப்தவிடங்க லிங்கங்கள் :**

இவை சோமாஸ்கந்தரை அடுத்து மேலத் திருமாளி கைப்பத்தியில் உள்ளவை.

**பைரவர் :**

இவர் இத் திருக்கோயிலின் க்ஷேத்திர பாலராக, சிறப்பு வழிபாட்டைப் பெறும் பைரவர். வடக்குத் திருமாளிகைப் பத்தியில் ஈசானிய மூலையில் இருக்கிறார். மேலும் ஸ்தல விநாயகர் சந்நிதியிலும், சோமாஸ்கந்தரின் பக்கத்திலும் மூன்று பைரவத் திரு உருவங்கள் உள்ளன.

**ஜ்வரதேவர் :**

தியாகராஜர் மண்டபத்தில் வடக்குப் பக்கச் சுவரில் உள்ள அருஉருவத் திருமேனி. அதன் உருவ அமைப்பு இன்னதென்று அறியக் கூடவில்லை.

**நடராஜர் :**

சோழர் காலச் சிற்பமாக, வீசிய கரமும், எடுத்த பார்வையும், குனித்த புருவமுமாக விளங்கும் அழகிய திருமேனி உடையவர். பக்கத்தில் அம்மை சிவகாம சுந்தரி யும் வீற்று இருக்கிறார்.

ஏனைய சிவாலயங்களில் உள்ளனபோல சூரியன், சந்நிதி விநாயகர், ஸ்தல விநாயகர், கோஷ்ட தேவதைகள் அனைத்தும் உள்ளன. இத்தலத்தில் வடமேற்கில் திருக்

கோயிலைச்சார களநாராயணப் பெருமாள் என்ற பெருமாள் கோவில் உள்ளது. அதுவும் சிறப்புடையது.

**நள விநாயகர்.**

நள தீர்த்தக்கரையில் எழுந்தருளியுள்ள விநாயகர். இவருடன் தனியே பைரவரும் எழுந்தருளி உள்ளார்.

**உற்சவத் திருமேனிகள்:**

எல்லாத் தலங்களிலும் இருப்பதுபோலச் சந்திரசேகரர் முதல் பஞ்சமூர்த்திகளும், கல்யாண சுந்தரரும், கிராம தேவதைகளும், சமயாசாரியர்களும் உள் ! மகாமண்டபத்தில் இருக்கின்றனர். சிறப்பாகச் சனிபகவானுடைய உற்சவமூர்த்தி சனி பகவான் சந்நிதியில் இருக்கின்றது.

---

# சனி பகவான்

இத்தலத்திலுள்ள மூர்த்திகளில் சிறந்தவர். இவருடைய கோயில் கிழக்குப்பக்கத்தில் உட் கோபுரத்தின் வடபகுதியிலுள்ள சிறிய மாடத்தில் உள்ளது. இவர் நவக்கிரகங்களில் ஒருவர். "சனியைப் போலக் கொடுப்பவரும் இல்லை; சனியைப் போலக் கெடுப்பவரும் இல்லை" என்ற பழமொழியே இவர் மக்களிடம் செலுத்தும் ஆதிக்கத்தையும், கருணையையுங் காட்டும். அதனாலேயே, அரசன் முதல்—துறவி வரை, ஏன் புராண இதிகாசத் தலைவர்களாகிய ராமன் ராவணன், கண்ணன், இந்திரன் போன்ற தேவ புருஷர்களுங்கூட இவர் ஆணையின் வண்ணம் இன்பத் துன்பங்களை எய்தினர் என்று நூல்கள் கூறுகின்றன. 'முப்பது வருஷம் வாழ்ந்தவனும் இல்லை; முப்பது வருஷம் கெட்டவனும் இல்லை' என்ற பழமொழியும் சனி பகவானுடைய ஆணைவழி மக்கள் வாழ்க்கையமைந்துள்ளது என்ற உண்மையையே உரைக்கின்றது. அதனாலேயே மக்கள் அனைவரும் இவர் கோபத்தைத் தடுக்கவும், கருணையைப் பெறவும் மிகுந்த பய பக்தியுடன் தியானம், பாராயணம், அபிஷேக ஆராதனைகளும் செய்கின்றனர்.

இவர் வரலாறு வடமொழியில் மார்க்கண்டேய புராணத்திலே 108-வது அத்தியாயத்திலே சூரியனுடைய மகிமையை யுரைக்கும் பகுதியிலே மூன்று சுலோகங்களில் கூறப்பட்டுள்ளது.

காசி கண்டம் என்னும் நூலில், சிவசன்மா சனியுலகம் கண்ட அத்யாயத்தில் இவருடைய தோற்றம், வரம் பெற்றது முதலிய வரலாறுகள் கூறப்படுகின்றன.

சூரியனுக்கு 'சம்ஞா' என்ற மனைவியிருந்தாள். அவள் துவஷ்டா என்பவரின் புதல்வி. அவள் சூரியனோடு கூடி வாழ்ந்து வைவஸ்வத மநுவையும், யமனையும், யமுனை என்னும் பெண்ணையும் பெற்றனள்.

பின்பு சூரியனுடைய உடலின் வெப்பத்தைத் தாங்கிக் கொண்டு உடன் வாழ முடியாதவளாகித் தனது நிழலை ஒரு பெண்ணைகப் படைத்துச் சாயாதேவி எனப் பெயர் சூட்டி, சாயையே நீ நம் கணவனை விட்டு நீங்காமல் இருப்பாயாக. நான் உன்னைப் படைத்ததையோ—நானிட்ட கட்டளையையோ யாரிடமும் வெளியிடாதே என்று சொல்லித் தன் தந்தையாகிய துவஷ்டாவின் வீட்டிற்குப் போனாள். தந்தையிடம் நடந்த காரியங்களைத் தெரிவித்தாள்.

துவஷ்டா, என் அருமை மகளே! கற்புடைய பெண்கள் இத்தகைய காரியம் செய்வார்களா? என்னதானிருந்தாலும் கணவனை விட்டுப் பிரியலாமா என்று கோபித்தான். சம்ஞாதேவி நாம் என்ன காரியம் செய்து விட்டோம் இனித் திரும்பிக் கணவன் வீட்டிற்கே சென்றால் அவர் நம்மைக் கோபிக்கவும் கூடும். ஆதலால் அருமையான தவங்களைச் செய்தாவது காலத்தைக் கழிப்போம் என்று வடதுருவத்திற்குச் சென்றாள். அங்கே சூரியனையே மனத்தால் தியானித்துக் கொண்டு கொடுந்தவம் இயற்றினாள்.

இங்கே சாயாதேவி சூரியனுடன் இல்லறம் நடத்தினாள். சாவர்ணி என்னும் எட்டாவது மனுவும், சனிபகவானையும், பத்திரை என்னும் பெண்ணையும் பெற்றாள். தனக்குப் பிள்ளைகள் பிறக்கிறவரையில் சம்ஞையின்

பிள்ளைகளைச் சீரும் சிறப்புமாக வளர்த்த இவள், தன் பிள்ளைகளைக் கண்டதும் அவர்களை ஏறுமாறாக நடத்தினாள். அவர்களில் வைவஸ்வத மநு மிக நல்லபிள்ளை. மாடு உதைத்துக் கன்று காயப்படுமா? கோழி மிதித்துக் குஞ்சு முடமாகுமா? தாய் அடிக்கப் பிள்ளை வருந்தலாமா? என்று பொறுமையுடன் இருந்தார். யமன் கொடிய பிள்ளை. அவன் மட்டும் மனம் பொறாமல் தாயை உதைக்கக் காலைத் தூக்கினான். கண்ட சாயாதேவி அவன் கால் முறியக் கடவது என்று சாபங் கொடுத்தாள்.

யமன் நடந்த காரியங்களையெல்லாம் ஒளிக்காமல் தன் தந்தை சூரியனிடம் சொன்னான். என்னதான் மக்கள் தவறு செய்தாலும் தாய் தண்டித்தல் மரபல்லவே! அதிலும் சாபமிடுதல் எவ்வளவு கொடுமையான தண்டனை! இருக்கட்டும்; அவள் மனத்தை ஆராய்ந்து அறிகிறேன். குழந்தாய்! சாபம் அனுபவிக்காமல் போகாது. ஆதலால் உன் காலில் புண்ணுண்டாகிப் புழு வைக்கட்டும். சில நாள் உன் காலைப் புழுக்கள் அரித்துத் துன்புறுத்தட்டும். பின்னர் கால் செம்மையுற்றுச் சுகம் பெறுவாயாக என்று சொல்லிச் சாயைபாற் சென்றான்.

சாயாதேவி கணவனைக் கண்டவுடன் கால்களில் வீழ்ந்து வணங்கினாள். அவளை வாரியெடுத்து, என் கண்ணே! உன்னுடைய மூத்த மக்கள் மூவரையும் காரணமில்லாமலே கறுவுகிறாய். இளைய மக்கள் மூவரையும் இன்பமுடன் நடத்துகிறாயே. பெற்ற தாய்க்குப் பிள்ளைகள் எல்லாரும் சமந்தானே. ஏன் இந்த வேற்றுமை உனக்கு உண்டாயிற்று. உண்மையைச் சொல் என்று கேட்டான். சாயாதேவி வாய்மூடி மவுனமாகத் தலை குனிந்து நின்றாள். சூரியன் நடந்த வரலாறுகள் எல்லாவற்றையும் ஞானத்தால் அறிந்து அவளைச் சபிக்க எண்ணினான்.

சாயாதேவி இதனையறிந்து, உண்மைகளை ஒன்று விடாமல் உரைத்தாள். சூரியனுக்குக் கோபந்தணிந்தது. கருணை பிறந்தது. தன் மாமனாகிய துவஷ்டா வீட்டிற்குப் போனான். என் மனைவி எங்கே என்று கேட்டான். துவஷ்டா, என் பெண் உன்னுடைய ஒளியைப் பொறுக்

காதவளாகி, வட துருவத்திலே பெண் குதிரையாகி உன்னைத் தியானித்துக்கொண்டு கடுமையான தவம் செய்கிறாள். நீ அங்கே போனால் உன்னுடலில் உள்ள வெப்பத்தை யடக்கிக்கொள்ள வேண்டும் என்று கூறி, அவனை வட துருவத்திற்கு அனுப்பி வைத்தான்.

சூரியன் அங்குச் சென்று தன் மனைவியான சம்ஞாதேவி தவம் புரியும் சிறப்பைக் கண்டான். அவளுடைய அருமை யான தவத்திற்கு மெச்சினான். தான் ஆண் குதிரையாகி அவளை அணுகினான். சம்ஞாதேவி பயந்து தவத்தை விட்டுத் 'தப்பினோம் - பிழைத்தோம்' என்று ஓடினாள். இவனும் விடாமல் துரத்தினான். அப்போது ஆண் குதிரை யாகச் துரத்திச் சென்ற இவனது ஆற்றல் மூக்கின் வழி யாகச் சிதறியது. அப்போது தேவ மருத்துவர்களாகிய அசுவினி தேவர்களிருவரும் பிறந்தனர்.

சூரியன் ஏதோ குதிரையென்று ஓடுகிறாள் என்பதை யறிந்து, அஞ்சாதே யான் உன் கணவன் என்று கூறித் தன் உண்மை வடிவைக் காட்டினான். சம்ஞாதேவியையும் அழைத்துக்கொண்டு தன் மண்டலத்திற்கு வந்து இரு மனைவிமாரோடும் இல்லறம் நடத்தினான். தன் மக்களில் வைவஸ்வத மநுவை மன்னனாகவும், யமனைக் காலனாகவும், யமுனையை நதியாகவும் உலகிற்குதவி வருக என்று பணித் தான். சனியைக் கோள்களுள் ஒன்றாக இருந்து மக்க ளுடைய புண்ணிய பாவங்களுக்கு ஏற்ப நியதிப்படி இன்பத் துன்பங்களை உதவி வருக என்று ஏவினான்.

சனி பகவான் காசிக்குச் சென்று விசுவலிங்கத்தின் தென்பால் ஒரு சிவலிங்கத்தைத் தாபித்து வழிபட்டுத் தந்தை கொடுத்த பதவிக்கு வேண்டிய தவ வலிமையைப் பெற்று வாழ்ந்து வருகிறான்; என்பது வரலாறு. (1)

சனி பகவானுக்கு மந்தன், சனைச்சரன், பங்கு, கரியன் என்ற பெயர்களும் உண்டு. ஏனைய கோள்களைக் காட்டிலும் சனியின் கோளாகிய சனி மண்டலம் இருபத்தொன்பதரை யாண்டிற்கு ஒருமுறை ராசி மண்டலங்களைக் கடப்பதால்

1. காசி கண்டம்: சிவசன்மா, செவ்வாய், வியாழன் சனியுலகுண்ட அத்தியாயம் பாடல் 17—25.

மந்தன், சனைச்சரன் என்ற பெயர்கள் உண்டாயின. சனை: மெதுவாக, சரன்: சஞ்சரிப்பவன்,

இவருடைய மூத்த தாய் மகனுகிய யமன், மாற்றுந் தாயின்மேற் சீற்றங்கொண்டு தண்டத்தால் அடித்தான் என்றும், அதனுல் கால் நொண்டியாயிற்று என்றும் ஒரு வரலாறு உண்டு. அதனுல் உண்டான பெயர் பங்கு என்பது. பங்கு—நொண்டி.

இவருடைய திருமேனியின் அமைப்பைப்பற்றிச் சில்ப ரத்னுகரம் என்னும் வடமொழிநூல் 'சனி பகவான் கருப்பான நிறமுள்ளவர்; கழுகு வாகனம் உடையவர். நான்கு கைகளையுடைவர். வலப்பக்கமுள்ள கைகளில் வரதான முத்திரையையும் பாம்பையும் (செல்வத்தையும்) தாங்கியிருப்பார். இடப்புறமுள்ள கைகளில் வில்லும் சூலமும் ஏந்தியிருப்பார்' என்கின்றது. (1)

ஸ்ரீ தத்வநிதி யென்னும் வடமொழி நூல் கூறுவது:

சனி பகவானே! சூரிய புத்திரரே! காசியபர் கோத்திரத்தில் பிறந்தவரே! சௌராஷ்டிர தேசத்திற்குத் தலைவரே! கலங்கிய கருத்த நீர்போன்ற நிறம் உடையவரே! நான்கு கைகளை யுடையவரே! வில், அம்பு, கத்தி, வரதம் இவற்றைத் தாங்கிய கைகளை யுடையவரே! நீல ஆடை, நீலமாலை, கருஞ்சந்தனப்பூச்சு, நீலரத்னுபரணம், இவற்ருல் அணி செய்யப் பட்ட உறுப்புக்களை உடையவரே! எல்லா வுலகங்களின் அச்சத்தையும் அகற்றுபவரே! உமக்கு வணக்கம்.

நீலநிறமான கொடிகளால் அலங்கரிக்கப்பட்டதும், எட்டுக் கருங் கழுகுகள் பூட்டியதும் நீலமணி யிழைக்கப்பட்டது மான தேரில், மேருவை வலம் வருபவராக வியாழன், யமன் இவர்களோடு கூட வருக.

தாமரை மலரின் மேற்குப் பகுதியிலுள்ள இதழின் நடுவில்,மேற்கு முகமாக, கரிய இரும்பாலான சனியின் உருவத்தை, எல்லா அங்கங்களுடனும், ஆயுதங்களுடனும்,

---

(1) சில்ப ரத்னம், உத்தர பாகம், சலோகம் 149.

பரிவாரங்களுடனும், மனைவியோடும், ஆற்றலோடும் வில் வடிவான பீடத்தில் எழுந்தருளுக என்று பாவனை செய்க. (2)

வேறொரு ஆகமத்தில், இந்திர நீலக்கல் போன்ற நிறம் உடையவர், கையில் கத்தி வரதம் உடையவர், கழுகு வாகனம் உடையவர், வில் அம்பு ஏந்தியவர்; வீரர் என்று கூறப்பட்டுள்ளது. (3)

சில ஆகமங்களில், காகம் வாகனமாகக் கூறப்பட்டுள்ளது.

சோதிட நூல்களில், இவர் மகர கும்ப ராசிகளுக்கு அதிபதி; துலா ராசியை உச்ச இடமாகப் பெற்றவர், ஆயுட்காரகர் என்று கூறப்படுகின்றார்.

இவருக்கு உரிய நாள் சனிக்கிழமை. இவரது தானியம் எள்; எள்ளின் நெய்யை விளக்கிட்டு எள்ளன்னத்தை நிவேதித்தால் இவர் கருணையைப் பெறலாம்.

வான நூலின்படி இவருடைய மண்டலம் சனி மண்டலம். இது சூரியனைச் சுற்றிவரும் ஒன்பது கிரகங்களில் ஒன்று. வியாழனுக்கு அடுத்தபடியுள்ள பெரிய கிரகம். இதன் குறுக்களவு சுமார் 73,000 மைல். இதன் வளையத்தின் குறுக்களவு 1,70,000 மைல், இக் கிரகம் மிக லேசானது. கிரகங்களின் தலைவனாகிய சூரியனுக்கும் இதற்கும் இடையே உள்ள தூரம் 88.6 கோடி மைல்; நாம் வசிக்கும் பூமிக்கும் இதற்கும் உள்ள தூரம் 75 கோடி மைல். இது தன்னைத் தானே ஒருமுறை சுற்றிக்கொள்ள பத்து மணியும் பதினான்கு நிமிஷங்களும் ஆகின்றன. சுமார் 10¼ மணி நேரம் சனியில் ஒருநாள். இது சூரியனை ஒருமுறை சுற்றிவர 29½ ஆண்டுகள் ஆகின்றன. ஆகவே பூமியில் 29½ ஆண்டுகள் கழித்தால் சனியில் ஓராண்டுதான் ஆகும். இவ்வண்ணம் சுமார் ராசிக்கு 2½ ஆண்டுகளாகப் பன்னிரண்டு ராசிக்கும் சுமார் முப்பதாண்டு ஆகும் என்று, தம் தவ வலிமையாற் கண்டு கூறிய ஞானிகள் திறம் பாராட்டற்குரியது.

---

(2) ஸ்ரீ தத்வநிதி, கிரகநிதி 20 சனித்யானம். (3) ஷை

சனி பகவானுக்குப் பிரதியாக (பதிலாக) பிரமனுக்கு வழிபாடு செய்யின் சனிபகவான் மகிழ்வர். ஆதலால் சனிக்கு அதிதேவதை பிரஜாபதியாகிய பிரமன். அவர் ஒருமுகத்துடனும், நான்கு கைகளுடனும் அவற்றில் அட்சமாலை, சுருவம், குண்டிகை, புஸ்தகம் இவற்றை ஏந்தி அன்னவாகனத்தில் இருப்பர். அவரது இடது மடியில் சாவித்திரி தேவி எழுந்தருளியிருப்பர். ஏனைய பூணூல் முதலிய பிரமனுக்கு உரியன அனைத்தும் உண்டு. நிறம் தாமரைபோன்ற நிறம்.

பிரத்யதி தேவதை அதிதேவதைக்குப் பதிலான தேவதை யமன். அவன் சிவந்த கண்ணும், கையில் பாசமும், கருப்பு நிறமும், பயங்கரமான முகமும் பயங்கரமான தோற்றமும் உடையவனாக எருமைக்கடா வாகனத்தில் வைத்துத் தியானிக்கடவன்.

இவர்கள் இருவரையும் வழிபட்டால் சனிக்கு மகிழ்ச்சியுண்டாம். தன்னையே பூசித்ததுபோலக் கருதி எல்லா நன்மைகளையும் செய்வார்.

---

# புராண வரலாறு

## முனிவர்களின் விருப்பம்

சத்தியலோகம் பிரமதேவனுடைய ஆட்சிக்குரிய உலகம். அங்கே அத்தாணி மண்டபத்திலே தாமரையாகிய ஆசனத்திலே பிரமதேவர் அரசு வீற்றிருக்கிறார். அவருக்குப் பக்கத்திலே, அகத்தியர், புலத்தியர், வசிட்டர், கௌதமர், விசுவாமித்திரர் முதலான முனிவர்கள் வந்து அவரவர்களுக்குரிய ஆசனத்திலே இருக்கிறார்கள். எல்லோரும் சேர்ந்து வேத மந்திரங்களைச் சொல்லிப் பிரமனைத் துதிக்கிறார்கள்.

பிரமதேவன் தம் படைப்புத் தொழிலின் சிறப்பைப் பற்றியும், வேத சாஸ்திர நுட்பங்களைப்பற்றியும் முனிவர்களுக்கு விளக்கிக் கொண்டிருக்கிறார்.

அப்போது, முனிவர்களில் ஒருவர் எழுந்து, பிரம தேவரை நோக்கி விழுந்து வணங்கி நின்றார். பிரமதேவர், முனிவர்களே! ஏதாவது சிறப்பான செய்தி உண்டா? இவர் உங்கள் சார்பாக ஏதோ சொல்ல விரும்புகின்றவர்போலக் காணப்படுகிறாரே! ஏதாவது கேட்டறிய விரும்பினால் கேளுங்கள் என்றார்.

முனிவர்கள், வேத சாஸ்திர விற்பனராகிய தங்கள் திருமுன்பு எங்களுக்கு வேறு என்ன தேவை உண்டாகப் போகிறது. எங்கள் அனைவருக்கும் நெடுநாளாகத் தங்கள் வேத சாஸ்திர விமரிசனங்களைக் கேட்டு வந்ததால் வேத விதிப்படி ஒரு யாகம்செய்ய வேண்டும் என்ற ஆசை உண்டாயிற்று. யாகம் செய்யத் தகுதியான சித்தி க்ஷேத் திரம் எது என்று எங்களுக்குத் தெரியவில்லை. அண்டங்கள் அனைத்தையும் படைத்த தங்களையே கேட்டு அறியலாம் என்று எண்ணினோம். தெரிவித்தருள வேண்டும் என்று வேண்டிக் கொண்டார்கள்.

**சித்தி க்ஷேத்திரம் :—**

பிரமன் முகமலர்ந்து வேதம் அறிந்தவர்களாகிய உங்க ளுக்கு யாகம் செய்யவேண்டும் என்ற ஆசை உண்டானது இயல்பும் தகுதியானதும்தான் என்று கூறி ஆசியும் வழங்கி னார்.

சிறிதுநேரம் சித்தனையில் ஆழ்ந்தார்; விழித்தார்; முனி வர்களே! நீங்கள் எண்ணிய வண்ணம் புண்ணிய கன்மங் களைச் செய்வதற்கும் எண்ணங்கள் எல்லாவற்றையும் எளி தில் ஈடேற்றிக் கொள்வதற்கும் தக்கதாகப் பூலோகத்தில் ஒரே ஒரு இடந்தான் இருக்கிறது. அதுதான் நைமிசாரண் யம் என்பது.

முன்னொருகாலத்தில் உங்களைப் போன்ற முனிவர்கள் சிலர் தவம் செய்தற்குத் தகுந்த இடம் எது என்று வின வினர். நாம் தருப்பை ஒன்றை எடுத்து வளையமாக்கி உருட்டிவிட்டோம். முனிவர்களே இந்தத் தருப்பையாலான சக்கரம் உருண்டோடி எங்கே நிற்கிறதோ அங்கே சென்று தவஞ் செய்யுங்கள் என்றோம். அச்சக்கரமாகிய நேமிவிழுந்த

காடு நைமிசாரணியம் எனப் பெயர் பெறுவதாயிற்று. அங்கே சென்று யாகம் செய்யுங்கள் என்ருர்.

இதனைக்கேட்ட முனிவர்கள் அனைவரும் எழுந்து வணங்கி நைமிசவனத்தை யடைந்தனர். யாகம் செய்தனர். ஓய்வு நேரங்களில் பராசர முனிவரின் மகனுன சூதமுனிவர் வாயிலாகப் பதினெட்டுப் புராணங்களையும் கேட்டு நற்பொழுதாகக் கழித்து வந்தனர்.

## சூத முனிவர் அருளுதல்

ஒருநாள் முனிவர்கள் சூதமுனிவரை நோக்கி, முனிவர் பெருமானே! அன்ெருருநாள் திருநள்ளாறு என்னும் தருப்பாரணியத் தலத்தின் பெருமைகளையும் வரலாற்றையும் விளக்குவதாகத் திருவாய் மலர்ந்தீர்கள். இன்று அதனை விரிவாகக் கேட்க வேண்டும் என்ற விருப்பம் எங்களுக்கு உண்டாயிற்று. அதனை விரிவாக இப்போது சொல்லியருள வேண்டும் என்று வேண்டிக்கொண்டார்கள்.

சூதமுனிவர் முனிவர்களைப் பார்த்து ஓ முனி புங்கவர்களே, முன் பிறவிகளிற் செய்த சிவபுண்ணியம் இருந்தால் அல்லது இத்தகைய ஆசைஉங்களுக்கு உண்டாகாது. உங்கள் வாயிலாகத் தர்ப்பாரணியப் பெருமையை இப்பூவுலகம் என்றும் அறிந்து ஈடேறவேண்டும் என்பது சிவபெருமான் திருவுள்ளம் போலிருக்கிறது. அதனுலேயே நீங்கள் கேட்கிறீர்கள். சிவனுணையின் வண்ணம் நானும் சொல்கிறேன்; கேளுங்கள் என்று கூறத் தொடங்கினர்.

### பிரமன் வருகை :—

முதன்முதலிலே இந்த உலகம் அனைத்தையும் பிரமதேவர் படைத்தாரல்லவா! அவரே இப்பூவுலகச் சிறப்பைக் கண்டுவருங் காலத்தில் தருப்பைக்காடு நிறைந்த தர்ப்பாரணியத்தலத்திற்கு வந்தார். அவருக்குப் புலன் வழிச் செல்லாமல் பொறிகளை அடக்கித் தவஞ் செய்ய வேண்டும் என்ற ஆசை உண்டாயிற்று. தவஞ் செய்ய முற்பட்டார். அங்கே எல்லாம் வல்ல முதற்பரம்பொருளான சிவபெருமான் சிவலிங்கமாக உருக்கொண்டு எழுந்தருளி

யிருப்பதைக் கண்டார். என்னே! பெருமான் கருணை. என் தவத்திற்கு இரங்கி இங்கேயே எழுந்தருளி வந்து விட்டாரே என்று வியந்தார். அடியற்றமரம்போலக் கீழே விழுந்து வணங்கினர். வேத மந்திரங்களைச் சொல்லித் துதித்தார். ஆயிரநாமங்களைச் சொல்லி அருச்சித்தார். சிவலிங்கப்பெருமானிடத்திலே ஈசானம், தற்புருடம், வாம தேவம் சத்யோசாதம் என்ற திருமுகங்களையும், அவற்றின் சிறங்களையும், அம்முகங்களில் தனித்தனியே விளங்கும் சூரியன், சந்திரன், அக்கினி என்ற மும்மூன்று கண்களை யும், இருபத்தைந்து கைகளையும் கண்டு, வியந்து திருவைந் தெழுத்தாகிய சீபஞ்சாக்கர மந்திரத்தைச் சொல்லி வணங் கினர். சிவபெருமான் திருமுன்பு நின்று, பெருமானே! வேதங்கள், வேதாங்கங்கள், மேலான ஆகமாதி சாத்திரங் கள் அனைத்து இருபொருள் தருகின்றனவாகத் தெளிவின்றி உள்ளன. அவற்றையும் தெளிய அறிவுறுத்தி அடியேன் படைப்புத் தொழிலும் சீரிதாகக் கைவர அருளுதல் வேண்டும் என வேண்டினர். கருத்தறிந்து முடிப்பானாகிய இறைவனும் அவ்வண்ணமே அருள் செய்தார். பிரமன் தம் மனக்குறை நீங்கப் பெற்று அத்தலத்திலேயே சில நாள் தங்கியிருந்தார்.

## பிரமன் கோயில் கண்டது

அங்குச் சிவபெருமானுக்கும் அம்பிகைக்கும் நந்தி யாவர்த்த விமானமும், ஏனைய பரிவார தேவர்களுக்கு உரிய கோயில்களும் சிவாகம விதிப்படி மனத்தாலேயே கண நேரத்திற்குள் கற்பித்துப் படைத்தார். அக்கோயி லுக்குக் கிழக்குத் திசையில் அம்பு சென்று விழுந்தூரத்தில் ஓரரசமரம் இருக்கிறது. அதன் எதிரில் தம் கையிலுள்ள பிரமதண்டத்தால் இன்று பிரம தீர்த்தம் என வழங்கப் பெறும் ஒரு தீர்த்தத்தை உண்டாக்கினர். இதனைக்கண்ட சரஸ்வதி தேவியும் அதன் பக்கத்தில் ஒரு தீர்த்தத்தை உண்டாக்கினர். அது வாணி தீர்த்தம் எனப்படும். கோயி லின் மேற்கில் இருந்து வடக்குவரை ஓம் என்னும் பிரணவ வடிவாக விளங்கும் தடாகம் அன்னத்தால் உண்டாக்கப் பட்டது. அது ஹம்ச தீர்த்தம் எனப்படும் அதன் கரையில் ஒரு சிவலிங்கமும் அன்னத்தால் அமைக்கப் பெற்றது.

இங்ஙனம், பிரமனும், சரஸ்வதியும், அன்னமும் மூர்த்தி தீர்த்தங்களை யமைத்து முறைப்படி வழிபட்டு வரும் நாளில், பிரமன், என்றும் இப்பூசை இடையருது நடக்க வேண்டுமே என்று எண்ணித் தக்க ஏற்பாடுகளைச் செய்தமைத்தார். விதிப்படிப் பெருமானை வழிபட்டு வேண்டிய வரங்களைப் பெற்றுக் கொண்டு சத்தியலோகம் சார்ந்தார்.

இதனையறிந்த இந்திரன் முதலான திக்குபாலகர் எட்டுப் பேரும் இத்தலத்திற்கு வந்து, தங்கள் தங்கள் திசையிலே தீர்த்தமும் சிவலிங்கமும் தனித்தனியே அமைத்து வழிபட்டனர். இவ்வண்ணம் பிரமன், வாணி, இந்திரன் முதலிய இவர்களே வழிபட்டு முத்தியின்பம் பெற்றூர்கள் என்ருல் இத்தலத்தின் பெருமையை யாரால் சொல்ல இயலும்?

இத்தலம் காவேரியின் தென்கரையில் உள்ளது. இத்தலத்தைச் சுற்றி ஐந்து நாழிகை வழியளவில் எங்கிருந்தாலும் ஆன்மாக்கள் பிறவித்துன்பம் நீங்கிப் பேரின்பம் பெறுவர். மண்ணுலகிலுள்ள சிவபுரம் திருநள்ளாறேயாம் என்று சூத முனிவர் சொன்ஞர்.

இதைக்கேட்ட முனிவர்கள் மீண்டும் சூதரை வணங்கி முனிவர் தலைவ! இத்தலத்தில் இன்னும் யார் யார் வழிபட்டு உய்ந்தார்கள், அவர்கள் வரலாற்றையும் நாங்கள் உய்ய உரைத்தருள வேண்டும் என்று வேண்டிக் கொண்டனர். சூத புராணிகரும் சொல்லத் தொடங்கிஞர்.

## 2-வது கலிங்காதிபதிச் சருக்கம்

### கலிங்க மன்னன் ஆட்சி :

கலிங்க மன்னன் பெருவீரன் ; அங்கம் வங்கம் கோசலம் முதலிய நாட்டரசர்கள் அனைவரும் இவனைக் கண்டால் அஞ்சி அடி வணங்குவார்கள். அவன் அனைவரும் மகிழ அறநெறியில் நாட்டை ஆண்டு வந்தான். உலக மக்களைத் தாய்போலக் காக்குந் தயையுடையவன். அவன் ஒரு காலத்து, அசுவமேத யாம்செய்ய எண்ணிஞன். வேதங்களை முழுதும்

உணர்ந்த அறநெறிவழுவாத அந்தணர்கள் அனைவருக்கும் அழைப்போலை அனுப்பினான். புலகன், அத்திரி, மரீசி, பரத்துவாசன், குணக்கிராகி, சதானந்தன், வசிட்டன் முதலிய முனிவர்களும் மறையவர்கள் பலரும் வந்து சேர்ந்தார்கள். அரசன் அவர்கள் அத்தனை பேர்களையும் வரவேற்று அர்க்கிய பாத்திய ஆசமனீயமும் தந்தான். அவரவர்கள் தங்குவதற்கு ஏற்ற தனி இடங்களையும் வழங்கினான். இனி வருவார் யாரும் இல்லையென்று எண்ணிக்கொண்டு அரசி இருக்கும் இடமாகிய அந்தப்புரத்துக்குச் சென்று விட்டான்.

**பார்க்கவ முனிவர் சாபம்:**

அதுகாலை, பார்க்கவர் என்னும் முனிவர் அரண்மனை வாயிலுக்கு வந்தார். அரசன் எதிர் கொண்டு அழைப்பான் என்று எண்ணினார். காலம் கடந்தது. காவலன் வரவில்லை. முனிவர்க்குக் கோபத் தீ மூண்டது. வாசற் காவலனை அழைத்து உங்கள் அரசனுக்கு எம்முடைய வருகையைப்பற்றி ஓடிப்போய் உணர்த்துக என்றார். காவலன் பணிப்பெண்ணிடம் சொல்லி அனுப்பினான். அவள், அந்தப்புரம் போன அரசனுக்கு அறிவிப்பது எப்படி ? என்று சும்மா இருந்துவிட்டாள். பார்க்கவர் ஒரு முகூர்த்த நேரம் நின்று பார்த்தார். யாரும் வந்து மறுமொழி சொல்லவில்லை. மூண்டதுகோபம். கண்களிலிருந்து தீப்பொறி பறந்தன. என்ன? இம்மன்னவன் யாகத்திற்கென்று நம்மை அழைத்து, நம் வரவிற்காக அரசன் காத்திராமல் அந்தப்புரத்திற்குப்போய் விட்டானே! இன்னாருக்கு இன்னபடி இதனை இன்னகாலத்துத் தவறுது செய்ய வேண்டுமென்று இடித்துக் கூறித் திருத்தும் முதியோர் இல்லாத மூர்க்கர்களையே துணையாகக்கொண்ட மன்னவன் வாழும் அரண்மனை மயானத்துக்கு ஒப்பாகும்.

அதனைத் தீண்டாதே என்று பெரியோர்கள் சொல்லுவார்கள். மாலுமி இல்லாத மரக்கலமும், சேனாபதி இல்லாத சேனையும், மந்திரி இல்லாத மன்னனும் வாழ்வதுண்டோ ? நூலறிவும் கேள்வி ஞானமும் இல்லாதான் பெருஞ் செல்வம் பெற்றாலும் பயனில்லை. நகுஷன் நூறு அசுவமேத யாகம் செய்தான். மதத்தால் மலைப் பாம்பாய்

மண்ணில் விழுந்தானன்றோ! சந்தனம் அகில் முதலிய மணமுள்ள மரங்களை வீட்டுக்கு விறகாக வைத்து எரிக்கும் அறிவாளி போல, அரசன் அறிவாற்றலால் மிகுந்த அந்தணர்களை ஆகுதிக்கு அழைத்தான். அனைவரும் வந்தனர். நாம் அழைக்க ஞானிகளும் மோனிகளும் வந்துவிட்டார்களே என்று செருக்குத் தலைக்கு ஏறியது. அந்தணர் பெருமையை அரசன் அறியவில்லை. ஆதலால், இவன் பெண்டுபிள்ளைகளோடு காட்டானைகளாகித் திரிக என்று சபித்தார். அக்கணமே அரசனும் மற்றவர்களும் யானைகளாயினர். அங்கிருந்து அனைவரையும் துரத்திக்கொண்டு வெளியே வந்து காட்டை அடைந்தனர். முத்தேவர் தேவராயினும் முனிவர் சாபத்தைத் தாண்ட முடியுமோ?

**முனிவர்கள் பெருமை:—**

முனிவர்களுக்கு மிகுந்த கோபமுண்டானால் பூண்டோடு குலத்தை ஒழிப்பர். நண்பினராளுல் பிணிகளைப் போக்கி இன்பம் தருவர். எவ்வளவு பெரிய வாழ்வு வேண்டினுலும் அருளுவர்; ஆதலால் முனிவர் வார்த்தைக்கு எதிர்வார்த்தை இல்லை என்று யாகத்திற்கு வந்திருந்த ஏனைய முனிவர்கள் எல்லாரும், 'பாவம் அரசன் மிக நல்லவன்; முன் பிறவிகளிற் செய்த பாவம் இப்படி-பார்க்கவர் சாபமாக வந்து மூண்டுவிட்டது. ஆனுலும் அரசன் நீடுவாழ்க, என வாழ்த்தி இருப்பிடம் சென்றனர்.

**குடிமக்கள் கவலை:—**

அரசனுக்கு வந்த தீமைகளை அகற்ற முடியாத மக்கள் ஏங்கி ஏங்கி அழுதழுது கண்ணீர் சிந்தினர். மந்திரிகள் ஏதோ கெட்ட காலத்திலும் ஒரு நல்லகாலம். அந்தணர்கள் பலர் வாழ்த்தி யிருக்கிறுர்கள்; அரசனும் செங்கோல் வழுவாத நீதிசேர் ஆட்சியை யுடையவன்; புண்ணியவான்; ஆகையால் காட்டானைகள் ஆனுலும், சிறிதுகாலத்தில் உருமாறி வந்து உலகம் ஆள்வான் என்று நம்பி நாட்டை ஆண்டு வந்தனர்.

**நாரதர் வருகை:—**

அரசன் யானையாகிக் காட்டில் திரிந்து வருங்காலத்தில், பிரமதேவனுடைய மகனுகிய நாரதமுனிவர் அக்கானகத்து

வந்தனர். அவரை அந்த யானை துரத்தியது; முனிவர் கண்டார். தமது மெய்யுணர்வால் கலிங்க மன்னன் என்று உணர்ந்தார்; அசையாமல் நின்ருர்.

தன் வேலைக்காரனைப் பார்த்து நீ சென்று அதோ வருகிற யானையையும், அதன் பிடியையும், குட்டியையும் அழைத்துவா என்றனர். ஏவலாளன் அங்ஙனமே சென்றழைத்தான். யானை குருவைக்கண்ட சீடன்போல அடக்க ஒடுக்கமாக வந்து நின்றது. நாரதர் அதற்கு முன்னறிவு வரும்படி அருள் செய்தார். பூர்வ ஞானம்பெற்ற யானைகள் முனிவருக்கு வணக்கம் செலுத்தின. ஞானிகளைத் தரிசிப்பது போன்ற உயர்ந்த காரியம் உலகத்தில் வேறு எது?

## சாப விமோசன மார்க்கம்

முனிவர் யானையை நோக்கி உன் செயல் அனைத்தையும் உணர்வோம்; வீராதி வீரனை மன்னனே! இந்தப் பாவம் உன் அறியாமையாலும், கிரகக் கோளாற்றினுலும் விளைந்தது;

கறந்த பாலோடு சிறிது நஞ்சு சேர்த்துண்டால் நன்மையா கொடுக்கும் தீமைதான் விளையும். அதுபோலப் பல்லாயிர முனிவர்களை வணங்கினுலும், ஒரு முனிவன் சாபம் இப்படியாக்கிவிட்டது.

பிறர்க்குத் தீமை செய்தால் அது மலைபோல வளர்ந்து பின்னர், தீமையைத்தான் கொடுக்கும்; நீ அரசனுகப் பிறந்த இந்தப் பிறப்புக்கு எட்டுப்பிறப்புக்கு முன்னே, ஒருமுனிவன் யாகஞ் செய்யத் தொடங்கினுன். நீ அதைத் தடுத்து நிறுத்தி விட்டாய்; அம்முனிவன் புழுப்போலத் துடித்து இறக்கப் போகின்றவன், இவனும் என்னைப்போல யாகம் தடைபட்டு வருந்துக எனச் சாபமிட்டிறந்தான். அந்த வினைதான் இப்படி மூண்டது. ஆதலான் பார்க்கவரை வெறுக்காதே எய்வதனிருக்க அம்பை நோவதா? போனது போகட்டும்; நீ சாபம் நீங்கத் திரும்பவும் அரசனுகி அசுவமேதம் யாகஞ் செய்ய விரும்பினுல் உனக்கு ஓர் உபாயம் சொல்லுகிறேன் கேள்;

**நாரதர் தலப்பெருமை கூறுதல்**

உழவர்கள் காலால் மடை தள்ளிய உடனே நீர் பாய்ந்து கரும்பும், நெல்லும் கொழிக்கும் காவேரி நாடாகிய சோழ நாட்டிலே பரம்பொருளாகிய சிவபெருமானே சிருட்டித்த ஆதி நகரம் ஒன்றுண்டு; அதற்குத் தருப்பாரண்யம் என்று பெயர். முன்னொரு காலத்தில், பிரமன் தண்டத்தால் ஒரு தடாகத்தையும் படைத்து அங்கேயுள்ள தர்ப்பாரண்யே சரைப்பூசித்து உயர்ந்த வரங்களைப் பெற்றான். அந்தத் தீர்த்தத்தின் தண்ணீரிலே ஒருதிவலை உங்கள் மீது பட்டால் இத் துன்பம் பறந்துபோம்;

மாசி மாதத்திலே பூரணை நாளிலே மக நட்சத்திரத்திலே சிவபுரமாகிய தர்ப்பாரணியத் தலத்திலே சிவ நடனத்தைத் தரிசிக்க நாமே வருகிறோம். நீங்கள் மூவரும் அங்கே வாருங்கள் என்று உபதேசித்துவிட்டு நாரதமுனிவர் அகன்றார்.

**கலிங்கமன்னன் தருப்பாரண்யத்தை யடைதல்:—**

காட்டானையாகத் திரிந்த கலிங்கக் காவலனும், அவ்வாறே இத்தலத்தை யடைந்தான்; பிரமதீர்த்தக் கரையில் திரிந்தான். தீர்த்தத்தில் முழுகுகின்றவர்களுடைய முடியிலிருந்து சிந்துகின்ற நீரின் திவலை இவர்கள்மீது தெறித்தது. உடனே மூவரும் யானை யுருவம் நீங்கி, மன்னனும், மனைவியும், அரசிளங் குமரனும் ஆயினர். அங்கிருந்த மக்கள் அனைவரும் இறைவன் திருவிளையாடல் இது என்று அதிசயித்தார்கள்.

அப்போது மகதி என்னும் யாழை ஏந்திய நாரதமுனிவர் கின்னரப்புள்ளும், அசுணமாவும் புடைசூழ இசை யமுதத்தைப் பெருக்கிக்கொண்டே அங்கு வந்தார். மன்னன் முனிவரைக் கண்டு வணங்கினான்; முனிவர், மன்னன் முதலிய மூவரையும் உடனழைத்துக் கொண்டு, திருக்கோயிலுக்குச் சென்றார். சிவபெருமானைத் தெரிசனம் செய்வித்தார். அரசனும் கருணைக் கடலாகிய கண்ணுதற் பெருமானைக் கைதொழுதான். முனிவர், அம்மன்னனை அங்கேயே சிலநாள் இருந்து சிவப்பணி செய்துவருக எனக் கட்டளையிட்டுத் தேவருலகம் சென்றார்.

**சாப நீக்கம் :—**

கலிங்க மன்னன், கருணை வள்ளலாகிய சிவபெருமான் அருளைப் பெற்றுச் சாபம் நீங்கி இன்பமாக இருக்கின்றான் என்பதை அறிந்த அரசர்கள் அனைவரும் முன்போலக் கப்பங் கொண்டுவந்து காவலன் திருவடிகளில் வைத்து வணங்கி நின்றனர். அரசன் முன்போலவே மன்னர் மன்னனாய்ச் சோழநாட்டிலிருந்த வண்ணமே கலிங்க நாட்டையும் பிறநாடு களையும் ஆண்டுவந்தான். ஏதோ முன்னைய விதி வலியால் சிறிது காலம் வருந்தினாலும் மிக இன்பம் பெற்றான். சிவனருள் கிடைத்தால் பெருவாழ்வு கிடைக்கத் தடையேது?

**நிபந்தங்கள் அமைத்தல் :—**

மன்னன் தருப்பாரணியேசர்க்கு வேண்டிய நிபந்தங்களை யளித்துச் சிவாகம முறைப்படி நித்திய நைமித்திக பூசைகளை நெறி தவறாது செய்வித்து வந்தான். விட்ட அசுவமேத யாகத்தையும் செய்து முடித்தான். சிவபெருமானிடம் பிரியாவிடை பெற்றுத் தம் நாட்டுக்குச் சென்றான். மீட்டும், தம் சிம்மாசனத்திருந்து, அரசர்கள் அனைவரும் அடிவணங்க, நீண்டநாள் அரசுபுரிந்து. இறுதியில் திருநள்ளாற்றீசன் திருவடி நிழலை யடைந்தான், என்று சூத முனிவர் சொல்லக் கேட்ட நைமிசாரணிய வாசிகளான முனிவர்கள், என்ன அற்புதம்! என்ன அற்புதம்! எனத் தலையசைத்துக் கொண்டாடிச் சிவபெருமான் திருவருளை வியந்தனர்.

மீண்டும் சூதமுனிவரை நோக்கி இவ்வண்ணம் வேறு யார் இத்தலத்தில் இறைவன் அருளைப் பெற்றார்கள். அந்த வரலாற்றையும் அருளிச் செய்யவேண்டும் என்று வேண்டிக் கொண்டனர். முனிவரும் அவ்வண்ணமே சொல்லத் தொடங்கினார்.

# நளன் வரலாறு

**நளமன்னன் வரலாறு :—**

நிடத நாட்டிலே மாவிந்த நகரத்தைத் தலைநகராகக் கொண்டு வீரசேனன் என்ற அரசன் ஒருவன் அரசாண்டு வந்தான். அவனுக்கு நளன் என்றொரு மகன் இருந்தான். அவன் கடலில் தோன்றும் இளஞாயிறு போல வீரத்தாலும், கொடையாலும் அறிவாலும் ஆட்சித் திறத்தாலும் சிறந்து விளங்கினான். அதனால் அரசர்கள் அத்தனைபேரும் தங்களுக்கு ஒரு திலகமாக அவனை மதித்து வந்தனர். அதனால் அவன் மன்னர் மன்னனாக விளங்கினான். இவன் அரசபாரம் ஏற்ற நாள்முதல் ஆதிசேடனும் தன் சுமை மாறிச் சிறிது ஆறுதல் பெற்றான் என்றால் இவன் ஆட்சித் திறத்தின் அருமையை அளவிட முடியுமோ!

**தமயந்தி பிறப்பும் - வளர்ச்சியும் :—**

அக்காலத்தில், விதர்ப்ப நாட்டிலே குண்டினபுரம் என்னும் தலைநகரிலே வீமசேனன் என்னும் அரசன் ஆண்டு வந்தான், அவனுக்குத் தமயந்தி என்றொரு மகள் இருந்தாள். அவள் உலகில் ஒவ்வொரு பொருளினிடத்தும் உள்ள சிறந்த அழகுகளை எடுத்து ஒன்று கூட்டிப் பிரமனால் படைக்கப் பெற்றாள் என்றும், மன்மதனும் வீழ்ந்து வணங்கும் பருவ நலமும், குண நலமும், குடிப் பிறப்பும் பெற்று விளங்குபவள் என்றும் தேவரும் பாராட்டுவர். அவள் அழகின் சிறப்பைப் பற்றிக் கேள்விப் படாத அரசர்கள் யாருமே அவனியில் இல்லை எனலாம்.

**நளன் அன்னத்தைக் காணல் :—**

இப்படியிருக்குநாளில் ஒருநாள் நள மன்னன் மாலை நேரத்தில் சோலைப்பக்கம் உலாவச் சென்றான். அங்கேயுள்ள ஒரு தாமரைத் தடாகத்தில் அன்னங்கள் பல தாமரை மலர்களின் மேல் விளையாடிக்கொண்டிருப்பதைக் கண்டான். அவற்றுள் ஒன்று பொன்னிறமாகவும் மிக அழகாகவும் இருந்தது. அதனைப் பிடித்து வைத்து

விளையாட எண்ணிய மன்னன் நீரில் இறங்கி அதனைப் பிடிக்க அணுகினன்.

அன்னம் அஞ்சி ஓடியது. மன்னன் அஞ்சல் மட அனமே! உன்றன் அணி நடையும், செஞ்சொல் சேயிழை யின் மென்னடையும் விஞ்சியது காணவே விரும்பிப் பிடிக்க முயன்றேன் என்ருன். அன்னம் அரசே! உன் சுவையுணர்ச்சியையும் கவிதா வன்மையையும் கருணைப் பெருக்கையும் பெருந்தன்மையையுங் கண்டு வியந்தேன். ஆதலால் உனக்குப் பெரிய உதவியொன்று புரியலாம் என்று எண்ணுகிறேன் என்றது.

மன்னன் அன்னம் பேசுவதைக் கண்டு வியந்து நின்ருன். அவன் முகத்திற் சிறிது ஐயமும் தோன்றியது. இதனைக் குறிப்பால் உணர்ந்த அன்னம் நான் சத்திய லோகத்திலே பிரமனுக்கு வாகனமாக இருப்பவன். அவர் தமயந்தியைப் படைத்த காலத்திலேயே அழகரசியாகிய இவளுக்கு ஏற்ற கணவன் நளனொருவனே என்று சொல்லியது இப்போது நினைவிற்குவத்தது. தமயந்தி விதர்ப்பநாட்டரசன் வீமன் புதல்வி. அழகுத் தெய்வ மாகிய திருமகளும் இவளைக் கண்டு நாணுவாள் என்ருல் அதிகம் சொல்வானேன். நீ விரும்பினுல் நானே முன்னின்று உன் மணத்தை முடித்துவைக்கிறேன் என்றது.

மன்னன் அன்னம் சொன்ன வருணனையளவிலேயே நேரிற்கண்டவன் போலக் காதல் மிகுந்து வருந்தினுன். அன்னத்தையே தூது செல்ல வேண்டினுன்.

**அன்னத்தை தூதுவிட்டது :—**

அன்னமும் தமயந்திபாற் சென்று நளமன்னன் குணச் சிறப்பு அழகு முதலியவற்றையறிவித்தது. அவளும் அவனையே கணவனுக அடையவேண்டும் என உறுதிகொண்டு அன்னத்தையே அரசன்பால் தூதனுப்பினுள். அன்னமும் அரசன்பாற் சென்று தமயந்தியின் உள்ளக்கருத்தை உணர்த்தியது. இருவரும் ஒருவரை ஒருவர் உணர்ந்தனர். திருமண நாளை எதிர்நோக்கி இருந்தனர்.

## சுயம்வரம் :—

இவர்கள் இருவரும் தூதனுப்பிக்கொண்டதையறியாத விதர்ப்பர்கோன் அரச மரபின்படித் தம் மகட்குச் சுயம்வர நாள் வைத்து அரசர் எல்லாருக்கும் ஓலையனுப்பினான். பழுத்த மரத்தில் பறவைகள் வீழுவதைப்போல அரசர்கள் அனைவரும் வந்தனர். இச் செய்தியையறிந்த நாரதர் தேவர்களுக்கும் அறிவித்தார்.

தேவர்களில் இந்திரன், அக்னி, யமன், (1) வருணன் ஆகிய நால்வரும் வந்தனர். தமயந்தி நளனைக் காதலித்திருக்கிறாள் என்ற செய்தியையறிந்த இவர்கள் நால்வரும் நளனையே தமயந்தியிடம் தூதாக அனுப்பினர். தமயந்தி நளபதியை நோக்கி 'நிடதர்கோன் அன்றி வேறெவரும் என் மனக்கோயிலில் இடம்பெற இயலாது' என்றனள். நளன் அவள் முடிபைத் தேவர்கட்குத் தெரிவித்தான். தேவர்கள் தமயந்தியின் மனத்தை மாற்ற நளனுருவந் தாங்கிச் சுயம்வர மண்டபத்தில் இருந்தனர்.

## தமயந்தியின் திகைப்பு :—

தமயந்தி கையில் மாலையை ஏந்திக்கொண்டு மண்டபத்தை அடைந்தாள். தோழியர் ஒவ்வோர் அரசராகப் பேரும் புகழும் சொல்லி அறிமுகப் படுத்தி வந்தனர். அங்கே ஒருபால் நளன் வடிவில் ஐவர் இருக்கக் கண்டாள். இவரில் உண்மையான நளன் யார் என்பதைக் கற்பாற்றலாலும், குறிப்பாலும் உணர்ந்து உண்மை நளனுக்கே மாலை சூட்டினாள். நளன் தமயந்தியைத் திருமணஞ் செய்து நிடத நாட்டிற்கு அழைத்துச் சென்றான். தேவர்கள் நால்வரும் வான்வழிச் சென்றனர்.

## கலி பற்றுதல் :—

கலிபுருடன் தேவர்களைக் கேட்டுச் சுயம்வரம் முடிந்துவிட்ட செய்தியைத் தெரிந்துகொண்டான். கோபங்கொண்டான். தேவர்களாகிய நம்மைவிட்டு மனிதனையா அவள் விரும்பினாள். நளனையும் அவளையும் ஒரு கணமும் வாழ

---

(1) நிருதி என்று சொல்லுகிறது தலபுராணம். நிருதி அசுரனாகையால் வரவில்லை என்கிறது நைடதம்.

விடாமல் பிரித்து வைக்கின்றேன், பாருங்கள்! எனச் சபதம் செய்து பூமிக்கு வந்தான். பன்னிரண்டு ஆண்டுகளாகக் காத்திருந்தான். நிடத மன்னரிடம் நீதியிலோ — ஆசாரத்திலோ — ஒழுக்கத்திலோ ஒரு குறையும் காணப்படவில்லை. ஒருநாள் ஏதோ அவசரமாகக் காலில் நீர் பட்டும் படாமலும் அலம்பிக்கொண்டு, அந்தி வழிபாட்டிற்காக அரசன் அமர்ந்தான். இதுதான் சமயம் என்று கலி அவனைப் பற்றினான்.

## சூதாடியது :—

நளபதிக்குப் புட்கரன் என்றொரு பங்காளி உளன். அவன் நளனுடைய ஆற்றல் வீரம் அழகு, திருமணம் இவற்றால் அளவற்ற அழுக்காறுடையவன். நளனை வெல்ல மாட்டாமையால் பதுங்கிக் கிடந்தான். கலிபுருடன் அவன் பாற் சென்று நளனைச் சூதாட அழைப்பாயாக. நான் உன் பக்க மிருந்து உனக்கே வெற்றியைத் தேடித் தருகின்றேன் என்றான். புட்கரனும் அவ்வாறே சென்று நளனைச் சூதாட அழைத்தான். புட்கரன் கலியின் உதவியால் வென்றான். நளன் நாடு நகரங்களை இழந்த பின் மகனையும் மகளையும் மாமன்பால் அனுப்பிவிட்டுத் தமயந்தியுடன் கானஞ் சென்றான். அங்கே ஒருநாள், கலி புருடன் அன்னவடிவுகொண்டு வந்து அரசன் உடுத்தியிருந்த ஒற்றையாடையையுங் கவர்ந்து சென்றான். அரசனும் மனைவியும் ஒரே யாடையை யுடுத்திக்கொண்டு கடுங்கானிற் சென்றனர்.

## தமயந்தியைப் பிரிதல்:—

வழி நடந்த இளைப்பாலும், பசியின் களைப்பாலும் மன்னனும் அவன் மனைவியும் நடுக் காட்டிலே ஒரு பாழ் மண்டபத்திலே படுத்துறங்கினர். கலிபுருடன் தமயந்தியை விட்டுப் பிரியவேண்டும் என்ற எண்ணத்தை அரசனுக்கு உண்டாக்கினான். நள்ளிரவு நளன் விழித்துப் பக்கத்தில் தடவிப் பார்த்தான். கலி ஒரு கொடுவாள் உருக்கொண்டு கிடந்தான். நளன் அதை எடுத்துப் புடவையின் தலைப்பை அரிந்துகொண்டு, உறங்குகின்ற காதலியைக் கானகத்தே காரிருளிற் கைவிட்டுச் சென்றான்.

**நளனைப் பாம்பு தீண்டுதல்:—**

நளன் போகும் வழியில் காடு தீப்பற்றி எரிந்துக் கொண்டிருந்தது. அத்தீயில் கார்க்கோடகன் என்னும் பாம்பு அகப்பட்டுத் தப்ப வழியின்றித் தவித்தது. கருணை வள்ளலாகிய நளன் அப்பாம்பை அக்கினியிலிருந்து விடுவித்தான். பாம்பு உடனே அவனைத் தீண்டிற்று. நளன் பாம்புக்கு பால் வார்த்தாலும் அது நஞ்சைத்தானே பொழியும்; நன்றிசெய்த என்னையே தீண்டிவிட்டதே என்று எண்ணினான்.

கார்க்கோடகனாகிய தெய்வப் பாம்பு நளன் மனக்குறிப்பறிந்து நான் உபகாரஞ்செய்த உனக்கு அபகாரம் செய்யவில்லை. இந்த அரச வடிவோடு உலாவுவாயானால் பல இடையூறுகள் உனக்கு விளையக்கூடும். ஆகையால் என் விடத்தை உன் உடலிற் பாய்ச்சிக் கருமையாக்கினேன். உடலைக் குறுகவும் செய்தேன். இந்த விகார வடிவை நீ எப்போது வேண்டாம் என்று எண்ணுகிறாயோ அப்போது இந்த அரவுரியாடையைப் போர்த்திக்கொள். உன் உண்மை வடிவு உண்டாகும். அயோத்தியரசன் இருதுபன்னனிடம் செல். அவனுக்கு நீ குதிரை மனம் அறியும் வித்தையைக் கற்றுக்கொடுப்பாயாயின், அவன் அட்சய வித்தையை உனக்குக் கற்றுக்கொடுப்பான். அதனால் நீ யிழந்த வாழ்வை மீளப் பெறலாம் என்றான். நளபதி அதனைப் பெருமகிழ்ச்சியுடன் பெற்றுக்கொண்டான். வனம், நாடு நகர் பலவற்றையுங் கடந்து அயோத்தியை யடைந்தான். அரண்மனைக்குச் சென்று இருதுபன்ன மன்னனை வணங்கி எனக்குச் சமையற்கலையும், குதிரை மனமறிந்து தேரோட்டுங்கலையும் நன்கு தெரியும். ஆதலால் அரண்மனையில் ஏதாவது ஓருலுவல் தரவேண்டும் என்று வேண்டினான். அரசனும் அவ்வாறே குதிரைச் சேவகர் அனைவருக்கும் தலைவனாக்கினான்.

**தமயந்தி வருந்துதல் :—**

இவன் இவ்வாறிருக்க, காட்டிலே காதலனைப் பிரிந்த தமயந்தி காலையில் கண் விழித்ததும் தன் காதலனைக் காணாமல் கதறினாள்; கண்ணீர் சொரிந்தாள். வேரற்ற

கொடிபோலப் புழுதியில் துவண்டு வீழ்ந்தாள், மயங்கிக் கிடந்தாள், தெளிந்து எழுந்தாள், கணவனைத் தேடிப் புறப்பட்டாள். கால் சென்ற வழியே கானகத்தில் நடந்தாள். வழியிலே தென்படும் குயில், மயில், மான் இவைகளைப் பார்த்து என் கணவனைக் கண்டீர்களோ, கண்டீர்களோ என்று புலம்பிக்கொண்டே போனாள்.

**தமயந்தியைப் பாம்பு தீண்ட வருதல் :—**

அப்போது பெரும் பாம்பு ஒன்று நெடுநாள் இரை கிடைக்காமையால் வருந்தி இவள் முகத்தை நிறைமதி என்றெண்ணி அவளை விழுங்கத் தொடங்கியது. அவ்வழியே வந்த வேடன் ஒருவன் அம்பால் தமயந்தியைப் பாம்பின் வாயிலிருந்து விடுவித்தான். முகத்திற் சுனைநீரைத் தெளித்து மயக்கம் போக்கினான். பின் தமயந்தியின் அழகில் ஈடுபட்டு அவளைத் தீண்ட அணுகினான். தமயந்தி தன் கற்புக் கனலால் வேடனைச் சாம்பராக்கினாள்.

வேடன் சாம்பரானதும் தமயந்தி ஐயோ! உபகாரஞ் செய்தவனுக்கு அபகாரஞ் செய்ய நேரிட்டதே! இப்பிறப்பில் என் கணவனைப் பிரிந்து இவ்வண்ணம் கதிகலங்க என்ன பாவஞ் செய்தேனோ! இந்நிலையில் என்னைக் காப்பார் யார் என்று கலங்கினாள்.

**கடவுள் வழிகாட்டுகிறார் :—**

கடவுள் மனமிரங்கி, ஒரு முனிவன் வேடங்கொண்டு தோன்றினர். அப்போது, தமயந்தி முனிவர் பெருமானே! என்னைக் காப்பாற்றியருளும் என்று வேண்டினள். முனிவர் அம்மா! கவலைப்படாதே. இங்கே மிக அண்மையில் உன் உறவினர் வீடு இருக்கிறது. அங்கே செல். வழி காட்டுகிறேன். அங்கிருந்து உன் தந்தை நாடடையலாம். முன்னிலும் பன்மடங்கு இன்பத்தை மிக விரைவில் எய்துவாய் உன் துன்பங்கள் எல்லாம் அகலும் என்று தேற்றி அழைத்துக் கொண்டுபோய் வழியைக் காட்டினர்.

**தமயந்தியை மதயானை பணிதல் :—**

தமயந்தி அவ்வழியே செல்லும்போது சூரியன் அத்தமித்தான். கானகம் இருண்டது. தமயந்தி தடம் தெரியா

மல் தவித்தாள். அந்நேரத்தில் வணிகர் சிலர் அவ்வழியே வந்தனர். தமயந்தி அவர்களைப் பின்தொடர்ந்து சென்றாள். அவர்கள் தங்கிய இடத்திலேயே தங்கி இருந்தாள். நள்ளிரவு, ஒரு மதகரி எங்கிருந்தோ ஓடி வந்தது. தூங்குகின்ற வணிகர்கள் அனைவரையும் கொன்றது. அதைக்கண்ட தமயந்தி திடுக்கிட்டு எழுந்திருந்து இவ்வுலகத்தில் வாழ்வதைக் காட்டிலும் சாவதே மேல் என்று எண்ணி மதயானைக்கு முன்னே சென்றாள். அது இவளைக் கண்டவுடன் அடி பணிந்து அகன்றது. எல்லாம் இறைவன் செயல் என்று எண்ணிய தமயந்தி இதுவரையும் காத்த தெய்வம் இனியும் காப்பாற்றும் என்ற துணிவால் வழியைத் தொடர்ந்து நடந்தாள். பொழுது விடிவதற்குள் பல காததூரம் கடந்து முனிவர் சொன்ன நகரை அடைந்தாள்.

அந்நகர்க்கு அரசன் சுவாகுகன். அவனுடைய அரண்மனைப் பெண்கள் பலர் ஒரு குளத்தில் நீராடிக்கொண்டிருந்தனர். தமயந்தி அங்குச் சென்றாள். பெண்கள் ஒவ்வொருவரும் இவள் அழகில் ஈடுபட்டு இவள் ஓர் அரசியாய் இருக்க வேண்டும், எதற்கும் மிக அருகிற் சென்று அவளையே கேட்போம் என்று எல்லோரும் அவளைச் சமீபித்தனர். அம்மா, தங்களுக்குத் துணை இல்லையா ? ஏன் தனியாக இருக்கின்றீர்கள்? என்று, வினவினர். தமயந்தி, தங்கைகளே உங்கள் அரசியிடம் என்னை அழைத்துக்கொண்டு போனால் எல்லாவற்றையும் சொல்வேன் என்றாள். அவர்கள் இவள் முகத்தோற்றத்தைப் பார்த்தால் இவள் நம் அரசிக்கு உறவு போலிருக்கிறது என்று எண்ணி அரசியின் அந்தப்புரத்தில் அழைத்துக் கொண்டுபோய் விட்டார்கள்.

சுவாகுகனுடைய தாயாகிய அரசி இவளைக்கண்டு திடுக்கிட்டாள். ஐயோ! ஏதோ ஒரு வகையான பாசம் இவளை இன்னாரென்று அறியாதபோதிலேயே எனக்கு உண்டாகிறது. நமக்கு உறவாய் இருப்பாள் போலத் தோன்றுகிறது. இருக்கட்டும்; பார்ப்போம், என்று எண்ணிக்கொண்டு அம்மா! நீ குளித்து உணவை உட்கொள், என்று உபசரித்தாள். தமயந்தி, தாயே! அது ஒன்றும் வேண்டாம்; நான் தமயந்தியின் தாதி; அவர்கள் இருவரும்

காட்டிற்குப் போய்விட்டார்கள், திரும்ப வரும் வரையில் இங்கே இருக்க உத்தரவு கொடுத்துப் பசியும் போக்கினாற் போதும்; எனக்கு வேறொன்றிலும் விருப்பம் இல்லை. அவர்களைக் காணுகின்ற வரையில் அவிழ்ந்த கூந்தலை முடிப்பதில்லை; ஆடையை மாற்றுவதில்லை; குளிப்பதில்லை; தைலம், தாம்பூலம், மஞ்சள், மலர் தரிப்பதில்லை. இது என் விரதம் என்றாள். அதற்கு அவ்வரசியும் உன் விருப்பம்! என்று பெருமையாக நடத்தி வந்தாள்.

## தமயந்தியைத் தந்தையின் நாட்டுக்கு அனுப்புதல்:—

விதர்ப்ப நாட்டு அரசன் வீமசேனன் அனுப்பிய ஆட்களில் சிலர் தமயந்தியைக் கண்டு இவர் எம் அரசனின் புதல்வியே! இளமையிற் கண்ட சில அடையாளம் இவர் பால் இருக்கின்றன என்று துணிந்து சுவாகுகனிடம் சொல்லினர். அரசன் பல்லக்கில் வைத்துப் பாதுகாப்பாக விதர்ப்ப நாட்டுக்கு அனுப்பி வைத்தான். வீமராசன் தம் மகளை அழைத்து பிள்ளைகளையும் அவளோடு கூட்டிக் கணவனைப் பிரிந்த கவலைகளைத் மாற்றிப் பாதுகாத்து வந்தான். நளனைத் தேட நாடெங்கும் தூதுவிட்டான். நல்லொழுக்கத்திற் சிறந்த அந்தணர்களை நாலா பக்கத்தும் அனுப்பினான். நள மன்னனைக் கண்டு பிடித்துக் கொடுப்பவர்களுக்கு ஆயிரம் பொற்காசுகள் பரிசாக அளிப்பேன் என்றும் பறை சாற்றினான். அனுப்பப்பட்டவர்களில் ஒரு வேதியன் அயோத்தி நகரில் ஒருவன் குதிரைச் சேவகத்திலிருக்கிறான். அவன் பெயர் வாகுகன்; மேனியெல்லாம் கறுத்து நோய் கொண்டவன் போலக் காணப்படுகிறான். அவனுடைய நடையுடை குண நலங்களைக் கூர்ந்து நோக்கினால் ஏதோ பெரிய நிலையிலிருந்து கீழிறங்கியவனாகக் காணப்படுகிறான் என்று வீமராசனிடம் கூறினான். வீமராசன் தன் மகள் தமயந்திக்கு இச்செய்தியை உணர்த்தினான்.

## மறு சுயம்வரத்திற்கு தூது அனுப்புதல்:—

தமயந்தி, அரசியல் தூதர்களை யழைத்து, நீங்கள் அயோத்திக்குச் சென்று இருதுபன்ன மன்னனிடம், "நளன் தமயந்தியை விட்டுப் பிரிந்து விட்டதால், தமயந்தி இரண்

டாவது சுயம்வரம் வைத்திருக்கிறார். அது நாளைக்கே நடைபெறும்; என்பதைத் தங்களிடமும் அறிவித்து வரச் சொன்னார் என்று கூறுங்கள்". என்று அனுப்பினாள். தூதர்களும் அவ்வாறே சென்று கூறினர். இருதுபன்னன் நாளைக்கே சுயம் வரமா! அயோத்திக்கும் குண்டினபுரத்திற்கும் எவ்வளவு தூரம் இருக்கிறது; ஆனாலும் குதிரை மனம் தெரிந்த வாகுகன் சாரதியாக இருக்கும்போது நமக்கென்ன குறை! என்று எண்ணி வாகுகனைத் தேர் கொணரச் சொன்னான்; தேரில் ஏறினான்; வாகுகன் குதிரைகளின் செவியில் ஒரு மந்திரத்தைக் கூறித் தேர்த் தட்டில் ஏறி உட்கார்ந்ததும் தேர் வாயுவேகமாய்ப் பறந்தது.

தேர் ஓடிய வேகத்தில் அரசனுடைய மேலாடை கீழே விழுந்து விட்டது. வாகுகா 'எடு' என்பதற்குள் அது இருபத்து நான்கு காதம் ஓடி வந்து விட்டது என்றான். அப்படி ஆனால் விதர்ப்ப நாட்டுத் தலைநகர் இன்னும் எவ்வளவு தூரத்தில் இருக்கிறது என்றான் அரசன். வாகுகன் அதோ தெரிகிறதே அதுதான் என்றான்.

அரசன் அப்படியானால் தேரைக் கொஞ்சம் நிறுத்து. கீழேயிறங்கி முகம் கைகால்களைக் கழுவிக்கொண்டு, சற்று இளைப்பாறிச் செல்லாம் என்றான். வாகுகன் நிறுத்தினான். அரசன் கீழேயிறங்கி, குளக்கரையை அடைந்து இளைப்பாறி யிருக்கும்போது அரசன் கண்ணில் ஒரு தான்றி மரம் தென்பட்டது. வாகுகனை நோக்கி இதில் இத்தனை கோடி இலைகள் உள்ளன என்று எண்ணாமலேயே கூறினான். வாகுகன் தான்றி இலையோ மிகச் சிறியது. இதை எப்படி எண்ணாமலேயே கணக்கிட்டுக் கூறுகிறீர்கள். அந்த வித்தையை எனக்கும் அறிவிக்கவேண்டும் என்று வேண்டினான். அரசன், வாகுக! நீ குதிரையின் மனம் தெரிந்து ஓட்டும் வித்தையை எனக்குத் தெரிவித்தால் அதை நான் உனக்குத் தெரிவிப்பேன் என்றான். அரசே ஆணை! என்று வாகுகன் அஸ்வ மந்திரத்தை அரசனுக்குத் தெரிவித்தான். அரசனும் எண்ணாமலே அறியும் அக்ஷய வித்தையை வாகுகனுக்குக் கூறினான், உடனே வாகுகனைப் பற்றியிருந்த கலி அவனைவிட்டுப் பிரிந்து, தான்றி மரத்தின் மேல் ஏறிக்கொண்டது.

**ருதுபன்னன் வருகை :—**

இருதுபன்னன் தேரிலேறியதும் தேர் விரைந்தோடிக் குண்டினபுரத்து அரண்மனை வாயிலிலே நின்றது. மன்னன் கீழேயிறங்கினான். அங்கு, மணத்திற்குரிய நிகழ்ச்சிகள் ஒன்றையும் காணாது, இதில் ஏதோ சூது இருக்கிறது; ஆதலால் நாம் எச்சரிக்கையாக இருக்கவேண்டும் என்று எண்ணிக்கொண்டிருக்கிறபோது காவலர்கள் ஓடிவந்து விதர்ப்ப மன்னன் தங்களை அத்தாணி மண்டபத்திற்கு அழைக்கிறார்; வாருங்கள்; என்று அழைத்துப்போய், அரசன் முன் இருக்கச் செய்தனர். விதர்ப்பன், இரு கரங்களையும் நீட்டி, வரவேற்றுத் தக்க ஆசனம் அளித்து, உபசரித்து, "கன்னி நறுந்தேறல் மாந்திக் கமலத்தின், மன்னித் துயின்ற வரி வண்டு பின்னையும் போய், நெய்தற்கு அவாவும் நெடுநாட நீ யென்பால் எய்திற்கு அவாவியவாறு என்" என்று கேட்டான். இருதுபன்னன் ஒன்றும் விசேடமில்லை. தங்களைப் பார்த்துச் செல்லலாம் என்றுதான் வந்தேன் என்றான்.

**தமயந்தி நளனை ஆராய்ந்து அறிதல் :—**

இங்ஙனம் இவர்கள் உரையாடிக்கொண்டிருக்கும்போது வாகுகன் தேரை ஓர் ஒதுக்கிடத்தில் நிறுத்திவிட்டு, ருதுபன்னன் தங்குவதற்காக அளித்திருந்த மாளிகைக்குச் சென்று அரசனுக்கு வேண்டிய உணவு வகைகளைச் சமைக்கத் தொடங்கினான். இதனையறிந்த தமயந்தி சில ஒற்றர்களை ஏவி 'வாகுகன் எப்படிச் சமையல் செய்கிறான், பார்த்து வாருங்கள்' என்று பணித்தாள். அவர்களும், சென்று கண்டு விரைந்து வந்து, அம்மா! என்ன ஆச்சரியம்; நீரில்லை, நெருப்பில்லை; பண்டங்களைத் தொட்டவுடன் அவை பக்குவமாகி விடுகின்றன என்று தெரிவித்தனர்.

தமயந்தி ஐயமில்லை. வாகுகன், நளனாகிய என் கணவனே ஆவார். ஆயினும், இன்னும் பார்ப்போம்; என்று, தன் மக்கள் இருவரையும் அழைத்து, வாகுகன் இருக்கும் இடத்திற்கு அனுப்பிவைத்தாள். குழந்தைகள் சென்றன. வாகுகன் குழந்தைகளைக் கூர்ந்து நோக்கினான். குழந்தைகளின் சுறுசுறுப்பும் — குறும்புத்தனமும் வாகுகன் மனத்தைக் கவர்ந்தன. வாகுகன்

குழந்தைகளைப் பார்த்துக் குழந்தைகளே! நீங்கள் என் மக்கள் போல் காண்கின்றீர். யார் மக்கள்? என்று கேட்டுக் கொண்டே தூக்கச் சென்றான். குழந்தைகள் நாங்கள் விடத மன்னன் நளனுடைய மக்கள்; எங்கள் தந்தை பிரிந்து சென்றதால் எங்கள் பாட்டனார் வீட்டில் வாழுகின்றோம் என்றனர். இதைக்கேட்ட வாகுகனுடைய கண்கள் நீரைச் சொரிந்தன. வாகுகன் குழந்தைகளும் குழந்தைகளுடன் வந்த தாதியார்களும் அறியாதபடிக் கண்ணீரைத் துடைத்துக்கொண்டு உள்ளே சென்று விட்டான்.

இந்நிகழ்ச்சிகளைத் தாதியர் தமயந்தியிடம் தெரிவித்தனர். தமயந்தி தந்தைக்குத் தெரிவித்து வாகுகனை அரசவையில் அழைத்து உபசரிக்கச் சொல்லியனுப்பினள். வீமனும் இருதுபன்னனை நோக்கி, எப்படி இவ்வளவு விரைவாகத் தங்களால் வர முடிந்தது என்று கேட்டபோது, இருபன்னன் வாகுகன் வலிமையைக் கூறினன். அப்படியானல் அவனை அழையுங்கள் பார்க்கலாம் என்றான் வீமன். இருதுபன்னன் வாகுகா என்றழைக்க, குள்ளமான வடிவும். கரியமேனியும் தடித்த உதடும் பொதுவகையில் விகாரமான தோற்றமும் உடைய வாகுகன் வந்து நின்றான்.

வீமன் வாகுகனை நோக்கி, நீ குதிரை ஓட்டும் வன்மையை அயோத்தியரசன் மூலமாகவும், சமையற்கலையின் தனிச் சிறப்பைச் சிலர் மூலமாகவும் மக்கட்பாசத்தை நம் அரண்மனைத் தாதியர் வாயிலாகவும் அறிந்தோம். நீ உண்மையில் வாகுகன் அல்லை. வடிவு மாற்றியிருக்கிறாய். உன் உண்மை உருவைக் காட்டத்தான் வேண்டும் என்று வேண்டிக்கொண்டான்.

**வாகுகன் நளனாக உருக்கொள்ளுதல் :—**

வாகுகனாக வந்த நளபதி கார்க்கோடகன் கொடுத்த அரவுரியை எடுத்து உடுத்தான். அவ்வளவிலே ராஜகெம்பீரத் தோற்றத்துடன் பழைய நளமகாராசாவாகக் காட்சியளித்தான். மக்களும் மனைவியுங் கண்டு மகிழ்ந்தனர். பிரிந்தவர் கூடினர். இந் நிகழ்ச்சிகளைக் கண்ட இருதுபன்னன் திடுக்கிட்டு விடதமன்னனை நோக்கி, தேவரீரைப்

பணியாளாக வைத்திருந்தேனே! அப்போது நான் செய்த பிழைகளைப் பொறுத்தருள்க என வேண்டிக்கொண்டான். நளன், அரசே என் வேண்டுகோளுக்கு இணங்கி என்னை இந்நாள் வரை வைத்துக் காப்பாற்றிய உபகாரத்திற்கு என்ன கைம்மாறு செய்யப்போகிறேன் என்று தேற்றினன். இருதுபன்னன் வீம மகாராசனிடமும் நள மன்னரிடமும் விடைபெற்றுக்கொண்டு அயோத்தியையடைந்தான்.

### நளன் மீட்டும் அரசு ஆளுதல் :—

நளன் சிலகாலம் விதர்ப்ப நாட்டில் மனைவி மக்களுடன் தங்கியிருந்தான். பின் தன் மாமனாராகிய வீம ராசனது படைபலத்துடன் தன்னுட்டையாளுகின்ற புட்கரன்மீது படையெடுத்துச் செல்ல எண்ணி, அங்கே போர்ப்பறை முழக்கச் செய்தான். புட்கரன் போர்முரசு கேட்டவுடனேயே நாட்டை விட்டு ஓடினன். நளன் தானையும் சேனையும் சூழத் தன் மக்கள் மனைவியுடன் நிடத நாடு சென்று பழைமைபோல அரசாட்சி செய்தான்.

### அமைதியில்லை :—

இங்ஙனம், இழந்த அரசைத் திரும்பப் பெற்றும் மனைவி மக்களுடன் இன்பமாக வாழ்ந்தும் ஏவலரும் காவலரும் இட்ட வேலைகளைச் செய்யச் சிறப்புடனிருந்தும் அரசன் மனம் அமைதியுறவில்லை. சித்தப்பிரமை பிடித்தவன்போல ஒன்றிலும் நிலைகொள்ளாது உலவினன். பித்தர் பேயர் போல இருந்தான். இருந்த இடத்தை விட்டு அசையாமல் மரப்பாவை போலக் கிடந்தான். நகரமக்களும், மந்திரிகளும் அரசன் இவ்வாறு இருக்கின்றனே என்று கலங்கினர். இந்நிலையில் நாரதர் நிடத நாட்டுக்கு வந்தார். நளன் நிலையை யுணர்ந்தார். அரண்மனைக்குச் சென்றார். நளனைக் கண்டு, நீ இப்படி இருப்பது சனி பகவான் செயல். ஆதலால் தலயாத்திரை தீர்த்த யாத்திரை செய். தெளிவு உண்டாகும் என்றார். அரசனும் அரசை மந்திரிகளிடம் ஒப்புவித்து, தன் மனைவி மக்களுடன் காசி முதல் கன்னியாகுமரி வரை யாத்திரை செய்து வந்தான். சிறிதும் மன மாற்றம் உண்டாகவில்லை. விருத்தாசலம் என்னும் திருமுதுகுன்றத்

திலே பழமலைநாதரை வணங்கும் போது பாரத்துவாச முனிவர் நளனைக் கண்டார். மன்னன் மன நிலையை உணர்ந்து, மன்னு! காவிரியின் தென் கரையிலே ஒன்றரைக் காதத் தூரத்திலே திருநள்ளாறு என்னும் தலம் இருக்கிறது. அங்கே சென்று பிரம தீர்த்தத்தில் நீராடித் தர்ப்பாரணியேசரையும் வழிபட்டால் உன்னைப் பிடித்த பீடைகள் அகலும். விரைந்து செல் எனக் கட்டளையிட்டனர்.

**நளன் நள்ளாறு அடைதல் :—**

அரசனும் அவ்வாணையின் வண்ணம் திருநள்ளாறடைந்தான். வீதி வலம் வந்தான்; முப்பத்தீராயிரம் முனிவர்கள் மந்திர நீர் தெளிக்கப் பிரம்ம தீர்த்தத்தில் இறங்கி நீராடினன். திருநீறு தரித்து, சீபஞ்சாக்கர மந்திரத்தைச் செபித்துக் கொண்டே திருக்கோயிலை அணுகினன். தூல லிங்கமாகிய கோபுரத்தைக் கண்டு வணங்கினன். உள்ளே செல்ல அடி எடுத்து வைத்த போது, காகக் கொடியும், சூலமும் தாங்கிய சனி பகவான், இனியும் இவனைத் தொடருவோமானல் சிவ அபராதியாவோம் மார்க்கண்டேயனைத் துரத்தி வந்த காலனுக்குக் கிடைத்த கதிதான் நமக்கும் கிடைக்கும் என்று எண்ணி மின்னற் கொடிபோல நளனை விட்டுப் பிரிந்து மறைந்தான். நளன் ஏதோ பெரிய சுமையை இறக்கியவன் போலத் தெளிவடைந்து கோயிலுட் புகுந்து சிவலிங்கப் பெருமானைத் தொழுது, எழுந்து, பெருமானே! யான் இன்றடைந்த பெரும் பேற்றை என்றும் எல்லாரும் பெற்று மகிழவும் என் பெயர் நிலைபெறவும் என் பேரால் ஒரு தடாகம் வெட்டுவிக்கின்றேன். அதில் முழுகித் தேவரீரைப் பணிகின்றவர்களுக்கு கிரக தோஷங்கள் நீங்கவும், ஏவல், வைப்பு, பில்லி சூனியம் இவற்றால் விளையும் துன்பங்கள் தொலையவும், இன்பம் பெருகவும் திருவருள் செய்தல் வேண்டும் என்று வேண்டிக்கொண்டான். சிவபெருமான் அவ்வாறே அநுக்கிரகஞ் செய்தனர்.

நள மன்னன், இத்தலத்திலே சிலகாலம் தங்கி, ஆலயத்தைப் புதுக்கி, மாட கூடங்களையும், கோபுரம் குளங்களையும் செப்பனிட்டு மகாகும்பாபிஷேகமும் செய்வித்து நித்ய

பூசைக்கு வேண்டிய காணி பூமிகளையும் வழங்கித் தர்ப்பாரணியத்தைக் கற்பகாரணியமாகச் செய்தான். பெருமானுக்குத் திருவிழாக்களையும் நடத்திவைக்க எண்ணினன்.

## நளன் திருவிழாச் செய்தது :—

இளவேனிற் பருவத்திலே—இயற்கையழகுகள் பொங்கி உலக அன்னை உலகவர் மனத்தை உவகைக் கடலிலாழ்த்தும் வைகாசி மாதத்திலே புனர்பூச நாளிலே கொடியேற்றுவித்து, விசாக நன்னாளும் பூர்ணிமையுங் கூடிய நாளிலே பிரமதீர்த்தத்திலே தீர்த்தமருளும்படியாகப் பத்து நாளும் திருவிழாச் செய்வித்தான். அன்றியும் மகோற்சவம், பக்ஷோற்சவம், விஷுபுண்ணிய காலங்கள், திருக்கார்த்திகை, தீபாவளி, மகா சிவராத்திரி முதலிய சிறப்பு நாட்கள் அனைத்திலும் விசேட அபிஷேக ஆராதனைகளைச் செய்வித்தான். அவ்வப்போது மாகேசுரபூசையும், அடியார் வழிபாடும் நடைபெறுவித்தான். இப்படிப் பன்னிரண்டாண்டு இத்தலத்திலேயிருந்து பின்னும் இவ்விழாக்களும் பூசைகளும் இடையருது நடந்துவரத் திட்டங்களையமைத்து நிடத நாடடைந்தான் என்று சூதர் கூறினர். இதனைக்கேட்ட நைமிசாரணிய முனிவர்கள் சூத முனிவரை நோக்கி, இதுவரை நாங்கள் பலர் இவ்வுலகத்திலே இன்பம் பெற்ற வரலாறுகளைக் கேட்டோம். சிவஞானம் பெற்று முத்தியடைந்தோர்கள் இருந்தால் அவர்கள் வரலாற்றையும் அருளிச் செய்யவேண்டும் என வேண்டிக்கொண்டார்கள். மீண்டும் சூதர் சொல்லத் தொடங்கினர்.

## நளன் வரலாறு கூறும் நூல்கள் :—

நளபதியின் வரலாற்றை விரிவாகக் கூறு நூல்களில் முக்கியது வியாசபாரதத்தில் ஆரண்ய பருவத்திலுள்ள நளோபாக்யானம். தருமபுத்திரர் சூதாட்டத்தால் நாடு நகரங்களையிழந்து வருந்திய போது, நீ மட்டுமா சூதில் சொத்துக்களையிழந்து வருந்துகிறவன்; முன்னரே நளன் என்பானும் இங்ஙனமே என்று காட்டில் வியாச முனிவர் தேறுதல் கூறியதாக இவ்வரலாறு வருகிறது. பின்

னர் ஸ்ரீ ஹர்ஷ மகா கவியால் 12-ம் நூற்ருண்டில் இருபத்திரண்டு சர்க்கங்களாக நைஷத மகா காவ்யம் என்ற பெயரால் இயற்றப்பட்டது. நள சம்பு, நள சரித்திரம், நள விலாசம், நளாப்யுதயம், நளீய சரிதம், நளோதயம். தமயந்தி சரித்திரம் என்ற நூல்களும், தமிழில் அதிவீரராம பாண்டியர் செய்த நைடதம், புகழேந்திப் புலவர் செய்த நளவெண்பா, ஆசிரியர் பெயர் அறியப்பெருத நளன் அம்மானை என்ற நூல்களும் உள்ளன. ஆனல் இவை நளனுக்குக் கலி நீங்கி யரசாட்சி ஏற்று இன்பமுடன் வாழ்ந்தான் என்றதுவரை நளன் வரலாற்றைக் காட்டினவேயன்றி, எப்படி—எதனல் கலி நீங்கிற்று என்பதைக் காட்டவில்லை. வட மொழியிலும் தமிழிலும் உள்ள இத்தலவரலாறே விளக்குகிறது.

---

60 சர்க்கங்கள், 120 சர்க்கங்கள் இருந்தன என்பதும் ஆய்வாளர் கூற்று; History of Sanskrit Literature by P. S. S. Sastri Page 463.

# பசுக் கொலைப் பாவத்தைப் போக்கிய வரலாறு

### தூயகண்டன் புத்திரகாமேட்டி யாகம் செய்தல் :—

புண்ணிய நதிகளில் ஒன்றாகிய கோதாவிரி நதிக்கரையில் அந்தணர்கள் வாழுகின்ற அமைதியான வேதாவர்த்தனம் என்ற நகரம் ஒன்றுண்டு. அதைத் தூயகண்டன் என்னும் அரசன் ஆண்டுவந்தான். அவனுக்கு மகப்பேறு இல்லை. அதனால் பெருங் குறையுற்ற அரசன் தானதருமங்கள் யாகங்கள் பலவற்றையும் செய்தான். அந்தணர்கள் சொன்னபடி, புத்திர காமேட்டி யாகத்தையும் செய்தான். யாகத்திலிருந்து ஒரு பூதம் வெளிவந்து பாயசத்தைக் கொடுத்தது. மன்னன் அதை வாங்கித் தன் மனைவியின் கையில் கொடுத்து உண்ணச் செய்தான். அரசியும் அதனைப் பயபக்தியுடன் வாங்கியுண்டாள். அதனால் அவள் கருவுற்று ஆட்சிக்குரிய அழகான — ஆண்மை வாய்ந்த மகனைப் பெற்றாள். அதனைக் கண்டு மகிழ்ந்த மன்னன் புத்திர காமேட்டி யாகத்தை நடத்திய இருத்துவிக் என்னும் தலைமைக் குருக்களுக்குப் பொன்னும் மணியும் நெல்லும் பிறவும் கோடி கோடியாகக் கொடுத்தான். நூறு பசுக்களையும் தானம் செய்தான். உடனிருந்த அந்தணர்களுக்கும் அவரவர்கள் தகுதிக்கேற்பத் தானங்கள் பல செய்தான்.

### பொறாமையால் விளைந்த வினை :—

இரண்டு அந்தணர்களுக்குச் சிறந்த பசுக்களைத் தானம் பண்ணினான். அவர்கள் இருவரும் பொறாமையே உருக்கொண்டவர்கள். அவர்களுக்குக் கொடுத்த பசுவில் ஒன்று பெரியது ; ஒன்று சிறியது. ஆதலால் இருவருக்கும் போர் மூண்டது. தடியை எடுத்து அடித்துக் கொண்டார்கள். தடியடி தவறி ஒரு பசுவின் தலையில் விழுந்தது. அதனால் பசு கதிகலங்கி மூக்காலும், வாயாலும் உதிரங்கசிய விழுந்திறந்தது. பசுவைக் கொன்ற பாவம அடித்த பார்ப்பானைப் பற்றிக்கொண்டது. அதனால் அவன் ஒளி யிழந்து புலையனாய், அந்தணர் சேரியிற் புகவும் கூசி அலையத் தொடங்கினான்.

**உரோமசர் உபதேசம் :—**

அப்போது உரோமச முனிவர் இவ் வந்தணனைக் கண்டார். அந்தணன் அவர் திருவடிகளில் வீழ்ந்து வணங்கித் தன் குறைகளைத் தெரிவித்துக்கொண்டான். முனிவர் மனமிரங்கி, உன் பாவந் தொலைய வேண்டுமானால் சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் தர்ப்பாரணியம் என்னுந் தலத்திற்குச் செல். அங்கே அன்ன தீர்த்தம் என்று ஒரு குளம் இருக்கிறது. அதில் ஒரு துளிநீர் உன்மேற் படின் உன் புலைத்தன்மை தொலையும். அந்தணனுவாய். பின் விதிப்படி நீராடித் தர்ப்பாரண்யேசரை வழிபடின் கோகத்தி தோஷம் நீங்கும். அதன் பழம்பெருமையைக் கேள்.

அன்ன தீர்த்தத்தின் அக்கினி மூலையிலே அகத்தியன் ஒரு சிவலிங்கத்தைத் தாபித்து வழிபட்டுச் சனகாதி முனிவர்களோடும் அங்குச் சார்ந்துள்ளான். முசுகுந்தச் சக்கரவர்த்தியும் வந்து தர்ப்பாரணியரை வணங்கித் தான் இந்திரனிடமிருந்துபெற்ற விடங்கப் பெருமானை இத்தலத்தும் எழுந்தருளப்பண்ணினுன். சனிபகவான் சிவபெருமானுடைய கருணையைப் பெற்று அங்கு இருக்கின்றுன். பெரிய கோபுரத்தின் வடபாலுள்ள சனிபகவானைத் தரிசித்தால், போகாத துன்பமேயில்லை. அங்கே செல்; உன் பாவங்களனைத்தும் ஓடும் என்று கூறிச் சென்றுன்.

**அந்தணருக்குப் பசுக் கொலைப் பாவம் நீங்கியது :—**

அந்தணன் அவ்வாறே சோழநாட்டில் தர்ப்பாரண்யத் தலத்தை யடைந்தான். அன்று மகா சிவராத்திரி. கோயிலின் மேற்கேயுள்ள தீர்த்தக்கரையில் நின்றுகொண்டிருந்தான். அத்தீர்த்தத்தில் நீராடும் பெண்ணின் தலையிலிருந்து சொட்டுகிற நீர்த்திவலை ஒன்று புலையுருவெய்திய அந்தணன் மேற்படுதலும், நல்ல உருவம் பெற்றுன்; விண்ணோரும் மண்ணோரும் இதுகண்டு இத்தீர்த்தம் மிக மேலானது, ஒப்பில்லாதது என்று பாராட்டினுர்கள். அந்தணன் பிரமதேஜசு பெற்று விடியற்காலையில் பிரம தீர்த்தத்திலும் நீராடிப் பெருமானைப் பூசித்தனன். அதனுல் உடனே சிவஞானம் கைவரப் பெற்றுன். உரோமஞ்சிலிப்பக் கண்ணீர் வார, நாக்குழறக் காதலாகிப் பெருமானை வேதமந்திரங்களைச் சொல்லித்

தோத்தரித்தான். உற்ருர் உறவினர் மனைவி மக்கள் என்ற பாசங்களை விட்டான்; மனந் தெளிந்தான்; நள்ளாறனே நமக்கு அடைக்கலம் என்று இறைவன் திருவடிகளையே பற்றினன்; தர்ப்பாரண்யத்திலேயே தங்கி, ஆலயப் பணியும் அடியார் பணியும் அரன்பூசையும் செய்துகொண்டிருந்தான். இறுதியில் தாயிற் சிறந்த தயாவுடைய சிவபெருமான் திருவடி நிழலைச் சார்ந்து என்றும் பிறவா — இறவாப் பேரின்ப வாழ்வு எய்தினன்.

---

## உருசி ராசன் வரலாறு

அவந்தி நாட்டரசன் ருசியென்பான் ஆதிசேடன் ஆறுதலடைய அவனியை யரசாண்டு வந்தான். அவன் பொற்பும் — கற்பும், வாய்மையும் சீலமும் உடைய மனைவியோடு கூடி நீதி வழுவாது அரசு செலுத்திவரும் நாளில், பரத்துவாச முனிவர், முனிவர்குழாம் புடைசூழ அரசன் பேரவைக்கு எழுந்தருளினர். அரசன் அதுகண்டு அவருடைய திருவடிகளிலே தமது முடிதோயக் கீழே விழுந்து வணங்கி, முகமன் கூறி, ஆசனத்தில் இருக்கச்செய்து, அளவளாவுங் காலையில் முனிவர் பெருமானே! தருமங்களிற் சிறந்தது எது? என்று அறிந்துகொள்ள விரும்புகின்றேன் என்ருன்.

முனிவர், தானமே அறம்; அது பலவகைப்படும்; அவற்றுள் அன்ன தானமே சிறந்தது; அன்னத்தின் வாயிலாகவே மக்களுயிர்கள் மண்ணிடை வந்து பிறக்கின்றன. ஆதலால் அன்னதானத்திற்கு இணையான ஒன்று இல்லை என்ருர். அன்னதானத்தைக் காலம் அறிந்து, பசியின் அளவு அறிந்து, இடுதல் சிறந்தது. அதினினும் சிறந்தது பிதிரர்கள் தினத்திலே அளித்தல்; அதனினும் உயர்ந்தது காவிரிக் கரையிலே அன்னதானம் செய்தல்; அதனினும் சிறந்தது சிவாலயங்களைச் சார்ந்த இடத்திலே செய்தல் என்ருர்.

மன்னவன் கேட்டுச் சுவாமி! அதிக உன்னதமான தலம் எது என்று வினவினன். பரத்வாசர், அரச! காவிரியின் தென்கரையிலே தர்ப்பாரண்யம் என்றெரு தலம் இருக்

கிறது. அது மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றாலும் சிறந்தது. அத்தலத்தின் பக்கத்திலே பெரிய காடு ஒன்றுண்டு. அதிலே, கள்வன் ஒருவன் இருந்தான். அப்பக்கமாக வருவோர் போவோர்களை அடித்துப் பிடுங்குவது அவன் வழக்கம். ஒருநாள் அவனுக்கு ஒன்றுமே கிடைக்கவில்லை. பசி அடிவயிற்றைக் கிள்ளியது. உடல் சோர்ந்தது, மெலிந்து இவ்வூருக்குப் பக்கத்திலிருக்கும் தீர்த்தக் கரைக்கு வந்து ஒளிந்திருந்தான். அங்கே மேற்கேயிருந்துவந்த வர்த்தகன் ஒருவன் தங்கியிருந்தான். அவன் வழிநடந்த களைப்பால் கொண்டுவந்த கட்டுச்சோற்று மூட்டையைத் தலைக்கு அணையாக வைத்துக்கொண்டு உறங்கினான். கள்வன் ஏதோ மூட்டை; பொன்னும் மணியும் நிரம்ப இருக்கும் என்று எண்ணித் தந்திரமாகத் திருடினான். பக்கத்திலே கொண்டு சென்று அவிழ்த்துப் பார்க்க, அது சோறாயிருந்தது. பசிதீர உண்டு களைப்பாறினான். கட்டமுதைப் பறிகொடுத்த வணிகன், அஞ்சிச் சோற்று மூட்டைக்கே இந்தக் கதியானால் ஏன் பொன் பொருளுங் கொண்டுவரவில்லை என்று கள்ளன் நம்மையே கொன்றால் என்ன செய்வது என்று அஞ்சி, ஊருக்குத் திரும்பினான். அங்கேயும் செம்மையான நெறியிற் பிழைக்கத் தெரியாமையால், கொலை களவு முதலிய பஞ்சமா பாதகங்களைச் செய்து வயிறு வளர்த்து, இறுதியில் இறந்தான். நல்ல சிவத்தலத்திலே பசிக்குச் சோறுகொடுத்த புண்யத்தால் சிவகணநாதர்கள் இவனுயிரைத் திருக்கயிலைக்கு இட்டுச் சென்றனர்.

பாவியாயிருந்த வணிகனுக்கும் அன்னதான புண்ணியம் கிடைத்தது. இதைக்கேட்ட உருசிமன்னன், விதிப்படி முனிவர் பெருமானிடம் உத்தரவு பெற்றுக்கொண்டு யாத்திரா தானமும் செய்து திருநள்ளாற்றுக்குப் பயணமானான். பல தலங்களையும் வணங்கிக்கொண்டு தர்ப்பாரணியத்திற்கு வந்தான். பிரமன், நளன், கலிங்கமன்னன் முதலியவர்கள் செய்த திருக்கோயில் திருப்பணிகளைக் கண்டான். அவற்றை முன்னிலும் பதின்மடங்கும் அழகும் தெய்வீகமும் புனிதமும் விளங்கத் திருப்பணி செய்தான். மார்கழி மாதப் பூரணையில் அன்னக்கொடி ஏற்றி, எல்லாரையும் அழைத்து அன்னதானம் செய்வித்தான். சிவனடியார்களுக்கும் சிவஞானிகட்கும் வேண்டுவன நல்கி, அடியார் கூட்டத்தோடு ஆலயம்

அடைந்து அன்புருவாய் நின்று வழிபடுகின்றபோது நள்ளாறுடைய பெருமான் வெளிப்பட்டு "அரசனே நீ வேண்டும் வரம் யாது?" என்று வினவினர்.

அரசன், பெருமானே என்றும் நின் திருவடிக்கண் மாருத அன்பும், ஏற்பவர்க்கு இல்லை என்னாத மனமும், மாருத கொடையும் வேண்டும் என்று வணங்கினன். பெருமான் அங்ஙனமே யாகுக என அருள்செய்தார். அரசன் அன்ன தானம் செய்துகொண்டு பல ஆண்டு இத் தலத்திலேயே இருந்து, இறந்து, மீட்டும் இத்தலத்திலேயே பிறந்து சிவஞானியாய்ச் சிவசாயுச்சியம் பெற்றான்.

---

# அக்கினி வண்ணன் வரலாறு

எல்லா வளங்களும் நிறைந்த காம்பீலி நகரில் தண்டிகுப்தன் என்ஜெரு வணிகன் இருந்தான். பேராசனுக்குச் சமமான பெருஞ் செல்வன்; கொடை, கருணை, நேர்மை முதலான குணங்களுக்கு உறைவிடமானவன். இழிதொழில் செய்யாது பொருள் ஈட்டுபவன். பிறர் பொருளையும் தம் பொருள் போலப் பாதுகாக்கும் பெருங்குணம் படைத்தவன். அழகு வீரம் இவற்றிலும் குறைவில்லாதவன். எல்லா வகையினும் ஒத்த ரூபவதியான மனைவி யிருந்தும் அவர்களுக்கு மக்கள் இல்லாக் குறை பெருங் குறையாக இருந்தது.

தண்டிகுப்தன் காசிமுதல் கன்யாகுமரிவரை யாத்திரை செய்தும் தானதருமங்கள் பல செய்தும் தவம் நோன்பு பல இயற்றியும் இரண்டு பிள்ளைகளைப் பெற்றான். அக்னிவண்ணன் எனப் பெயரிட்டான், நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்த்தான். அவர்கள் காளைப்பருவம் எய்தினர். அந்நிலையில் தண்டிகுப்தன் மரணம் அடைந்தான். மக்கள் இருவரும் தந்தையையிழந்த துன்பத்தைத் தாங்கமாட்டாமல் தரையில் விழுந்து புரண்டு அழுதனர். அதனைக்கண்ட உறவினர் மக்களைத் தேற்றிப் பிதிருக்கடன்களைச் செய்யச் சொன்னார்கள். சிலநாள் கழிந்தபின் அக்னி வண்ணர் இருவரும் தந்தையின் வாணிகத்தையே தொடர்ந்து

நடத்திவந்தனர். தந்தையைக் காட்டிலும் பெரும் பொருளீட்டினர். சுற்றத்தார்கள் இவர்கள் திறமையைக்கண்டு, குலத்திற்கும் அழகுக்கும் தகுதிக்கும் ஏற்ற பெண்களைத் திருமணம் செய்வித்தனர். மக்கள் இருவரும் தத்தம் மனைவியாருடன் நேர்மை தவறாது இல்லறம் நடத்திவந்தனர். புகழும் பொருளும் வளர்ந்தன.

இப்படி யிருக்குங் காலையில் இவர்களுடைய உடலழகையும் பணப்பெருக்கையும், ஆண்மைச் சிறப்பையுங் கண்ட விலைமாதர்கள் மோகவலை வீசி, இவர்களைப் பிடித்தனர். கலவியில் வல்ல காமியர்கள் ஆக்கினர். கைப்பொருளனைத்தையும் கவர்ந்தனர். அதனை யறியாமலே அக்கினிவண்ணர் இருவரும் பரத்தையர்க்கு அடிமைகளாய்த் தம் கற்பரசிகளாகிய மனைவியரைக் கனவிலும் கருதாமல் — வீட்டுப் பக்கமும் போகாமல் வாழ்ந்தனர்.

பொருளனைத்தையும் இழந்து, உடலும் மெலிந்து — அழகுங்கெட்டு அக்கினிவண்ணரிருவரும் உண்ண உணவும், உடுக்க உடையும்இன்றி வருந்தினர். இருந்தாலும் கொடுப்பாரில்லாத நிலையும் ஏளனமும் விளைந்தன. பின்பு வயிறு வளர்க்கக் களவு செய்தனர். காவலர் இவர்களைச் சிறைப்படுத்தினர். இவர்கள் காவலர் சோர்ந்திருக்கிற சமயம் பார்த்து விலங்குகளை முறித்துக்கொண்டு சிறையினின்றும் தப்பி ஓடிப்போய்க் காட்டை யடைந்தனர். அங்கே ஒளிந்திருந்து வழிப்பறி கொள்ளைசெய்து வயிறு வளர்த்து வந்தனர்.

ஒருநாள் இரவு ஒழுக்கங் குன்றாத முனிவர் ஒருவர் அவ்வழியே வந்தார். இவர்கள் இருவரும் அவரை வழிமறித்துத் தொண்டையைப் பிடித்து அமுக்கிக் கொல்ல முயன்றனர். அந்தணர் அச்சமின்றி இவர்கள் நிலைமைக்கு இரங்கித், தான தருமந் தெரிந்தவர்கள் இப்படிக் கொலைசெய்யத் துணிய மாட்டார்கள். வழிப்பறிக் கொள்ளையும் அடிக்கமாட்டார்கள். முன்பிறப்பில் ஏதோ நல்ல புண்ணியங்களைச் செய்தமையால் மனிதராகப் பிறந்திருக்கிறீர்கள் இருந்தும் இப்படி அக்கிரமஞ் செய்யத் துணிந்துவிட்டீர்களே! எப்போது உங்களுக்கு நல்ல கதி கிடைக்கப்போகிறது! என்று பரிதாபப்பட்டார். கள்வர்கள் நல்ல குலத்தில் பிறந்த வணிகர்களாகையால்

இவ்வுபதேசங்களைச் சிறிது சிந்தனைக்குக் கொண்டுவந்தார்கள். தாங்கள் செய்யும் தொழில் தங்களுக்கே வெட்கமாயிருந்தது; தலை கவிழ்ந்து நின்றார்கள்.

முனிவர் ஓரளவு இவர்களுள்ளத்திலும் தம் உபதேசம் தைத்திருக்கிறது; செவியையும் சிந்தையையும் திறந்திருக்கிறது என்பதை உணர்ந்து, பிள்ளைகளே கள்ளர்கள் இந்தப் பிறவியிலே கனவான்களாகப் பிறந்து விளங்கினாலும் மறு பிறப்பில் எரிவாய் நரகத்திற்கு இரையாகிறார்கள். மீண்டும் இழிகுல மக்களாயும், பன்றி, நாய் முதலிய இழிந்த சன்மங்களாயும் பிறக்கிறார்கள். உணவுக்கும் உடைக்கும் அலைகிறார்கள்; அவமானப்படுகிறார்கள்; ஆதலால் எந்தத் தீமைகளையும் எவருக்கும் என்றும் செய்யாதீர்கள். அன்பும் அருளும் இரக்கமும் கொடையும், உழைப்பும் ஊதியமுமே கடவுள் நாம் பிழைப்பதற்குக் கொடுத்த கருவிகள். எத்திப் பிழைப்பது ஏமாற்றம்; ஏதுவும் முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும். நன்றாகச் சிந்தித்துப் பாருங்கள் என்றார்.

அக்கினிவண்ணர் இருவரும் முனிவர் உபதேசத்தில் உண்மையும் உயர்வும் இருப்பதை உளங்கொண்டு, தாயினும் இனிய தயாநிதியே! உண்மையுணர்ந்தோம். இதுவரை எத்தனை பாபங்கள் செய்திருக்கிறோம்! எங்களுக்கே அச்சத்தையும் நாணத்தையும் தருகிறது. எங்களுக்கு நல்வழிகாட்டி ஞானத்தை யூட்டவேண்டும் என்று வேண்டிக்கொண்டனர்.

முனிவர், மனமிரங்கி, அவர்களை நோக்கித் தம்பிகளே! நீங்கள் முன் பிறப்பிலும் இப் பிறப்பிலும் செய்த பாவங்கட்குக் கணக்கே இல்லை. நீங்கள் தூய்மையுற வேண்டுமாயின் ஒரே வழிதான் உண்டு. சோழ நாட்டிலே காவிரிக்குத் தென்கரையிலே ஒன்றரைக் காததூரத்திலே திருநள்ளாறு என ஒரு தலம் இருக்கிறது. மிக மேன்மைவாய்ந்த சிவத்தலம். பிரமன் முதலான பல தேவர்களும் இருடிகளும் வழிபட்டு மேன்மைபெற்ற இடம். சித்தி முத்தி இரண்டையும் ஒருசேர வழங்கும் தலம். நீங்கள் அங்கே சென்று அங்குள்ள தீர்த்தங்களில் முழுகுங்கள்; நாமும் அங்கேயே தங்கலாம் என்று வருவோம் என்றார்.

அக்கினிவண்ணர் இருவரும் முனிவர் மொழிந்த வண்ணம் அங்கே சென்றனர். தீர்த்தங்களில் முழ்கினர். திருக்கோயிலுக்குச் சென்று நள்ளாறனையும் அம்மையையும் வழிபட்டனர். வரும்வழியில் தமக்கு உபதேசித்த முனிவரைக் கண்டனர். முனிவர் மீளவும் அவர்களை அழைத்துச் சென்று சிவதரிசனம் செய்வித்தார். மூவரும் இறைவனைப் புகழ் மாலைகள் சொல்லிப் போற்றினர். இருகண்களும் ஆனந்த நீர் சொரியப் பரவசமாகி வலம் வந்தனர். திருக்கோயிலினின்றும் நீங்கித் தென்பாலிருக்கும் திருமடத்தில் தங்கினர். மூன்றுமாதகாலம் நாடோறும் காலந்தவறாது சிவதரிசனம் செய்து வந்தனர். தீவினைகள் நீங்கின. ஆயுள்முடியத் தேக வியோகம் எய்தினர். இறைவன் கண்ணுதலும் கண்டக் கறையும் சதுர்புசமும், அம்மை பிரியா இடப்பாகமும், உடையவராக இடப வாகனத்திற் காட்சி வழங்கினர். மூவரும் விருப்பு வெறுப்பற்றுப் பணிந்து நின்றனர். இறைவன் மூவருக்கும் மிருத்யுஞ்சய மந்திரத்தை உபதேசித்துச் சாரூபமுத்தியை யளித்தார் என்று சூதர் சொல்ல, முனிவர்கள் தீர்த்தங்களின் மகிமையையும் கேட்க விரும்புகிறோம், அவற்றையும் எமக்கு அருளவேண்டும் என்றார்கள், சூத முனிவர் தீர்த்த மகிமையையும் சொல்லத் தொடங்கினர்.

---

# தீர்த்தங்களின் மகிமை

இந்திரன், அக்கினி, யமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன் என்னும் திசைக் காவலர் எண்மரும் இத்தலத்தில் தங்கள் தங்கள் திசையிலே தங்கள் பெயரால் தனித்தனியே சிவலிங்கமும், தீர்த்தமும் அமைத்து வழிபட்டனர். பிரமன், தர்ப்பாரண்யேசருக்குக் கிழக்குத் திசையிலே ஓரம்பு விழுந் தூரத்திலே தன் பெயரால் ஒரு சிவலிங்கத்தையும் தீர்த்தத்தையும் தாபித்தான். திருமால் அக்கினி திக்கில் ஒரு சிவலிங்கம் அமைத்து வழிபட்டார். காசியபன் நள்ளாறருக்குத் தென்திக்கில் ஒரு சிவலிங்கம் தாபித்து வழிபட்டான். வாயுதிக்கில் நளன் தனக்கு நன்மையுண்டாம் வண்ணம் ஒரு கிணற்றைத் தோண்டி அதன் வடபக்கத்தில் ஒரு சிவலிங்கத்தையும் நிறுவினன். அகத்தியனும் உருசி மன்னனும்

அத்திசையிலேயே தம் பெயர் விளங்கச் சிவலிங்கங்களைப் பிரதிட்டித்து வழிபட்டார்கள். அருச்சுனன் வடக்கில் ஒரு சிவலிங்கத்தை நிறுவினன். போச மன்னனும், பாஞ்சால மன்னனும் ஈசான திக்கில் சிவலிங்கங்களை யமைத்து வணங்கினர். இங்ஙனம் இத்தலத்தில் தர்ப்பாரண்யேசரையும் சேர்த்துச் சிவலிங்கங்கள் பதினேழாம்.

அம்மையின் ஆலயத்திற்குத் தெற்கில் சரஸ்வதி தீர்த்தமும், வடக்கிலும் மேற்கிலும் தொடர்ந்து அன்ன தீர்த்தமும் உள்ளன. இவ்வண்ணம் தீர்த்தங்கள் பதின்மூன்றும். இத் தீர்த்தங்களின் நீரைத் தூரத்திலிருந்து தீண்டினும் செய்த பாவங்கள் அனைத்தும் தொலையும்.

பிரம தீர்த்தத்தில் நீராடினல் பிரமபதம் கிட்டும். தனுர் மாதமாகிய மார்கழி மாதத்தில் வைகறையில் நீராடி நள்ளாறரையும் வழிபடின் காக்கைவலிப்பு குன்மம் முதலான பிணிகள் அனைத்தும் காட்டுத்தீயிலகப்பட்ட பஞ்சுபோல அழியும்.

உலகிற்குக் கேடுவருங்காலையில், நளதீர்த்தம், கங்கா கூபம், பிரமதீர்த்தம் இவற்றின் நீர் செந்நிறமாகும். இப்படி ஏதாவதொரு மாதம் நிகழின் நள்ளாறற்குச் சிறப்பு வழி பாடு செய்யின் நீர் தெளியும்.

வாணி தீர்த்தத்தில் ஒரு மண்டலகாலம் முழுகினல் ஆகாயத்திலிருந்து இறங்குகின்ற அமுதம்போல, ஊமர் வாயிலிருந்து கவியமுதம் பொழியும். இது சத்தியம். இதன் நீரில் முழுகியும், அருந்தியும் இத்தலத்து வசிப்போர் கலைகளில் வல்லவர் ஆவர்.

அன்ன தீத்தத்தில் நாடோறும் முழுகினேர் சிவபெருமானுடைய சாரூபம் எய்துவர். பசுக்கொலை முதலிய பாவங்களைச் செய்தவராயினும் அப்பாவங்களைப் போக்கி இன்பத்தை நல்கும். சிங்கமாதமாகிய ஆவணி மாதத்துப் பருவ நன்னளில் இத்தீர்த்தத்தில் முழுகி அகத்திய லிங்கத்தையும் வழிபட்டவர்கள் மலநீக்கம் பெற்றுப் பரமுத்தியடைவார்கள். தவசிலர்களே! இகம் பரம் இரண்டிலும் இன்பமுடையலாம்.

மாதப் பிறப்புக்களில் நளதீர்த்தத்தில் மூழுகினேர் சிவனைப் போலப் பொன்னிறம் பெறுவர். இம்மை யின் பமும் உண்டாம். நளன் சிவன் கையிலுள்ள சூலத்தைக் கொண்டு உண்டாக்கிய கங்கா கூபத்தைக் கண்ணுற் கண்டாலே போதும், எல்லாக் குற்றங்களும் நீங்கும்.

அமாவாசை, பூர்ணிமையாகிய இரு பேருவா நாள் களிலும் எல்லா நாட்களிலும் கங்கா கூப நீரைக் கொண்டு பெருமானுக்குத் திருமஞ்சனம் செய்வித்தால் சிவசாருபம் கிடைக்கும். தானம் ஓமம் செபம் இவைகளைச் செய்யின் ஒன்று அனந்தமாகிப் பயன் தரும்.

முற்கூறிய வண்ணம் தீர்த்தங்களின் நீர் செங்கிறமான போது அதற்கு உரிய சாந்தி செய்க. இறைவனுக்கும் அபிஷேகம் செய்விக்க. இங்ஙனம் செய்யவில்லையாயின் மன்னர்க்குத் துன்பமாம்.

கங்கா கூபத்தை எண்ணினும், காணினும் நோயகலும், நல்ல கதியுண்டாம்; பொங்கி வழிகின்ற அந்நீரில் மண் ணவர் ஆடினல் பழிபாவங்களின் நீங்கி உயர்ச்சியடைவர்.

இந்திர தீர்த்த முதலான எட்டுத் தீர்த்தங்களிலும் யார் அன்புடனுடினலும், அத்தீர்த்தம் அவர்கட்குச் சிவபதம் தரும்.

பிரமலிங்கத்தை அன்புடன் வணங்கினலும், தரிசித்தா லும், கைகுவித்து வணங்கினலும், கண்டாலும் கேட்டாலும் அவரவர் விரும்பின வண்ணம் வரம் பெறலாம்.

புரட்டாசி மாதத்து மகாளய பட்சத்திலே பிரமதீர்த்தம் நளதீர்த்தம் கங்காகூபம் என்ற மூன்று தடாகங்களிலும் நீராடி நல்லவிதமாகத் தானதருமம் செய்யின், வழியாகக் குலம் தழைத்து வளர்ந்து வரும்.

சித்திரை விஷு முதலான மாதப் பிறப்புகளிலும், இரண்டு உவா நாட்கள் கிரகண புண்ணிய காலங்கள், அட்டமி இவைகளில் முற்கூறிய முக்குளத்தாடுதல் நன்மை பயப்பதாம்.

கொலை களவுகள் காமம் பொய் என்ற ஐம்பெரும் பாதகங்கள் புரிபவர், தருமஞ் செய்வதாகத் தெரிவித்து

அக்கினியிலிருந்து தம் வயிறு வளர்ப்பவர்கள், பெற்றோர் பசித்திருக்க உண்ணும் பாதகர்கள், சிவ பூசைக்கு இடையூறு செய்பவர்கள், அந்தணர் பொருளையும் நிலத்தையும் விரும்புவோர், செய்ந்நன்றி கொன்ற பாதகர்கள், கயவஞ்சகர்கள், போரில் அரசனை மட்டும் தனியே விட்டுத் தாம் தப்பிப்பிழைப்போர், கருவைச் சிதைப்போர், கன்றுக்குப் பால் விடாது கறந்தவர்கள், பசுவைக் காப்பாற்றாதவர்கள், கடன் வாங்கிக்கொண்டு மறுப்போர், பரதாரம் விரும்புபவர்கள், கொடை மறுப்போர், சிசுக்கொலை செய்வோர், பொய்ச் சாட்சி சொல்பவர்கள், புலால் உண்போர், புகழுக்காகக் கல்வி கற்றவர்கள், நுண்ணிய நூற் கருத்துக் கூறும் குருமார்களைக் குறை கூறுவோர், தருக்குற்றோர், சுமைகூலி கொடாதவர்கள், போரிற்கொல்வோர், போர்க்களத்தில் காயமுற்ற பேர்க்குக் கருணை காட்டாதவர்கள், விபூதி, உருத்திராட்சம் முதலான சைவசாதனங்களைத் தாமும் அணியாது, அணிந்தவர்களையும் அவமதிப்போர், சிவலிங்க வழிபாடு செய்ய நாணுவோர், சிவனடியார்களின் பொருள்களைத் திருடுபவர்கள், நல்லோரைப் பொல்லாங்குரைப்புவர்கள், கொடுங்கோலரசர், செங்கோல் பிழைத்தவர்கள், வாழும் மனையில் தீவைப்போர், தாகு செய்வோர், தானியங்களைக் குறைத்தளப்பவர்கள், வஞ்சனை செய்வோர், வழக்கோரம் சொல்வோர், அரசு ஆல் முதலிய மரங்களை யழிப்பவர்கள், அறம்பேசி மறம்புரிவோர், தேவர்க்கு இட்டபொருளைத் திரும்பப் பறித்துக்கொள்ளும் பாவிகள், ஆலயப் பணியாளர்களைத் தம் வீட்டுப் பணி செய்ய ஏவுவோர், கோயிலுக்குரிய குடை கொடி ஆலவட்ட முதலியவற்றைத் தமக்குப் பயன் படுத்துவோர், கோயிலுக்குள் செய்யத்தகாத முப்பத்திரண்டு வகையான குற்றங்களைச் செய்பவர்கள், ஊன் விற்போர், காரணமின்றிப் பெண்டு பிள்ளைகளைத் துறந்தவர்கள், ஆபத்திற்காக்கும் அறிவில்லாதோர், நம்பிக்கை மோசம் செய்வோர் முதலான மகாபாதகர்களும் திருக்குளமூன்றிலும் மூழ்கித் திருநள்ளாறரை வழிபடின் பாவங்களிலிருந்து நீங்கிச் சாரூப முத்தி எய்துவர்.

* சித்திரை மாதத்தில் மாலைப் போதில் வழிபடுவது சிறந்த பயனைத் தருவதாம், சிவபெருமான் திருமுடிக்குத்

தும்பை மலர்மாலை சாத்தினால் மலரொன்றினுக்கு ஒரு கோடியாகப் பல கோடி யாண்டுச் சிவலோக பதவி கிட்டும். தாமரைத் தண்டின் நூலைத் திரியாக இட்டுப் பசுவின் நெய்யால் தீபம் இடுவார் என்றும் சிவபதம் பெறுவர். ஆனி மாதம் பௌர்ணிமையில் அபிடேக ஆராதனை செய்பவர்கள் வையத்தாரேயாயினும் வானுறை யுந் தெய்வத்துள் வைக்கப்படுவர்.

இத்தலத்தில் எதுகாரணமாகவேனும் ஒருநாள் தங்கின் தீயன நீங்கி நல்லன பெறலாம். பெருமானுக்குப் பயன் படும் படிப் பசுவையாயினும் காளையையாயினும் ஆலயத் திற்கு விடுவோர் கோடியுகம் சிவலோகம் ஆள்வர். திருவிழாக்காலங்களில் அன்னதானம் செய்வோர் அன வரதமும் சிவலோகத்தில் வாழ்வார்கள் என்று சூத முனிவர் சொன்னதும் முனிவர்கள் அனைவரும் ஆனந்த பரவசத்தால் எழுந்து நின்று நள்ளாறனைத் தியானித்து மகிழ்ந்தனர்.

---

# விடங்கத் தலங்கள்

## ஏழில் ஒன்று

தேவர்கள் ஒன்றுகூடி அசுரர்களுடன் பாற்கடலைக் கடைந்த காலத்துப் பாற்கடலிலிருந்து முன்னர் விஷந் தோன்றியது. அதனைச் சிவபெருமான் உண்டு, நீலகண்ட ராகிச் தேவர்களைக் காப்பாற்றினார். பின் திருமகளாகிய லட்சுமி தேவியும், சந்திரனும், கற்பக விருட்சமும், காமதேனு வும், உச்சைசிரவம் என்னுங் குதிரையும் தோன்றின. அவற்றில் இலக்ஷ்மி தேவியின் அழகைக்கண்டு திருமால் திருமணஞ் செய்துகொண்டார். வைகுந்தத்திலும் பாற் கடலிலுமாக நித்ய சூரிகளுக்கும் தேவர்களுக்கும் சேவை சாதித்து வந்தார்.

திருமணம் ஆகிப் பல தேவ வருஷங்கள் ஆகியும் அவர் களுக்குப் பிள்ளைப்பேறே இல்லை. புதல்வர் இல்லாத வாழ்க்கை உப்பில்லாத கறிபோலவும், மதியில்லாத வானம் போலவும், நீரில்லாத குளம்போலவும், நீறில்லாத நெற்றி

போலவும் சுவையும் பயனும் அற்ற பாலைவன யாத்திரை போலவும் பயனற்றதாகும் ஆதலால், கவலைகொண்டு எந்தக் காரியத்திலும் மனஎழுச்சி யில்லாமல் வருந்தினர்.

ஸ்ரீமந் நாராயணனைத் தரிசிக்க வந்த பிருகு மகரிஷியானவர், இவருடைய மனச்சோர்வை யறிந்து, பரந்தாமா! இதற்காகத் தாங்கள் இவ்வளவு கவலைப்படலாமா? வேண்டுவார்க்கு வேண்டுவதே ஈவானும், கருத்தறிந்து முடிப்பானும், வேண்ட முழுதும் தருவானும், பிள்ளையினோடு உள்ள நினைவு ஆயின அனைத்தையும் அளிப்பானும் ஆகிய சிவபெருமானைப் பூசை செய்யுங்கள். காரியங் கை கூடும் என்று உரைத்தார்.

திருமால் அவர் சொன்ன வண்ணமே முறைப்படிச் சிவ பூசனை செய்து வந்தார். பூசைக்குகந்த பெருமானாகிய சிவன், திருமாலின் திருவுள்ளக் குறிப்பை யுணர்ந்து, உமா தேவியாரோடு எழுந்தருளிக் காட்சி வழங்கினர். திருமால் சிவபெருமானை மட்டும் வணங்கித் தன்மனக் குறையை விண்ணப்பித்துக்கொண்டார். பெருமானும் அவ்வாறே அழகு மிகுந்த — ஆற்றல் மிகுந்த — எல்லாரையும் ஆட்டிப் படைக்கும் அறிவாற்றல் வாய்ந்த பிள்ளை ஒன்று உனக்கு உண்டாகும். அவன் எல்லா உயிர்களையும் ஆளுந் திறமை மிக்கவனாக விளங்குவான் என்று வரங்கொடுத்து மறைந்தார்.

இதனைக்கண்ட உமாதேவியார், திருமால் அம்மையப்பராக வந்திருந்தும் தன்னை விலக்கிச் சிவபெருமானை மட்டும் வழிபட்டாரே என்று எண்ணி, திருமாலே! இறைவன் அருளின் வண்ணம், ஏழுலகங்களும் ஆச்சரியப்படும்படியான அழகான ஆண் மகன் பிறப்பான்; ஆனால், அப்பிள்ளை யாருடைய அருளால் பிறந்தானோ அவராலேயே இறப்பான் என்று சாபங்கொடுத்து மறைந்தார்.

திருமால் தம் குற்றத்தை யுணர்ந்து, அம்மையப்பர், கந்தர் ஆகிய மூவரையும் ஒரே பீடத்தில் எழுந்தருளச் செய்து, சோமாஸ்கந்தமூர்த்தியாகப் பல ஆண்டு வழிபட்டு வந்தார். அதன் பயனாக அவர் வழிபட்டுவந்த அந்த நிலையிலேயே வெளிப்பட்டுக் காட்சி வழங்கினர்,

திருமால், அம்மையே! அப்பா! ஒப்பிலாமணியே! அன்பினில் விளைந்த ஆரமுதே! அடியேன் தேவரீர் திருவருள் ஆணையின் வண்ணம் அழகான ஆண்மகனைப் பெற்றேன். ஆனால் தேவரீர் வரங்கொடுத்த காலத்து, உமாதேவியார் அப்பிள்ளை தேவரீர் கோபத் தீயாலே சாகக்கடவது என்று சபித்திருக்கிறாரே! அச்சாபத்தை நீங்கள் இருவருமாக நீக்கியருளவேண்டும் என்று வேண்டிக் கொண்டார். சிவபெருமான், அன்பரே! வருந் தாதீர், தேவி கொடுத்த சாபத்தால் அப்பிள்ளை இறந்து போனாலும், என் வரத்தால் மீளவும் உயிர்பெற்று எழுந்து எல்லா உலகத்திலும் உள்ள எல்லா உயிர்களிடத்திலும் ஒளிந்து நின்று அவைகளின் மனத்திலேயே ஆசை வடிவாகத் தோன்றி ஆட்டிப் படைப்பான். ஏன் உம்மையே கூடப் பிருந்தை என்பவளோடு கூட்டி ஆட்டிவைக்கப் போகிறானே! ஆதலால் கவலை கொள்ளவேண்டாம் என்று கூறி மறைந்தார்.

திருமால், சோமாஸ்கந்தமூர்த்தியின் திருவருளைப் போற்றிப் புகழ்ந்து கணமும் விட்டுப்பிரிய மனமின்றித் தம்மார்பையே இடமாக அமைத்து, அதிலேயே வைத்து எப்போதும் வழிபட்டு வருவாராயினர்.

திருமால் திருப்பாற்கடலில் சேஷசயனத்தின்மேல் சீதேவி பூதேவி இருவரும் இருமருங்கும் வீற்றிருக்கச் சயன திருக்கோலத்தில் இருக்கும்போது இந்திரன் சென்றான். திருமாலை நோக்கிப் பெருமானே! தேவரீர் திருவருளால் பல்லாயிரம் ஆண்டுகளாக இந்திராணியுடன் தேவலோக அரசாட்சியைச் செய்து வருகிறேன். திருவருளால் எனக்குக் எந்தக் குறையும் இல்லை. பிள்ளையில்லாக் குறைதான் பெருங்குறையாக இருக்கிறது. அதனைப் போக்கும் உபாயத்தை உபதேசிக்க வேண்டும் என்று வேண்டிக் கொண்டான்.

திருமால், இந்திரனே! கவலைப்படாதே. இதோ என் மார்பகத்தில் அசைந்தாடும் பெருமானாக விளங்கும் சோமாஸ்கந்த மூர்த்தியை உனக்குத் தருகிறேன். இம் மூர்த்தியை யான் என் உயிரைக் காட்டிலும் மேலாகப்

போற்றி வருகிறேன். இவர் என் குறையைப் போக்கினர்: இவரை வழிபட்டே யான் மன்மதனைப் பிள்ளையாகப் பெற்று மகிழ்ந்தேன். நீயும் வழிபாடு செய். மகனைப் பெற்று மகிழலாம் என்று சோமாஸ்கந்தமூர்த்தியை அவனிடம் கொடுத்தார்.


இந்திரன் சோமாஸ்கந்தமூர்த்தியைப் பெற்று மட்டற்ற மகிழ்ச்சி யடைந்தான். வழிபாடு செய்யும் முறைகளையும் கேட்டு அறிந்தான். அதற்கு உரிய தீட்சைகளையும் பெற்றுக் கொண்டான். தனது தேவருலகஞ் சென்று, நல்ல நாளிலே மூர்த்தியை எழுந்தருளப் பண்ணி வழிபட்டு வந்தான். பல ஆண்டுகள் கழிந்தன. சோமாஸ்கந்த மூர்த்தியாக இருந்து பூசையை ஏற்றுக் கொண்ட பெருமான் அவன் முன்னே வெளிப்பட்டு நீ வேண்டிய வரம் யாது என்று வினவினர்.

இந்திரன், தேவரீர் திருவருளால் செல்வத்தாலும் சிறப்பாலும் குறைவின்றியுள்ளேன். ஆனலும் எமக்கு ஒரு புதல்வன் இல்லையே என்ற குறை மனத்தை வாட்டுகிறது. தேவலோகம் புண்ணிய பூமியாய், புண்ணியப் பயனுகிய இன்பத்தை மட்டும் அனுபவிக்கும் அனுபவத் தலமானுலும் பூலோக வாசிகளான மனிதர்கட்குக் கிடைத்த புத்திர வாத்சல்யம் என்ற பாக்கியம் எங்களுக்குக் கிட்டவில்லையே என்று கவலைப்படுகிறேன். திருமாலுக்கு அக் குறையை போக்கியருளியதைப் போல எனக்கும் போக்கியருளவேண்டும். நல்ல வீரமும் அறிவும் ஊக்கமும் உள்ள குமாரனை யருளவேண்டும் என்று வேண்டிக் கொண்டான்.

சிவபெருமான் சிறிது நேரம் சிந்தனை செய்து, போக பூமியை ஆளும் அரசனே நீ வாழ்கின்ற உலகம் கன்ம பூமி யன்று; புத்திரர்களை விரும்புவது பிதா இறந்த பிறகு அவர்கள்! நல்ல கதிகளை யடைவதற்காகக் கன்மங்களையும் தன்மங்களையும் செய்வதற்காகத்தானே. இங்கே பிறக்கின்றவர்கள் போக சரீரமே படைத்தவர்கள் தாயின் வயிற்றிலே தோன்றுமல் போக சரீரத்தைப் பொருந்தி வந்த புண்ணியாத்துமாக்கள். இங்கே நீ ஒரு மகனை விரும்புவதானல் எப்படி இயலும். திருமாலுக்கும்கூட மன்மதன் திருமகள் வயிற்றில் உதித்த மகனு? இல்லையே!




ஸ்ரீதர்ப்பாரண்யேஸ்வர சுவாமி ஆலயத்தின் ஓர் தோற்றம்



சப்தவிடங்கத்தலங்களில் ஒன்றான திருநள்ளாறு
ஸ்ரீ ஜண்பகத் தியாகராஜஸ்வாமி



ஸ்ரீ சனீஸ்வர பகவானின்
காக வெள்ளி வாகனம்

உள்ளத்தில் உருவாகத் தோன்றியவன்தானே! அதுபோல் உனக்கும் உன் மனைவிக்கும் ஒருமகன் தோன்றுவான். அவன் உன் வெற்றிகள் அத்தனைக்கும காரணமாவான். ஆதலால் அவனுக்கு ஜயந்தன் என்று பெயர் வை. நீ தவம் செய்து பூசை செய்து பெற்றபிள்ளை உனக்குப் பின் வருகின்ற இந்திரர்கள் அத்தனை பேருக்கும் மகனாகவே விளங்குவான் என்று அருளிச்செய்து மறைந்தார்.

இந்திரனும் மகிழ்ந்து மகன் தோன்றப்போகும் நாளை எதிர்நோக்கிச் சோமாஸ்கந்தமூர்த்தியை வழக்கம்போல வழிபட்டு வந்தான். பூலோகத்திலே சேர நாட்டிலே ஒரு மன்னன் இந்திர பதவியை விரும்பி நூறு அஸ்வமேத யாகங்களைச் செய்வதாகச் சங்கற்பம் செய்து கொண்டு எண்பத்திரண்டு யாகங்களைச் செய்து முடித்தான். அதற் குள்ளாக அவன் வாழ்நாள் முடிந்து விட்டது. யாகங் களைச் செய்த புண்ணியத்தால் அவன் யாதனா சரீரம் என்னும் தேவவடிவை எடுத்துக்கொண்டு தேவலோகஞ் சென்றான்.

தேவேந்திரன் தன்னைப்போலவே உடலமைப்பும், ஒளி யும் உடைய இவனைப் பார்த்து வியந்து இவனே இறைய வனால் அனுப்பப்பெற்ற என் மகனாக இருத்தல் வேண்டும் என எண்ணி, இறைவன் அருளிய வண்ணம் அவனுக்குச் சயந்தன் எனப் பெயர் சூட்டித் தன் அரண்மனையிலே இருக் கப் பணித்தான். தான் வேண்டியபடியே பிள்ளையைத் தந்த சோமாஸ்கந்த மூர்த்தியை முன்னிலும் பன்மடங்கு பத்தி யுடன் பூசித்து வந்தான்.

இப்படி யிருக்குங் காலத்திலே ஒருநாள் அசுர அரசன் ஒருவன் இந்திரன்மீது படையெடுத்து வந்தான். அதனைக் கண்ட இந்திரன் வியாழபகவானிடம் ஆலோசித்தான். 'வியாழன் இவனைவெல்ல உன்னால் முடியாது. மறைக்காடு என்னும் வேதாரண்யத்தில் உள்ள மணவாளப் பெருமா னுடைய திருவருளை முழுதும்பெற்ற மன்னன் ஒருவன் முசு குந்தன் என்னும் பெயரோடு சோழநாட்டை யரசாண்டு வருகிறான். அவனை யழைத்துவந்து இவனைவென்று விண் ணரசை நிலைநாட்டும்படி வேண்டிக்கொள்' என்றார்.

இந்திரனும் அவ்வாறே தன் தேர்ப் பாகனுகிய மாதலியை யனுப்பி, முசுகுந்தனை அழைத்துவரச் செய்து, தன் பக்கத்திலே இருக்கச்செய்து எல்லா உபசாரங்களையும் செய்தான். தன் குறையைத் தெரிவித்துக் கொண்டான்.

'போர்' என்ற உடனே தோள் தட்டி எழும்பும் வீரத் தமிழரசனுகிய முசுகுந்தன், இந்திரன் தந்த படைகளுடன் கிளர்ந்தெழுந்து, மூன்று சாம நேரத்திற்குள் அசுரர்களைக் கொன்று, வெற்றி மாலையுடன் இந்திர சபைக்கு வந்து இந்திரனை வணங்கி நின்றான்.

வெற்றியால் பெருமகிழ்ச்சியடைந்த தேவேந்திரன் முசுகுந்தனைத் தன் ஆசனத்திலேயே உடனிருக்கச் செய்து ஆடல் பாடல்களாலும் அமுதம்போன்ற உணவுவகையாலும் பட்டம் பரிசுகளாலும் மகிழ்ச்சியூட்டி நன்றியும் கூறினன். தான் வழிபடும் சோமாஸ்கந்த மூர்த்தியையும் வழிபடச் செய்தான்.

முசுகுந்தன் இந்திரன்வீட்டு விருந்தினனுகச் சிலநாள் இருந்து, தன் ஊருக்குப்போக விடைகேட்டான். இந்திரன் 'உமக்கு என்ன தேவை? கூசாமற் கேளும்; என் நாட்டையே மீட்டுக் கொடுத்த உமக்கு நான் எதுவும் கொடுக்கச் சித்தமாக இருக்கிறேன்; விரைந்து கேளும்' என்றான்.

முசுகுந்தன், மண்ணுலகில் சோழநாட்டில் இல்லாத அருமையான பொருள்கள் இங்கு ஒன்றுமில்லை. ஆதலால் தேவரீர் வழிபடும் சோமாஸ்கந்தமூர்த்தியைத் தந்தாற் போதும். நான் சோழநாட்டுத் தலை நகரிலே எழுந்தருளச் செய்து, சிவாகம விதிப்படிப் பூசனை செய்துவர ஏற்பாடுகள் செய்வேன் என்றான்.

இந்திரன் இதனைக் கேட்டவுடன், அயர்ந்து என்ன செய்வது என்று அறியாமல் தவித்தான். சிறிது நேரங் கழித்து, அப்படியே செய்வோம் நாளைக்கு நீர் மண்ணுலகம் செல்லலாம் என்று இருப்பிடத்திற்கு அனுப்பிவைத்தான்.

பின்பு, தெய்வத் தச்சனுகிய மயனை அழைத்து 'நாம் வழிபடும் சோமாஸ்கந்த மூர்த்தியைப்போல மேலும் ஆறு

உருவங்களை அமைத்துக்கொடு. நாம் வழிபடும் மூர்த்திக்கும் இதற்கும் சிறிதும் வேறுபாடு இருத்தல் கூடாது. 'நன்ருகத் தியானித்துச் செய்' என்று ஏவினுன்.

மயனும் அப்படியே அமைத்துக்கொடுத்தான். இந்திரன் முசுகுந்த சக்கரவர்த்தியையழைத்து அவற்றைக் காண்பித்து இந்த ஏழுருவங்களில் உனக்கு வேண்டியது ஒன்றை எடுத்துக்கொள்ளும்' என்று உத்தரவிட்டான். முசுகுந்தன் ஏழு உருவங்களையும் உற்று நோக்கி வரும்போது, உயிருக்கு உயிராகவும் உணர்வாகவும் இருந்து இயக்கும் இறைவன் ' இதனைக்கேள் ' என்று அரசன் உள்ளிருந்து உணர்த்தச் சோழமன்னன், இந்திரனுல் பல ஆண்டு பூசிக்கப்பெற்றதும், இந்திரன் திருமாலினிடம் இருந்து பெற்றதுமான மூர்த்தியைக் காட்டி 'இதுவே எனக்கு வேண்டும்' என்ருன்.

இந்திரன் வியந்து, இதுதான் இறைவன் திருவுள்ளம் போலும், இல்லையானுல் இந்த ஏழு மூர்த்திகளுக்குள் இதுதான் வேண்டும் என்று அரசன் கேட்பானு? நாம் பூசனைசெய்யும் நல்ல ஊழ்வினை இவ்வளவுதான் போலும், என்னசெய்வது என்று கலங்கிப் பின் திருவருள்விட்டது வழியெனத் துணிந்து, இந்த ஏழையுமே எடுத்துச் செல்லும். உம் நாட்டில் உமக்கு விருப்பமான இடங்களில் வைத்துப் பூசித்து வாரும் என்று கொடுத்தான். முசுகுந்தன், வறியன் பொருள் பெற்றதுபோலவும், பிறவிக்குருடன் கண் பெற்றது போலவும் அளவில்லாத ஆனந்தமடைந்து, அவற்றைப் பெற்றுக் கொண்டான். இந்திரன் முசுகுந்தனை நோக்கி, அரசே! நான் கொடுத்துவிட்டாலும் பெருமானை விட்டுப் பிரிய எனக்கு முடியவில்லை; ஆதலால் மனித வருடத்தில் ஒருநாள் நான் வந்து வழிபாடு செய்வேன். அதற்கு ஆவனவற்றை நீர் செய்யவேண்டும் என்று வேண்டினுன். தேவராசே! தாங்கள் சொன்னபடி ஆண்டில் ஒருநாள் தேவேந்திர பூசையாக என்றும் விளங்கும். எனக்கு விடை கொடுங்கள் என்று புறப்பட்டுச் சோழ நாட்டை அடைந்தான்.

சோழ நாட்டிலே, சோழர் தலைநகரான திருவாரூரைச் சுற்றிலும் ஆறு தலங்களைத் தேர்ந்து, அங்கே மற்ற ஆறு சோமாஸ்கந்த மூர்த்திகளையும் பிரதிட்டை செய்வித்தான். திருவாரூரிலே பூங்கோயிலிலே சிறந்த மூர்த்தியை எழுந்

தருளுவித்து வணங்கிவந்தான்; அவையே சப்தவிடங்கத் தலங்கள் என்பவை.

திருமால் வழிபட்டதும், தேவேந்திரன் பூசித்ததுமான சோமாஸ்கந்தமூர்த்தியாகிய தியாகராஜ மூர்த்தியை நிறை செல்வத் திருவாரூரிலே பிரதிட்டை செய்வித்து நித்ய விசேட பூசைகட்கு வேண்டிய ஏற்பாடுகளையும் செய்வித்தான். இந்தப் பெருமானுக்கு வீதிவிடங்கத் தியாகராசர் என்பது பெயர். இவர் முதன் முதலில் திருமாலின் மார்பின் மீது வீற்றிருந்து, திருமால் மூச்சுக்காற்றை உள்ளுக்கு இழுக்கும்போதும் வெளிவரும்போதும் முன்னும் பின்னுமாக அசைந்தாடிக்கொண்டே இருந்தார். ஆகையால், இங்கும் அதே நடனத்தை மேற்கொண்டு விளங்குகிறார். இந்த நடனத்திற்கு 'அஜபா நடனம்' என்று பெயர். அஜபா என்றால் செபிக்கப்படாதது; அதாவது, மூச்சு இழுக்கும்போதும் வெளிவிடும்போதும் ஆடும் நடனம் என்பது பொருள்.

இரண்டாவதான மூர்த்தியைத் திருநள்ளாற்றிலே தாபித்தான். அவர் பெயர் நகவிடங்க தியாகர் என்பது. நடனம் உன்மத்த நடனம். உன்மத்தம் பைத்தியம். உன்மத்த நடனம் பைத்தியம் பிடித்தவன் போல முன்னும், பின்னும் மேலுங் கீழுமாகக் குப்புறக் கவிழ்வது போல நடிக்கும் நடனம்.

மூன்றாவதான மூர்த்தியைத் திருவாய்மூரிலே தாபித்தான். அவர் பெயர் நீல விடங்கத் தியாகர் என்பது. நடனம் கமல நடனம். தண்ணீரில் பூத்திருக்கின்ற தாமரை மலர் அந்நீரின் அசைவிற்கு ஏற்பக் கவிழாமலும், நிலை பெயராமலும் அசைவது போல ஆடும் நடனம்.

நான்காவதான மூர்த்தியைத் திருக்காறாயிலில் தாபித்தான். அவருக்கு ஆதி விடங்கத் தியாகர் என்பது பெயர். நடனம் குக்குட நடனம். குக்குடம் கோழி. கோழி வேகமாக நேரோட்டமும், பக்க ஓட்டமுமாக ஓடுவது போல ஆடும் நடனம்; பெட்டையைக் கண்ட கோழி, ஓரவாக்கில் தன் சிறகை விரித்து அதனால் பெட்டையை அணைக்கக் குறுக்காக நடப்பது போலப் பெருமானும், பத்தியானும், உறுதி

யானும் உயர்ந்த ஆன்மாக்களை அணைத்துப் பேரின்ப வீடருளும் நடனம் இது.

ஐந்தாவதான மூர்த்தியைத் திருக்குவளை என வழங்கும் திருக்கோளிலியிலில் தாபித்தான். அவர் பெயர் அவ்னிவிடங் கத்தியாகர் என்பது. நடனம் பிரமர நடனம். பிரமரம்-வண்டு. மலர்ந்த பூவைக் கண்டதும் வண்டு மலரைச் சுற்றிச்சுற்றி வந்தும் மலரின்மீது இருப்பது போலச் சுழன்றும் நிலைக்கு வந்தும் நடிக்கும் நடனம். மலர்ந்த பூ அன்பால் விரிந்த அடியார்கள் மனம் அதனைச் சுற்றி வரும் வண்டு தியாகப் பெருமான்.

ஆருவது மூர்த்தியைத் திருநாகைக் காரோணத்தில் தாபித்தான். நாகைக் காரோணம் என்பது இன்று நாகப் பட்டினம் என வழங்குகிறது. இங்குள்ள தியாகர் சுந்தர விடங்கத்தியாகர். நடனம் பாராவார தரங்க நடனம் என் பது. பாராவாரம் கடல், தரங்கம் அலை. கடல் அலைபோல மேலே எழுந்து முன்பக்கம் சுருண்டு மடங்கி விழுந்தாடும் நடனம். இந் நடனம் அலை சுருண்டு விழுவது போலத் தியாகரால் முன்பக்கம் கவிழ்ந்து கவிழ்ந்து ஆடப்படுவது. கடல்அலை புரண்டு சுருண்டு வீழினும் தன் எல்லை கடவாமல் கரையிலுள்ள பொருள்களைக் கடலுக்குள் இழுத்துச் சென்று மறைப்பது போலப் பெருமானும் தன் நிலையில் பிரியாமல், ஆன்மாக்களாகிய நம்மைச் சிவானந்தமாகிற பெருங்கடலில் அமிழ்த்துகின்ற அற்புதமான நடனம் புரிகின்றார் என்பதாம்.

ஏழாவதான மூர்த்தியைத் திருமறைக்காடு என்னும் வேதாரண்யத்தில் தாபித்தான். அவருக்குப் புவனிவிடங் கத்தியாகர் என்பது பெயர். நடனம் ஹம்ச நடனம். ஹம்சம் அன்னம். அன்னம் போல மெது மெதுவாக உடலை யசைத்து அசைத்துச் செல்லும் மந்த நடனம். இந்த நடனத்தில் ஒரு சிறிதும் களைப்புத் தோன்றாது.

இங்ஙனம் பெருமான் தியாகேசராக விளங்கி நடனம் புரியும் தலங்கள் ஏழுனுள் திருநள்ளாறும் ஒன்றாகும்.

விடங்கர் என்பதற்குத் தானே தோன்றியவர், சுயம்பு மூர்த்தி என்பது பொருளாகும். டங்கம்—உளி, விடங்கர்— உளி தீண்டாமலே உருக்கொண்டவர் என்பது பொருளாம். மயன் இந்திரன் ஆணையின் வண்ணம் மனத்தாலேயே செய்த மூர்த்திகளாதலின் விடங்கர் எனப்பட்டார்கள்.

இத்தலத்திலுள்ள மூர்த்தி நக விடங்கர் எனப் பெயர் பெறுவர் என்பது முன்னரே குறிக்கப் பெற்றது. நகம்—மலை; நக விடங்கர்—மலைமேல் விளங்கும் சுயம்பு மூர்த்தி; தவத்தாலும், தியானத்தாலும், சிவ பஞ்சாக்கர செபத்தாலும், சிவபுண்ணிய சிலங்களாலும் மலைபோல் உயர்ந்த அடியார்களின் மனத்தின் மீது தானே தோன்றி விளங்குபவர் ஆதலின் நக விடங்கர் எனப்படுகிறார்.

ஏதோ ஒன்றில் ஊன்றிய மனம் உன்மத்தமாதல் இயல்பு. அங்ஙனமே சிவபெருமான் மீது வைத்த ஆராக் காதலால்—நெடுநாள் அவனருளைப் பெற முயன்று முயன்று, அவ்வருள் கைகூடியும்—கைகூடாதும் இருக்கிற நிலையிலே உண்டாவது பைத்தியம். அடியார்கள், பித்தர் பாலர் பிசாசர் போலிருப்பர்; அடியார்களுக்கும் அன்பர்களுக்கும்—பிறவியால் விளையுந் துன்பங்கள் சேர்ந்து விடக் கூடாதே என்ற உள்ளத்தால் இறைவன் பித்தன் என்று பேச நிற்கின்றார். அதற்கேற்ப உன்மத்த நடனமும் புரிகின்றார். அடியார்களும் முற்கூறியவாறு பித்தர்க்குப் பத்தராகிக் கூத்தாடி அருள் பெறுதல் வேண்டும் என்பது அவர் நடனக் குறிப்பு ஆகும்.

பிற்காலச் சோழர்கள் ஆட்சிக் காலம் வரையில், அந்தந்த நடனங்களும் அந்த அந்தத் தலங்களிலும் தியாகப் பெருமானைத் தூக்கி நின்றாடச் சீபாதந் தாங்கிகளாகப் பரம்பரைச் சைவ வேளாள குலத்தில் தோன்றியவர்களும், விழுப் பெருமாள் என்ற பட்டம் பூண்டவர்களுமாகிய ஸ்தானத்தார்கள் சமய, விசேட, நிர்வாண தீட்சைகள் பெற்றுச் சிவ பூசையும் விரத நியமங்களும் உடையவர்களாக விளங்கினர். அவர்களே தியாகேசர் புறப்பாட்டுக் காலங்களில் வாரையைத் தொட்டு ஆட்டுதற்கு உரிமை பூண்டவர்கள். பின்னர்ப் பல சௌகரியங்களை முன்னிட்டும் உரிமைப் போராட்டத்தை விலக்கவும், அதிகாரப் பெருமையை நிலைநாட்டவும் பலர் பணி செய்ய முன் வந்தனர். அதனால் பண்டைய நடன முறை நழுவிப் போயிற்று. அதனால் இத்தலத்து நடனமுறை ஏதோ ஒரு வகையாக நடைபெற்று வருகிறது. இந்த நடனத்திற்கேற்ற ஜதி முறைகளும் இருந்தன.

# சுற்றுத் தலங்கள்

## 1. தக்களூர் :

இது திருநள்ளாற்றிலிருந்து கிழக்கே ஒன்றரைக்கல் தொலைவில் தெற்குநோக்கிப் பிரியும் மட்சாலையில் 1 பர்லாங் தூரத்தில் உள்ளது. சிறிய கோயில். நகரத்தாரால் திருப்பணி செய்யப்பெற்றுப் பல ஆண்டுகள் அதாவது 70 வருடங்களுக்கு மேல் ஆயினமையின் மிகச் சிதிலமாக இருக்கிறது. ஆயினும், சுற்று மதில்களும் மண்டபங்களும் நன்றுயுள்ளன.

இது வைப்புத் தலங்களில் ஒன்று. அப்பர் சுவாமிகள் க்ஷேத்திரக்கோவைத் திருத்தாண்டகத்தில் "சடைமுடி சாலைக்குடி தக்களூர் தலையாலங்காடு" (தாண்டக க்ஷேத்திரக் கோவைப்பாடல் 3) எனவும், "தருமபுரத்தானைத் தக்களூரானை!" எனவும் அமைத்துப் பாடியுள்ளார்கள். சுவாமி—திரிலோகநாதர், அம்மை—தர்மஸம்வர்த்தனி, ஏனைய கணபதி, சோமாஸ்கந்தர், அம்மன், முருகன், சண்டேசர், பிரதோஷநாயகர் முதலான மூர்த்திகளும் உள்ளனர்.

கோயிலுக்கென்று சொத்தில்லாமையைக் கோயிலின் நிலை தெரிவிக்கிறது. வேறு வரலாற்றுச் சான்றுகள், சித்திர சிற்பங்கள் ஒன்றுமில்லை. நகரத்தார் பார்வையில் ஒருகால பூசை நடந்து வருவதாகத் தெரிகிறது.

## 2. திருத்தருமபுரம் :

இது காரைகோவிற்பத்து புகைவண்டி நிலையத்திலிருந்து தெற்கே ஒருகல் தொலைவிலும், திருநள்ளாற்றிலிருந்து சுமார் இரண்டுகல் தொலைவிலும் உள்ளது. மார்க்கண்டேயரைக் கொல்லவந்து, சிவபெருமானையும் அவமதித்துக் காலபாசம் வீசியிழுத்த பாவம் நீங்கத் தருமராசன் பூசித்துப் பேறுபெற்றமையால் திருத்தருமபுரம் என வழங்குவதாயிற்று.

சுவாமி பெயர்—யாழ்மூரிநாதர். அம்மை—மதுரமின் அம்மை. அம்மைக்கு தேனமிர்தவல்லி, சதாமதுராம்பிகை

என்ற மறு பெயர்களும் உள்ளன. தீர்த்தம்—தருமதீர்த்தம். சுவாமியம்மன், திருநீலகண்டயாழ்பாணர் அவர் மனைவியார் முதலியோர் உருவங்கள் உள்ளன.

இத்தலம் திருநீலகண்டயாழ்ப்பாணரது தாய்மாமனூர் ஊர். பாணர் திருஞானசம்பந்தப்பிள்ளையாரோடு இத்தலத்திற்கு எழுந்தருளியபோது பாணரின் சுற்றத்தார்கள் பாணர் யாழ் வாசிக்காவிடில் நாயனார் பாடல் சிறப்பதெங்கே? என்று எள்ளிப் பேச,—அதைக்கேட்ட பாணர் உள்ளம் வருந்தி ஞானசம்பந்தப் பிள்ளையாரிடம் தெரிவிக்க, அவர் மாதர்மடப்பிடி என்னும் யாழின் வலிமையைச் சோதிக்கும் யாழ் மூரிப்பண்ணைப் பாடியதாக வரலாறு. ஆலயம் மிகச் சிறியதாகச் சுற்றுமதில் முதலியனவும் திருப்பணி செய்யப் பெற்று மிக நல்ல நிலையில் உள்ளது. நாடோறும் நாலு காலபூசை நடந்து வருகிறது. இதன் பரிபாலனம் முழுவதும் திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்தைச் சார்ந்தது. திருநள்ளாற்றிலுள்ள கட்டளைத் தம்பிரான் அவர்களுடைய பார்வையில் உள்ளது.

### 3. காரைக்கால் :

இங்கிருந்து கிழக்கே மூன்று மைல் தூரத்தே காரைக்கால் என்னும் தலம் இருக்கிறது இது புதுவை மாநிலத்தின் ஒரு மாகாணமாகும். இங்கே நிர்வாக அதிகாரி அலுவலகம் (அட்மினிஸ்டேட்டர் ஆபீஸ்) முதலான அரசியல் அலுவலகங்கள் அனைத்தும் உள்ளன. உயர்நிலைப் பள்ளிகள் பலவும், மாடர்ன் காலேஜ் என்ற கல்லூரியும், பல தொடக்கப் பள்ளிகளும், ஆசிரியர் போதனமுறை பயிற்சிப் பள்ளியும் உள்ளன. கடற்கரையைச் சார்ந்த ஏற்றுமதி இறக்குமதி செய்தற்குரிய சிறந்த வணிகத்தலம்.

பெரிய புராணத்தில் இங்கு வாழ்ந்த வணிகப் பெருமக்களின் சிறப்பும் நேர்மையும் நீதி தவறாத செல்வ வளமும் தெய்வ நம்பிக்கையும் விரிவாக விளக்கப் பெற்றுள்ளன. காரைக்கால் அம்மையார் என்னும் புனிதவதியார் சிறந்த முறையில் இல்லறம் நடத்திச் சிவபெருமானுக்கே அன்னம் அளித்து தெய்வத் திருவருள் பெற்ற திருத்தலம்.

**காரைக்கால் அம்மையார் வரலாறு :**

காரைக்காலிலே வணிகர் குலத்திலே தனதத்தர் என்னும் வணிகர்க்கு மகளாகப் புனிதவதியார் தோன்றினர். மணப் பருவத்தை அடைந்தார். தாய் தந்தையர்கள் தங்கள் மரபுக்கேற்றவாறு நாகையில் வாழ்ந்த நிதிபதியாகிய ஒரு வணிகன் மகன் பரமதத்தனுக்கு மணம் முடித்தனர். தங்கள் குல வழக்கப்படிக் காரைக்காலிலேயே அவர்கள் இல்லறம் நடத்தத் தனியே வீடு, அளவற்ற செல்வம் முதலியவற்றைக் கொடுத்து இல்லறத்தை நடத்தச் செய்தனர். புனிதவதியாரும் அவர் கணவரும் சிவனடியார்களைக் காணின் அமுதளித்தும் ஆடை அணிகள் அளித்தும் சிவனடி மறவாத சிந்தையர்களாக வாழ்ந்து வந்தார்கள். அங்ஙனம் வாழ்ந்துவரும்நாளில் ஒருநாள் பரமதத்தனைப் பார்க்க வந்தவர் சிலர், இரண்டு மாங்கனிகளைப் பரமதத்தனிடம்கொடுத்தார்கள். பரமதத்தன் அதை வாங்கி வீட்டிற்கு அனுப்பினன். அந் நிலையில் சிவனடியார் ஒருவர் மிகுந்த பசியுடன் அம்மையார் வீட்டிற்கு எழுந்தருளினர். அவர் வந்த நேரத்தில் அமுது தயாராக இருந்தது; கறி அமுது தயாராக வில்லை. அம்மையார் சிறிது சிந்தித்து, கணவன் கொடுத்த கனிகள் இரண்டில் ஒன்றை வைத்துச் சிவனடியாரை அமுது செய்வித்தார். அடியார் அமுதுண்டு அம்மையாரின் இல்லறச்சிறப்பை மகிழ்ந்து பாராட்டிச் சென்றார். சற்று நேரங் கழித்தபின் கணவனர் உணவு உண்ண வீட்டிற்கு வந்தார். அம்மையாரும் கடமைகள் தவருதபடி உணவுகள் அளித்தார். கனிகளில் இருந்த ஒன்றையும் படைத்தார், கணவனும் உண்டான். கனி மிகச் சுவையாக இருந்தது. அதனல் வணிகன் இன்னும் ஒரு பழம் இருக்குமே! அதனையும் என் இலையில் இடுக என்று கேட்டான். அம்மையார் மற்றுமொரு கனிக்கு என்ன செய்வது என்று தனித்த ஒரு இடத்திற்குச் சென்று, மெய்ம்மறந்து இறைவன் திருவடிகளைத் தியானித்தார். மிக உயர்ந்த கனி ஒன்று இவர் கையில் வந்திருந்தது. அதனைக் கொண்டுவந்து கணவன் இலையில் இட்டார். அதனை உண்ட கணவன் சுவைமிகுதியாய் இருத்தலை அறிந்து, இது நான் முன்கொடுத்தது அன்று. அதிலும் சிறந்தது; அருமையானது, இதனை எப்படிப் பெற்றாய் என்று மனைவியைக் கேட்டான். அம்மையார் கணவன் வார்த்

தையைத் தட்ட முடியாமல் நடந்ததைச் சொன்னார். கணவன் உண்மையை உணர்ந்துகொள்ளமாட்டாமல், அப்படியானால் இன்னும் ஒரு மாம்பழம் அழைத்துக்கொடு என்று கேட்டான். அம்மையாரும் அவ்வாறே இறைவனை வேண்டிப் பெற்றுக் கொடுத்தார். கணவன் கையில் கனி சென்றதும் காணுமல் போயிற்று. பரமதத்தன் அம்மையாரின் தெய்வீகத் தன்மையை மெச்சி, அவரோடு இருந்து வாழ்வது எமக்கு அடாது என்று, பாண்டிய நாட்டுக்குச் சென்று வேறு ஒரு மணம் புரிந்துகொண்டு இல்லறம் நடத்திவந்தான். பெண்குழந்தை ஒன்று பிறந்தது. தம் மூத்த மனைவி குலதெய்வமாக விளங்குதலின் அவர் பெயரையே அதற்கு இட்டான். இப்படி இருக்கும் நாளில், இச் செய்தியை அறிந்த காரைக்கால் வணிகர்கள் புனிதவதியாரை அழைத்துக்கொண்டு பாண்டிய நாடு வந்து பரமதத்தனிடம் சேர்ப்பித்தார்கள். பரமதத்தன் புனிதவதியாரைக் கண்டவுடன் குல தெய்வத்தைக் கண்டதுபோல அச்சமும் அன்பும் எய்தி, தன் மனைவியோடு திருவடிகளில் விழுந்து வணங்கினான். இதைக்கண்ட அம்மையார் இறைவனை வேண்டிப் பேய் வடிவைப் பெற்றார். எலும்பு உடம்பானார். சிவஞானம் பெற்றார். திருவாலங்காட்டில் எழுந்தருளி உள்ள நடராஜப் பெருமானிடம் அளவில்லா அன்புகொண்டார். அற்புதத் திரு அந்தாதி, திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம் முதலிய நூல்களைச் செய்தார். கயிலைக்குச் செல்ல விரும்பி வடநாட்டைத் தாண்டினார். கயிலை மலை அடிவாரத்திற்குச் சென்றதும் இறைவன் எழுந்தருளியிருக்கும் மலையினைக் காலால் மிதித்து நடத்தல் கூடாது என்று எண்ணித் தலையால் நடந்து சென்றார். இதனைக்கண்ட உமாதேவியார் திருவுள்ளத்து அருள் பிறந்து, இவர் யார்? என்று இறைவனை வினவினார். இறைவன், 'உமையே! வரும் இவள் நம்மைப் பேணும் அம்மைகாண்; இப்பெருமை சேர் வடிவம் வேண்டிப் பெற்றனள்' என்று அறிவித்து, அம்மையே! என்று வாயார அழைத்தார். அம்மையார் அப்பா! என்று கூறிக்கொண்டு சென்று திருவடியைச் சார்ந்தார்; பணிந்தார்; விழுந்தார்; எழுந்தார் சொல்லுவதறியேன் வாழிதோற்றிய தோற்றம் போற்றி என மெய்மறந்து நின்றார்; இறைவன் அவரை நோக்கி அம்மையே நம்பால் இங்கு வேண்டுவதென்ன என்று கேட்டார். அம்மையார்

"எனக்கென்ன வேண்டும், என்றும் தேவரின் திருவடிக்கண் நீங்காத அன்பு வேண்டும்; பிறவாமை வேண்டும்; மீண்டும் பிறப்புண்டானால், தேவரீரை என்றும் மறவாமை வேண்டும்; எப்போதும் தூக்கிய திருவடியின் கீழ் நின்று பாடிக்கொண்டிருத்தல் வேண்டும்" என்று வரம் வேண்டினார். இறைவன் திருவாலங்காட்டில் அங்ஙனமே 'நம் திருவடிக் கீழ் இருந்து ஆனந்தம் அடைவாயாக' என்று அருளிச் செய்தார். அங்கு அம்மையார் எழுந்தருளிப் பதிகம் பாடி நடன தரிசனம் செய்து வந்தார். இங்ஙனம் இல்லறத்திலிருந்து உண்மையான இறைவழிபாடு செய்து உயர்ந்த நிலையை அடைந்த அம்மையார் அவதரித்த தலம் என்பது ஒன்றே இத்தலத்திற்கு ஈடற்ற பெருமையாகும்.

இங்கு அம்மையார் வாழ்ந்த மனை அவரது திருக்கோயிலாக இன்று விளங்குகின்றது. அதே தெருவில் சிறிது தூரம் தெற்கே சென்றால் சிறந்த சிவாலயத்தை அடையலாம். இதற்கு எதிரில் சிறிது தூரத்தில் விஷ்ணு ஆலயம் ஒன்று உளது. இவ்வண்ணம் காரைக்கால் வரலாற்றுப் பெருமையும் தெய்வத் திருவருளும் பெற்ற ஸ்தலம்.

இதன் ஆட்சி முறை வரலாற்றுச் சிறப்பு முதலியவற்றைக் கீழ்வரும் தஞ்சாவூர் கெசட்டியரால் அறியலாம்.

## KARAIKKAL

Karaikkal, situated at the mouth of the river Arasalar, is the chief town of what was for more than 300 years a French Settlement and which has only very recently (1954) become part of Indian territory again. The place was first settled by the French in 1739. They had been making efforts even earlier to obtain a footing in the Tanjore Kingdom, but their attempts had been thwarted by the jealousy of the Dutch at Nagapattinam. In 1738, however, they obtained a chance to carry out their wishes. In that year Saiyaji was driven from his kingdom

owing to the elevation to the throne of his cousin Sidduji by the influence of the Muslim commandant of Thanjavur, Saiyid Khan, and from his asylum at Chidambaram, only 24 miles from Pondicherry, he addressed Dumas, the French Governor, offering to make over to him the town of Karaikal and the Fort Kirean Gurree, ten villages in the adjacent country and all the lands depending upon them, if Dumas would help him to recover his throne. It will be remembered that it was Saiyaji himself who ten years later made a similar offer of Devikottai to the English in return for their assistance in restoring him to his throne. Dumas at once entered into an engagement with Saiyaji, promising to supply a lakh of rupees in silver, to furnish him with arms, gunpowder and other warlike stores and to render him all further assistance in his power. In return for this engagement, Saiyaji sent him a formal deed of cession of Karaikkal. Dumas thereupon despatched two ships of war with troops, artillery and warlike stores to take possession of Karaikkal and to afford the promised assistance. These ships anchored off Karaikkal in August 1738. Meanwhile, Saiyaji had by bribes and promises gained over the principal nobility of Tanjore including the all-powerful Saiyid Khan. The result was Sidduji was suddenly seized in his palace and Saiyaji returned in triumph to Tanjore.

This was the intelligence which greeted the captains of the French ships when they anchored off Karaikkal. It was accompanied by an intimation that the assistance of the French was not required, that Karaikkal was occupied by three to four thousand troops under Khan Saheb, a trusted officer of Saiyaji and that any attempt to land would be considered a hostile act and would be resisted. The French

captains therupon decided to suspend action pending instructions from Pondicherry. Saiyaji had in the meanwhile written in a different strain to Dumas. To him he declared his perfect willingness to surrender Karaikkal, but pleaded his inability to do so as he was not still fully secure in his capital. Dumas was not deceived by these excuses, but being a prudent man he decided to accept them although he knew that his ships were capable of taking Karaikkal by force. He felt sure that a better opportunity would sooner or latter occur. For the time being he was satisfied with the legal cession of Karaikkal which he had obtained from the Raja. He recalled the ships to Pondicherry.

The opportunity soon came. No sooner did Chanda Sahib learnt that Saiyaji had broken his promise to the French than he decided that the moment had arrived for him to cement his alliance with the French. He wrote to Dumas that he was at war with Saiyaji and offered to take Karaikkal with his own troops and to make it over to the French. All this he offered to do as a mark of his friendship to them. Dumas accepted this offer, seeing that it involved no risk to the French and that it did not involve even a suspicion that the French were greedy for territorial expansion. Chanda Sahib detached to Karaikkal for territorial expansion. Chanda Sahib despatched to Karaikkal four thousand horse commanded by Francisco Pereira, a Spaniard in his service, but who was entirely attached to the French interests. The Tanjore forces receded at their approach and Pereira arrived at Karaikkal on 6th February 1739 without any opposition. He, however, found, the fort of Kirean Gurree situated on the river about a mile and a half from the town, occupied by about 400 Tanjore troops. He

attacked this fort and took it the next day and then hastened with news to Pondicherry. Dumas immediately despatched a small vessel with troops and stores under Pereira to Karaikkal. The ship reached Karaikkal in the course of a day and Pereira formally made over to the French, under a deed dated 14th February 1739, the territory previously ceded by Saiyaji. A few days latter Dumas sent a ship of war to Karaikkal with everything necessary to place the settlement in a state of security.

These measures completely overawed Saiyaji. He at once sent messages to Pondicherry, casting all the blame for his previous acts on the Dutch at Nagapattinam and as a token of his sincerity he sent two deeds dated 25th April 1739, one of which contained a ratification of the former treaty and the other an order to the inhabitants of the districts that he had yielded to acknowledge and obey the French. Before, however, his messages reached Pondicherry, he was again deposed. His successor Pratap Singh, however, confirmed Saiyaji's agreement and likewise granted a greater extent of territory to the French. He also suggested that they should fortify it.

In 1749 the French and Chanda Sahib besieged Tanjore and extorted from him a concession of an additional 81 villages in the neighbourhood of Karaikkal. But 1760 the total number of villages in the settlement had risen to 113 by varrious "purchases and cessions". The Fort of Karaikkal was useful to the French as a depot during the war at Tiruchirappalli between 1751 and 1754 and it was confirmed to them by the agreement of the latter year. It was the base for Lally's incursions into Tanjore in 1758 and the English naval demons-

tration against it from the sea was one of the reasons for his retreat. A Sea-fight occurred off the place at this juncture in which the French were defeated.

Early in 1760 the English decided to take Karaikkal and thus to prevent the French from annoying the Tanjore Raja. They sent a force by sea and another from Tiruchirappalli. These succeeded in taking the town as well as a redoubt called Fort Dauphin. The French retired to Fort Lewis and here they were bombarded by the English. The bombardment had the effect of destroying the machinery for raising the drawbridge as well as the gate beyond it, but the English did not know this. At the same time, they came to know that Lally had sent a force to relieve the French. They therefore called upon the French to surrender and this they did at once. The English, however did not retain Karaikkal for a long time. In 1765 they restored it to the French. It was retaken by them in 1778 and was not finally restored till 1814 when it was stipulated that no fortifications should be erected and no more soldiers maintained there than should be necessary for police purposes.

**4. திருத்தெளிச்சேரி:**

*இது காரைக்கோவில்பத்து ரயில் நிலயத்திற்கு வடக்கே சுமார் ½ கல் தொலைவில் உள்ளது. நகரத்தார் திருப்பணி. புதிய-அழகான திருப்பணி. நாடோறும் நான்கு கால பூசைகள் நியமமாக நடைபெற்று வருகின்றன.*

*சுவாமி பெயர்-பார்வதீசர். அம்மை-சுயம்வர தபேஸ்வரி. மேற்குப் பார்த்த சந்நிதி.*

*ஒருகாலத்தில் கொடும் பஞ்சம் நிலவியதாகவும், அப்போது இறைவனே பள்ள உருத்தாங்கித் தெளிகூடையைத்*

தோளிலே தூக்கிச் சென்று விதை தெளித்தார் என்றும், அதனால் அப்பகுதியனைத்தும் நன்றாக விளைந்து வளர்ந்தது என்றும், அதனால் தெளிச்சேரி என்ற பெயர் வழங்கலாயிற்று என்றும் கூறப்படுகின்றது. புத்த நந்தியின் தலையில் இடிவிழுந்த தலமும் இதுவே.

பராசத்தி இமயமலையரசனுக்கு மகளாராகத் தோன்றி, பரமேஸ்வரனையே கணவனாக அடைய வேண்டும் எனத் தவஞ்செய்து பரமசிவனைக் கணவனாகப் பெற்றார். ஆதலால் அம்மையின் பெயர் சுயம்வர தபேஸ்வரி என்றும் சுவாமி பெயர் பார்வதீசர் என்றும் வழங்குவதாயிற்று.

தீர்த்தம்—பார்வதி தீர்த்தம். அம்மை தவஞ்செய்து, சிவபெருமானைப் பூசிக்கின்ற காலத்து நாடோறும் நீராடுவதற்காக அமைத்தது. இதில் வெள்ளிக்கிழமை, மாதப்பிறப்பு முதலான விஷுபுண்ய காலங்கள், நவராத்திரி, சிவராத்திரி தினங்கள் இவற்றில் நீராடிப் பார்வதீசரை வழிபட்டால் எல்லா நன்மைகளையும் எய்தலாம். இதில் அபிரேக்படிகங்கள் மிகுதியாக உறைந்து கிடப்பதால் அதில் முழுகிவர மேகரோகங்கள், குட்டம், குன்மம் முதலியன நீங்கப்பெறும்.

சுவாமிக்குப் பின்புறம் கையில் வில்லும் அம்பும் ஏந்திய கிராதமூர்த்தி, வேட்டுவச்சி, வேட்டைநாய் இவற்றுடன் விளங்கும் சிலைச்சிற்பம் ஒன்று வழிபாட்டில் உள்ளது. இது போன்ற சிற்பம் ஒன்று கருப்பக்கிருகச் சுவரிலும் மேற்குப் பகுதியில் சிறியதாகச் செதுக்கப்பட்டுள்ளது. இத்தலத்தில் இத்தகைய உருவம் அடைய வேண்டிய காரணம் அறியக் கூடவில்லை.

எழுந்தருளும் செம்புத் திருமேனியாக நடராச வடிவங்கள் இரண்டும் சோமாஸ்கந்தர், அம்மை, கந்தன், கணபதி சண்டேசர், பிரதோஷ நாயகர் முதலான உருவங்களும் உள்ளன.

### (iv) இளையான்குடி

இது திருநள்ளாறு பேரளம் செல்லும் பாதையில் திருநள்ளாற்றுக்கு மேற்கே சுமார் 2 கல் தொலைவில் வடக்கு நோக்கிப் பிரிந்து செல்லும் மண்சாலையில் 2½ கல்

தொலைவில் உள்ளது. இடிந்த கருப்பக்கிருகம் மட்டும் மிஞ்சியுள்ள சிவன்கோயிலும், அர்த்தமண்டபமும் மகா மண்டபமும் உள்ள அம்மையின் கோயிலும் உள்ளன. சுவாமி அம்மன் பெயர்கள் ஆராய்ந்தும் அறியக்கூடவில்லை. அங்கேயுள்ளவர்கள் ஈஸ்பரன் கோயில் என்கிறார்கள். சுற்று மதில்கள் அழிந்து, களம், போரடி, மாட்டுக்கொட்டில் எல்லாம் கோவில் எல்லைக்குள்ளேயே விளங்குகின்றன. தீர்த்தம் ஒன்று குடிதண்ணீர்க் குளமாகக் கோயிலுக்கு எதிரில் நல்ல நிலையில் உள்ளது.

கோயிலில் மிகப் பழைமையானவையும், அழகானவையுமான நடராசர், அம்மன், சோமாஸ்கந்தர், அம்மன், வள்ளி தேவசேனா சமேத சுப்பிரமணியசுவாமி, கணபதி, கூத்தாடும் ஞானசம்பந்தர், சண்டேசர் அஸ்திரதேவர் முதலான செம்புருவங்கள் உள்ளன. ஒருகாலத்தில் இக்கோயில் விசேஷமான விழாக்கள், நித்ய பூசைகள் முதலியவற்றோடு விளங்கியிருக்க வேண்டும். அதற்குரிய சொத்துச் சுதந்திரங்களும் இருந்திருக்க வேண்டும் என்று அறியத்தக்க அடையாளங்கள் உள்ளன.

கருப்பக்கிருகச் சுவர்களின் உள்ளும் வெளியும் சில சாசனங்கள் சிதைந்த நிலையில் உள்ளன.

கோயிலின் வடவண்டைப் பிராகாரத்தில் சண்டேசர்க்கு எதிரில் மேற்கு நோக்கி இளையான்குடி மாறநுடைய சிலை வடிவும், மனைவியின் சிலைவடிவும் அமைந்த கோயில் ஒன்றுள்ளது. அதனை இன்று இடையனும் அவன் மனைவியும் என்கிறார்கள். இளையான் இடையன் ஆவதில் ஆச்சரியம் இல்லை.

இளையான்குடிமாறர் கோயிலுக்கு எதிரிலும், அம்மை கோயில் மகாமண்டபத்திலும் தவக்கோலத்தில் பத்மாசனத்தில் உட்கார்ந்திருக்கிற வடிவங்கள் இரண்டுள்ளன. அவை கல்லால் ஆன சிற்பம். அவை இளையான்குடி மாறர் வீட்டுக்கு "மாரிக்காலத்திரவினில், தாரிப்பு இன்றியே பசிதலைக் கொள்ள வந்த சிவபெருமான் திருமேனியாதல் வேண்டும்.

கோயிலுக்குத் தென் புறத்தில் உள்ள ஒரு வயலுக்கு மூளைவாரிக்குட்டை, மூளைவாரிவயல் என்று பெயர். இச் சான்றுகள் எல்லாம் மாறனர் வாழ்ந்த—வயல்வளம் நிறைந்த—வேளாளர் என்பார் விருந்திருக்க உண்ணாத தாளாளராக வாழ்ந்த இளையான்குடி இதுதான் என்ற உறுதியை உண்டாக்குகின்றன.

கோயில் சிறிது சீர்திருத்தப்பெற்று, அறுபத்து மூவரில் ஒருவரான இளையான்குடிமாறர் அவதாரத்தலம் என்ற பெருமையுடன் பூசை முதலியன நடைபெற்றுவருமாயின் நல்லது. அக்காலத்தை, ஆண்டவன் அருள் அண்மையில் அளிக்குமாக.

**அம்பகரத்தூர்:**

இது திருநள்ளாற்றிற்கு மேற்கே—பேரளத்திற்குக் கிழக்கே 5 கல் தொலைவிலுள்ள புகைவண்டி நிலையம் அமைந்த ஊர். கும்பகோணம் காரைக்கால் பஸ்ஸிலும் வரலாம். பத்திரகாளி எழுந்தருளியுள்ள ஊர். ஆண்டுகள் தோறும் வைகாசி-மீ இரண்டாவது செவ்வாய்க்கிழமையில் பெரிய விழாவும்-பூசையும் நடக்கும். பத்திரகாளி வர்ணம் தீட்டப்பெற்ற சுதைத்திருமேனி. உற்சவமூர்த்தியும் உண்டு. இதற்குமட்டும் ஆதி சைவசிவாசாரியர் பூசை. மற்றொரு சந்நிதி பெத்தாரணர் சந்நிதி. இதுவும் சுதைத் திருமேனியே. பத்திரகாளி வடக்குப் பார்த்த சந்நிதி. பெத்தாரணர் கிழக்குப் பார்த்த சந்நிதி. அழகான புதிய கோயில். கோவில் வாசலில் வேப்ப மரங்கள் நிரம்பவுள்ளன. அம்பாளுக்கு ஒரு காலத்தில் எருமைக்கடாவைப் பலி கொடுத்து வந்தார்களாம். இப்போதும் ஆடுபலி கொடுப்பதுண்டு. இப்பூசையைச் செய்பவர் பரம்பரையான பூசாரி ஒருவர். எதிரே ஒரு தீர்த்தமும் இருக்கிறது.

**வரலாறு:**

சிவபத்தியிற் சிறந்த துருவாச முனிவர் ஒருகால் அம்பர்த்தலத்தை வழிபட வந்தார். அப்போது மதலோலை என்றவள் முனிவரைப் பார்த்து மகப்பேறு அளித்தருள வேண்டும் என்று இரந்தாள். அதுகேட்ட முனிவர் கோபங் கொண்டு "நான் சிவதரிசனம் செய்யப் போகிறபோது வழி

யில் வந்து, பெண்களுக்குள்ள இயற்கையான வெட்கத்தை விட்டு மகப்பேறு வேண்டினாய், ஆதலால் அசுர குணம் அமையப்பெற்ற மகனைப் பெறுவாயாக" எனச் சபித்தார். அவளும் அப்படியே ஆகாயத்தில் அம்பரன் என்பவனைப் பெற்றாள். சிறிதுகாலம் சென்று அம்பனையும் பெற்றாள். (அம்பரன் – ஆகாயத்தில் பிறந்தவன். அம்பன்—அழுதழுது அனைவரையும் மயங்க வைத்தவன்) இருவரும் வளர்ந்து பருவம் எய்தினர். அன்னையாகிய மதலோலை தம் குலகுரு வாகிய சுக்கிரன்பால் அழைத்துச் சென்றாள்.

சுக்கிரன் அவர்களைப் பார்த்து அப்பா தம்பிகளே! நம் அசுர குலம் தேவர்களால் சிறப்பற்றுத் தேய்வதாயிற்று. ஆதலால் நீங்கள் இருவரும் அசுரர் குலந்தழைக்க இதோ உள்ள பிரமபுரீசரை வழிபடுங்கள். கடுந்தவத்தைச் செய்து சிறந்த வரங்களைப் பெற்றுத் தேவர்களையழித்து தேவ லோகத்தையும் உங்கள் நாட்டையும் வீரத்தோடு ஆண்டு வாருங்கள் என உபதேசித்தார்.

அம்பரனும் அம்பனும் அவ்வாறே பிரமபுரிக்குச் சென்று பிரமபுரீசரை வழிபட்டுப் பேரருள் பெற்று, உலகங்களை ஆண்டு வந்தனர். அப்போது இவர்கள் இருவரும் தம் குலகுருவின்பாற்சென்று, நாங்கள் மணஞ்செய்து கொள்ள விரும்புகிறோம் என்று தெரிவித்தனர். சுக்கிரன் நாம் அனை வரும் அசுரகுலம். நமக்குத் திருமணம் முதலான சடங்குகள் தேவையில்லை. உலகத்திலே அழகான பெண்களை அப்போதைக்கு அப்போது அடைந்து புணர்வதே நம் வழக்கம். ஆதலால் உங்கள் விரும்பம்போல யாரையும் மணந்து கொள்ளுங்கள், நம் மரபில் எத் தடையும் இல்லை என்றான். குருவின் உபதேசத்தை வேத வாக்காக நம்பிய அம்பரன் அம்பன் இருவரும் ஏவலர் பலரை நாலாபக்கங்களி லும் அனுப்பி அங்கங்குள்ள அழகிய நங்கையர் யாராயிருந் தாலும் கொண்டுவரச்செய்து கற்பழித்து வந்தனர். இதனை யுணர்ந்த மங்கையர் உலகமே மூவுலகத்திலும் நடுநடுங் கியது.

தேவர்கள் அனைவரும் ஒன்றுகூடி, இந்திரனிடம் தெரி வித்தனர். இந்திரன் பிரமனிடம் முறையிட்டான். பிரமன்

இந்திரனையும் உடனழைத்துக்கொண்டு வைகுந்தம் சென்று திருமாலிடம் முறையிட்டான். திருமால் சற்று யோசித்து இக்கணத்தில் இத்தொல்லையை நீக்குதற்குரியவர் திரு அம்பரிலுள்ள பிரமபுரீசரையன்றி வேறு யாருமிலர் என்று துணிந்து, அம்பர் வந்து அவரிடம் விண்ணப்பித்தார்கள். பிரமபுரீசர் அவர்கள் முன்தோன்றி 'உங்கள் மனக்குறையை நாம் உணருவோம் விரைவில் நீக்கி யருள்வோம்' என்று தம் இடப்பாகத்தில் இருக்கும் உமாதேவியை நோக்கினர். முதல்வன் குறிப்புணர்ந்த முதல்வி பராசத்தி தம் கோப நிலைச்சத்தியாகிய மகாகாளி இங்கே இக்கணமே வருக என்று மனத்தில் எண்ணினாள், உமாதேவி காளியை நோக்கி நீ இக்கணமே திருமாலுடன் சென்று அவ்வசுரர்களை அழித்து வருக என ஆணை தந்தாள்.

காளியும் திருமாலும் ஒரு பார்ப்பனக் கன்னியும்—கிழ வேதியனுமாக உருக்கொண்டு அவர்கள் இருக்கும் இடம் சென்று அவர்களை யழிக்கும் வழியையும் காலத்தையும் எண்ணி யிருந்தனர். ஏவலாளர்கள் இவர்கள் இருவரை யுங்கண்டு, இக்கிழவனுடைய மகள் போலும் இவள். திருமகள்கூட இவளிடம் அழகுப் பிச்சை வாங்கவேண்டும் நாம் உடனே ஓடிச்சென்று நம் அரசர்களிடம் தெரிவித்தால் அரசர்கள் பெருமகிழ்ச்சியடைவார்கள். நம்மையுங்கொண் டாடுவார்கள் என்று எண்ணி விரைந்து அரண்மனைக்குட் சென்று நிகழ்ச்சியை அறிவித்தனர்.

அம்பரனும், அம்பனும் வேகவேகமாக ஓடிவந்து கன்னி கையின் அழகைக் கண்டு மயங்கி, அந்தணனைப் பார்த்து இவளை எனக்குத் தரவேண்டும் என்று ஒவ்வொருவருங் கேட்டனர். அந்தணன் புன்சிரிப்புச் சிரித்து எனக்கு இருப் பவள் ஒரே மகள். நீங்கள் இருவரும் எனக்கு எனக்கு என்று கேட்கிறீர்கள்! நான் எப்படி ஒருத்தியை இருவருக் குக் கொடுப்பது. உங்கள் இருவரில் உலகம் மதிக்கத்தக்க வீரன் ஒருவனுக்கே இவள் உரியவள் ஆவாள். ஆதலால் உங்களில் ஒருவர் நிகரற்ற வீரர் என்பதை நிரூபித்துக் காட்டுங்கள். அதுவரை நாங்கள் கோயிலுக்குச் சென்று ஓரிடத்தில் தங்கியிருக்கிறோம் என்று சென்றான்.

அவுணர்கள் இருவரும் கோயிலின் வடபால் சென்று, அந்தணன் தன் மகளோடு இருப்பதை அறிந்து, அந்தணன் உண்மையானவன்தான்! சொன்னபடித் தங்கியிருக்கிறன். ஆதலால் நாம் இருவரும் சண்டையிட்டு, வென்றவன் இவளை யடைவோம் என்று கடும்போர் புரிந்தனர். முடிவில் அம்பரன் அம்பனைக் கொன்று வெற்றியுடன் வந்து அவளைத் தழுவச் சென்றான். கன்னிகை அழகான வடிவத்தைவிட்டுக் காளி யாயினள். கோபக்கனலைக் கக்கினள். அந்நெருப்பு அம்பர னுடைய சிகையையும் மீசையையும் பொசுக்கியது. அஞ்சி ஓடினன். காளியும் அம்பரனை விடாமல் வடகிழக்குத் திசை யில் ஐந்து நாழிகை தூரம் துரத்திச் சென்றாள். அசுரன் ஓடமுடியாமல் தள்ளாடித் திரும்பிப் பார்த்தான். அதுதான் சமயம் என்று பத்திரகாளி அவன் மார்பில் எட்டியுதைத் தாள். அம்பரன் துடிதுடித்துக் கீழே வீழ்ந்தான். காளி அவன் வயிற்றைக்கிழித்துக் குடரை மாலையாக அணிந்து உலகத்திலுள்ள உயிர்களின் துன்பத்தைப் போக்கினள். அதனையறிந்த அசுர சேனை திரண்டுவந்தது. அனைவரையும் கொன்றாள். தேவர்களும் மனிதர்களும் பெருமகிழ்ச்சியடைந் தனர். அம்பரனைக் காளி கொன்ற இடமே அம்பரகரம் என்பது.

திருமால் முதலிய தேவர்கள் பத்ரகாளியைப் பார்த்துத் தாயே! நாங்களும் மக்களும் வணங்கும் வண்ணம் இத்தலத் திலேயே எழுந்தருள வேண்டும். மக்களுடைய துன்பங் களைப் போக்க வேண்டும் என்று வேண்டினர்கள். அங்ஙனமே அம்மை எழுந்தருளியிருக்கிறள் என்பது வரலாறு.

### நெடுங்காடு :

இத்தலம் திருநள்ளாற்றிலிருந்து வடமேற்கே மூன்றுகல் தொலைவிலுள்ளது. பேரளத்திலிருந்து பஸ் போக்குவரத்து உண்டு. பஞ்சாலை, உயர்நிலைப்பள்ளி முதலிய வசதிகள் நிறைந்த இடம். இங்குப் பழைமையான சிவாலயம் உண்டு. இதன் கோபுரம் மிகப்பழைமையானது. சீர்திருத்த வேண்டிய அவசிய நிலையில் உள்ளது. சுவாமி பெயர் தான்தோன்றிநாதர். அம்மை நெடுந்துயரந்தீர்த்த நாயகி. சுமார் 20 ஆண்டுகளுக்குமுன் கோயிலுக்குப் பக்கத்திலுள்ள திடலை வெட்டியபோது அங்கிருந்து நடராசர், அம்மைகள்

மூவர், ஞானசம்பந்தர் முதலான உருவங்கள் கிடைத்தன. அவற்றைக் கோயிலிலே வைத்திருக்கிறார்கள். கோயில் சிறியதாயிருப்பினும் சீர்திருத்தம் செய்தால் மிக அழகாக விளங்கும் என்று தோன்றுகிறது. கோயிலுக்கு எதிரில் சிறு தீர்த்தமும் உள்ளது.

**திருமலைராயன்பட்டினம் :**

இது சிறந்த வரலாற்றுத்தலம். திருமலைராயன் என்னும் சிற்றரசன் ஒருவன் ஆட்சி செய்த இடம். நகைச் சுவைக் கவிஞர் காளமேகப் புலவரும்—அதிமதுர கவிராய ரும் வாழ்ந்த இடம். கவி காளமேகத்தின் கவிதை மழை பொழிந்த ஊர்.*

இது காரைக்காலிலிருந்து தெற்கே 3 கல் தொலை விலும் திருநள்ளாற்றில் இருந்து 6 கல் தொலைவிலும் உள்ளது. குளங்களும் கோயில்களும் நிறைந்த இடம். எல்லாவகையான தொழில் மக்களும் நிறைந்து விளங்கும் இடம்.

திருமலைராயன் மனைவிக்குப் பைத்தியம் பிடித்திருந்த தாகவும்—அதற்குச் சாந்தியாக அவன் முந்நூற்று அறுபத் தைந்து கோயில்களையும் — குளங்களையும் அமைத்தான் என்பதும் செவிவழிச் செய்தி. அவற்றுள் சிறப்பான கோயில்கள் சில. அவற்றுள் ஒன்று சடாயுபுரீசர் கோயில்.

சுவாமி பெயர்—சடாயுபுரீசர். அம்மை......தீர்த்தம் சடாயுதீர்த்தம். இராவணன் சீதாபிராட்டியாரைத் தூக்கி சென்றபோது, அதனைக்கண்ட சடாயு அவனுடன் போரிட் டார். அவன் தன் கைவாளால் சடாயுவின் இரு சிறகுகளை யும் வெட்டி வீழ்த்தினான். அவ்விறகுகள் வீழ்ந்த இடம் இரு குளங்களாயின. அவையே சடாயுதீர்த்தம். சடாயு அதில் மூழ்கிப் பக்கத்திலே சிவலிங்கத்தையும் தாபித்து வழிபட்டு வந்தான். வெட்டப்பட்ட இறகு வளர்ந்தது உடல் வலிமையும் பெற்றான். ஆனாலும் சிவபெருமானைப் பூசித்த

---

* புலவரை அவமதித்தமைக்காக மண்மாரி பெய்தழியச் செய்தாராயி னும், பல பாடல்களை இவ்வூர் பற்றிச் செய்திருக்கிறார். ஆதலின் இவ்வண் மங்கலமாகக் கூறப்பெறுகின்றது.

சிவபுண்யப்பேற்ருலே மீளவும் தம் பழைமையான கடமைகளைச் செய்து காலங்கழிக்க எண்ணுமல் சிவத்தலங்கள் பலவற்றையும் வழிபட்டு, சிவப்பணிகள் செய்து புள்ளிருக்குவேளூர் என்னும் வைத்தீஸ்வரன் கோயிலில் சிவசாயுச்சியமபெற்ருன் என்பது வரலாறு.

இங்குச் சிறந்த சிற்பத்திறம் மிகுந்த சோமாஸ்கந்தர் முதலான பஞ்சமூர்த்திகளும், நடராசர் அம்மை முதலான மூர்த்திகளும் உள்ளனர், சடாயு உற்சவமும் உண்டு.

ஒரு குதிரை வாகனம் உண்டு. மரத்தால் ஆனது. மிகச்சிறந்த வேலைப்பாடு உடையது. வெளிநாட்டவர்கள் பலர் இதனைப் புகைப்படம் எடுத்துச் செல்கிருர்கள்.

இங்கே சட்டைநாதர் என்னும் பைரவமூர்த்தி எழுந்தருளியுள்ள கட்டுமலை ஒன்றுண்டு. இங்கும் சீர்காழி போலச் சட்டைநாதருக்கு புனுகுச்சட்டமும், வடைமாலையும், மணப்பூவும் சாத்தி, சுக்கிர வாரங்களில் விசேஷ வழிபாடுகள் நடைபெற்று வந்தன என்கிருர்கள். சுதையாலான திருமேனியாதலால் அபிஷேகம் இல்லை.

**மண்மாரிபெய்த திடல்:**

இது ஊருக்குத் தென்கிழக்கு மூலையில் உள்ள மிகப் பெரிய பரந்த மைதானம். மணல்வெளி. இங்கே திருமலைராயன் அரண்மனையிருந்ததாகக் கூறுகிருர்கள். மகாகாளியின் அருள்பெற்ற காளமேகப் புலவர் இவ்வூருக்கு வந்தபோது, திருமலைராயன் ஆஸ்தான வித்துவாளுக இருந்த அதிமதுர கவிராயர், இவர் புலமையைக் கண்டு பொருமி. இவரைப் பல துன்பங்களுக்கும்—அவமானத்திற்கும் உள்ளாக்கினர். அவற்றையெல்லாம் வென்ற காளமேகப்புலவர் மன்னன் மதிக்கும் புலவரானுர். அதைக்கண்ட அதிமதுர கவிராயர் மன்னனிடம் இவர் புலமை தெய்வீகமானது என்பதை நான் சம்மதியேன். பழங்கால மரபுப்படி அரிகண்டம் பாடச் சொல்லுங்கள், அதில் அவர் வென்ருல் அவரையும் ஆஸ்தான வித்வானுகவும், அன்புக்கு உரியவராகவும் வைத்துக்கொள்ளுங்கள் என்ருர்.

அரசனும் நீண்டநாள் பழகிய தோஷத்திற்காக ஒத்துக் கொண்டான். ஆணையின்படி அரண்மனை முகப்பிலே—பரந்த வெளியிலே ஒரு பெரிய குழி வெட்டப்பட்டது. தீயிடப்பட்டது. அதில் பெரிய எண்ணெய்க் கொப்பரை வைக்கப்பட்டது. அக்குழியின் பக்கத்திலே மிகவுயர்ந்து வளர்ந்திருந்த ஆலமரத்தின் உச்சிக் கிளையிலே ஏழு கயிற்றாலான ஓர் உறிகட்டப்பட்டது. உறிக்குக் கீழே எண்ணெய்க் கொப்பரை கொதிக்கிறது. கவி காளமேகம், அரசன் ஆணையின் வண்ணம் அவ்வுறியின் மேல் கையில் கத்தியுடன் ஏறி உட்கார்ந்தார். அதிமதுர கவிராயர் 'சமஸ்யை' அதாவது கருத்தோ அல்லது ஈற்றடியோ முதலும் கடைசியுமான எழுத்துக்களோ கொடுக்க அதையமைத்துக் கவிதை, விரைந்து செய்ய வேண்டும். அதாவது கொடுப்பவன் சொல்லி வாய்மூடுமுன், இவர் பாடி முடிக்க வேண்டும். அப்படிப் பாட முடியாவிட்டால் தாம் உட்கார்ந்திருக்கும் உறியின் கயிற்றில் ஒன்றைத் தாமே தம் கையில் உள்ள கத்தியால் அறுத்துக்கொள்ள வேண்டும். ஏழு முறையும் தோற்றால் இறுதிக் கயிற்றையும் அறுத்துக்கொண்டு எண்ணெய்க் கொப்பரையில் விழுந்திறக்க வேண்டும் என்பது அவர்களுக்குள் செய்துகொண்ட ஒப்பந்தம். இதுவே அரிகண்டம் பாடுமுறை.

காளமேகம், காளி பராசத்தியின் அருளால் வென்றார். ஆஸ்தான வித்துவானாகச் சிலநாள் விருதுகள் பெற்று விளங்கினார். ஆனாலும், இக்கொடிய நிபந்தனையை விதித்தமையால் காளிக்கு கோபம் வந்தது. அதனால் திடீரென்று மண்மாரி பெய்து அரண்மனையையே அழித்துவிட்டது. அதுவே இத்திடல்.

இவ்வரலாறு தனிப் பாடல் திரட்டிலே மிக விரிவாக உள்ளது.

இத்திடலிலே அந்த ஆலமரமும், நெருப்புக்குழிக்குட்டையும் ஒரு சிவலிங்கமும் இன்னும் உள்ளன. இச் சிவலிங்கம் பசுபதீசர் என்பது. இது சென்ற ஆண்டுவரை வெட்டவெளியில் இருந்தது. இப்போது ஊரார்கள் கோயில் கட்டிக் கும்பாபிஷேகமும் செய்திருக்கிறார்கள். இன்று அது வில்லடி ரோட்டுத்திடல் என வழங்குகிறது. அதற்குக்

காரணம் மண்மாரி பெய்த திடலுக்குப் பக்கத்திலே ஒரு பெரிய மணல்மேடு உண்டு. அதிலே அரண்மனைச் சிறுவர்கள் அந்த நாளிலே வில்லை வளைத்து அம்புவிட்டுப் பழகி வந்தார்களாம். அதனால் அந்த மேடு வில்லடிமேடு. அம்மேடு பெரிய மண்மலைபோலக் காணப்பட்டதால் அதனை யடையாளமாகவைத்து அத்திடலை வில்லடி மோட்டுத்திடல் என மக்கள் வழங்கலாயினர்.

இவ்வூரிலே திருமலைராயன் காலத்திலே தென்கோட்டூர் அல்லது தென்கோடை என்ற சிற்றூரில் இருந்து வந்த மெய்கண்டதேசிகர் என்பார் சிவாநுபூதிச் செல்வராகவும் சித்தபுருஷராகவும் விளங்கினர் என்றும், இவர் பல அற்புதங்களை நிகழ்த்தி வந்தமையால் மன்னன் அவரையே ராஜ குருவாக வைத்து, அவருடைய ஆன்மார்த்தமூர்த்தியாகிய மருதவாணப் பெருமானுடைய பூசை நைவேந்தியங்கள் ஒழுங்காக நடைபெற வேண்டி மான்யங்களும், ஆண்டு ஒன்றுக்கு பதினெட்டேமுக்கால் ரூபா மோகினிப் பணமும் அளித்தான். அதனைத் தொடர்ந்து பிரஞ்சு அரசாங்கத்தாரும் அளித்து வந்தனர் என்பது செவிவழிச் செய்தி.

இத்தலத்தில் மிகச்சிறப்பான பெருமாள் கோயில்களும் இரண்டு உள்ளன. அவற்றுள் ஒன்று வீழி வரதராசப் பெருமாள் கோயில் என்பது.

சுவாமி பெயர்—வீழி வரதராசப்பெருமாள்—தாயார் செங்கமலத்தாயார். தீர்த்தம்—சந்திர புஷ்கரிணி. இத்தலம் விழுதிக்காடாக இருந்தபோது பெருமாள் அக்காட்டில் காணப்பட்டார். ஆதலால் வீழிவரதராசர் எனப்பட்டார்.

**திருக்கண்ணபுரம் :**

ஸ்ரீ சௌரிராஜப்பெருமாள் மாசிமகத்திற்குக் கடலாட்டு விழாவுக்கு எழுந்தருளும்போது இக்கோயிலில் எழுந்தருளி மண்டபப்படி பூசை ஏற்றுக் கொள்வார்.

இங்கு விசேஷ உற்சவங்களில் பல்லக்குச்சேவை, ஏகாந்தசேவை, கைத்தலச்சேவை, கருடசேவை, பவழக்காற் சப்பரச் சேவை என்ற பஞ்ச சேவைகளும் நடைபெறும். இது மிகத் தனிப்பட்ட சிறந்த சேவையாகும்.

**இராஜசோளீச்சரம் உடையார் :**

இக்கோயில் செங்குந்த முதலியார்கள் தெருவில் உள்ளது. சிறந்த திருப்பணிகளுடன், பூசையும் வழிபாடும் நியமமாக நடைபெற்று வருகின்றன. இங்குள்ள சுவாமி பெயர் — ராஜசோளீஸ்வரர் என்பது. அம்மன் பெயர் அபிராமி என்பது. இது செங்குந்தர்கள் மேற்பார்வையில் உள்ளது.

திருமலைராஜன், ராசராசசோழன் பேரால் அவன் நினைவுக்குறியாகக் கட்டினன் என்கிறார்கள்.

இங்கும் பரிவார மூர்த்திகளும், சோமாஸ்கந்தர் நடராசர் முதலான உற்சவமூர்த்திகளும் உள்ளனர்.

**ஆயிரங்காளியம்மன் :**

இது மிகச் சிறந்த காளியம்மை. மரத்தால் செய்யப் பெற்று, வர்ணந்தீட்டிய அழகான திருமேனி. காளி என்ற பெயருக்கு ஏற்ப வக்கிரதந்தமும்—பிதுங்கிய பெரிய விழிகளும் உடையதாக அச்சத்தையும் அதனால் விளையும் அன்பையும் உண்டாக்கும் பெரிய திருமேனி. கைகள், மார்பகம், உடல், தலை முதலிய உறுப்புக்கள் தனித்தனியாக உள்ளன. ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை, அம்பாள் செங்குந்த முதலியார்கள் சிலர் கனவில் தோன்றி பூசை ஏற்றுக்கொள்வதாகச் சொல்லுவாராம். அம்மை குறித்த நாளிலே பெட்டியிலுள்ள உறுப்புக்களை எடுத்துப் பூட்டி அம்மையை ஆசனத்தில் அலங்கரித்து வைத்து வழிப்படுவது வழக்கம். வழிபாட்டிற்கு உரிய பொருள்கள் அனைத்தும் ஆயிரம் ஆயிரமாகப் படைக்கப்படுதலால் அம்மை ஆயிரங்காளி எனப்படுவர். மஞ்சட்கொல்லை இராமசாமி முதலியார் அவர்கள் அம்மைக்கு வெள்ளியால் பாதங்களைச் செய்து வைத்தார்.

இந்த அம்மை ஒரு பிரபலமான அரசனால் பூசிக்கப் பெற்று வந்ததாகவும், பின்னர் அவன் ஏதோ காரணத்தால் பெட்டியில் அடக்கஞ்செய்து திருமலைராயன் ஆற்றில் விட்டதாகவும், இவ்வூருக்கு அருகாமையில் பெட்டி மிதந்து வந்த போது, அம்மை முதலியார் ஒருவர் கனவில் தோன்றிப் பெட்டியை எடுத்துப் புனிதமான இடம் ஒன்றில் கோயில்

கட்டி வை, வழிபாட்டு முறைகளைப் பின் அவ்வப்போது அருள் செய்வேன் என்று சொன்னதாகவும், அவர் அப்படியே செய்தார் என்பதாகவும் வரலாறு கூறப்படுகின்றது.

பூசை—பலி முதலியன இல்லாத சுத்த பூசை. இதனைச் செங்குந்த மரபினரே செய்து வருகின்றார்கள்.

**பிரசன்ன வேங்கடேசப்பெருமாள் கோயில்:**

இக்கோயில் சிறியது. சீர்திருத்தம் செய்யப்பெற்றுள்ளது. கருவறையில் பெருமாள் நின்றதிருக்கோலத்தில் எழுந்தருளியிருக்கிறார். சுவாமியின் முழந்தாளுக்கு அடிப் பாகம் பூமியின் கீழ்ப் புதைந்திருப்பதால் திருவரையிலிருந்து முகமண்டலம் வரைதான் அன்பர்கள் தரிசிக்க இயலும்.

பாகவத விசிட்டர் ஒருவர் திருப்பதிக்குப் போய் வேங்கடேசப் பெருமாளை வழிபாடு செய்வதாக நேர்ந்து கொண்டார். அந்நாளில் அவர் அங்குச் செல்ல இயலாத இயற்கைச் சூழ்நிலை உண்டாயிற்று. பாகவதர் வருந்தினர். மனம் நொந்தார்—எண்ணியபடி வழிபட இயலாத இவ்வுடலோடு நான் கூடி வாழவேண்டுமா! வேண்டவே வேண்டாம்; இதோ என்னுயிரை மாய்த்துக் கொள்கிறேன் என்று கூரியவாள் கொண்டு தம் சிரத்தைத் தாமே துணிக்க எண்ணினர். அப்போது பக்தவற்சலனாகிய வேங்கடேசப் பெருமான் திருவுளங்கனிந்து அப்போதே இத்தலத்தில் தமது திருவுருவத்தைக் காட்டியருளினர் என்பது வரலாறு.

**கோதண்ட ராமசாமி கோயில்:**

கோதண்ட ராமசாமியின் திருவுருவம் மிக அழகானது. சீதாபிராட்டியுடனும் லட்சுமணப்பெருமாளுடனும் எழுந்தருளியுள்ளார். இது திருமலைராயன் காலத்துக் கோயில் என்று கூறுகிறார்கள். தீர்த்தம் சந்திரபுஷ்கரணி. சிற்றரசன் ஆட்சி செலுத்திய தலமாதலாலும், பல மரபினர்களும் தனித்தனித் தெருக்களில் வசிப்பதாலும் தெருவுக்குத்தெரு விநாயகர் ஆலயங்களும், சிறுசிறு கோயில்களும் முருகன் கோயிலும், பசுபதீசர் ஆலயமும் ஆகப்பல உள்ளன.

மண்மாரி பெய்த திடல், வில்லடி மேட்டுத் திடல், அரிகண்டம் பாடிய இடம் முதலியன காளமேகப் புலவரின் வரலாற்றுத் தொடர்புடையன. இவற்றைப் பற்றிய விரிவான நிகழ்ச்சிகளையும், அதற்குரிய பாடல்களையும் தனிப் பாடல் திரட்டு, தனிச் செய்யுட் சிந்தாமணி, விநோத ரசமஞ்சரி, தமிழ்ப்புலவர் சரிதம் முதலிய நூல்களில் காணலாம்.

## திருவேட்டக்குடி :

இத்தலம் காரைக்கால் பிறையாறு பாதையில் காரைக்காலுக்குச் சுமார் 7 கல் தொலைவில் உள்ளது. திருவேட்டக்குடி ரோடு என்னும் இடத்தில் இறங்கி கிழக்கு நோக்கிச் செல்லுங் கிளைப்பாதையில் சுமார் 1½ கல் தொலைவு சென்றால் திருக்கோயிலை யடையலாம். அழகான-சிறிய திருக்கோயில். புதிய திருப்பணி. நகரத்தார் திருப்பணி. கிழக்குப் பார்த்த சந்நிதி. கிழக்கே சிறிய கோபுரமும் ஒரு சுற்றுலையும் உடையது. கணபதி முதலிய பரிவாரங்களுடன் பெருமான் எழுந்தருளியுள்ளார். சுவாமி பெயர் திருமேனியழகர். இதனைச் சம்பந்த சுவாமிகள் தம்பதிகத்து "சுடர்ப்பவளத் திருவுருவில் வெண்ணீற்றர் திருவேட்டக்குடியாரே" என்று குறிப்பிடுகிறார்கள்.

அம்மை பெயர் சாந்தநாயகி. சந்நிதி கடற்கரையில் இருப்பதால் திருஞான சம்பந்தப்பெருமான் 'சுடர்ப்பவளம் தெண்டிரைகள் கொணர்ந்தெறியும் திருவேட்டக்குடியாரே' 'வருபுனலின் மணியுந்தி மறிதிரையார் திருவேட்டக்குடி' என்றெல்லாங் குறிப்பிடுகின்றார்கள்.

மற்றும் சந்நிதிக் கடலில் முன்னிரவில் நாடோறும் தீ யெரிவதுபோலக் காணப்படும். இதனை 'தீ யெரிகை மகிழ்ந்தாரும் திருவேட்டக்குடியார்' எனக் குறிப்பிடுகின்றார்கள் என்பார்கள். கடற்கரையோரமுள்ள உப்பு நீரில் கரியமில வாயு படும்போது தீப்பற்றி எரிவது இயல்பு. ஆதலால் அங்குமட்டும் உள்ள தலச் சிறப்பாகாது. 'கிறைத் துண்டப் பிறைக்கற்றை திகழ்ந்திலங்கு செஞ்சடையார்' 'பிறைச் சென்னிக் கபாலீ என்பனபோல தீ யெரியைக்

கையில் ஏந்தி மகிழ்ந்தாடும் திருவேட்டக்குடியார் என இறைவன் அனலேந்தியாடும் அழகையே குறிப்பதாகும்.

இத்தலம் கடற்கரையிலே அலைமோதும் இடமாக இருப்பினும், சோலைகளும், வயல்களும் நிறைந்த இடம் என்பதை "தெண்டிரைசேர் வயலுடுத்த திருவேட்டக்குடி" எனவும், "தேனிலவும் மலர்ச்சோலை திருவேட்டக்குடி" எனவும் பகுதிகளால் அறியலாம்.

இங்குள்ள தலவிருட்சம் புன்னை. இதனையும் "நறையுலவு பொழிற்புன்னை நன்னீழற் கீழமரும் திருவேட்டக் குடியார்" என்பதாலறியலாம். மன அமைதியை விரும்புபவர் சென்று தங்கக்கூடிய சிறந்ததலம். இதற்கு ஞானசம்பந்தர் அருளிய பதிகம் ஒன்றேயுள்ளது.

இறைவன் அருச்சுனனுக்காக வேடவுருத் தாங்கி, அவன் தவத்தைக் கலைக்கவந்த பன்றியைக் கொன்று, அவனுக்குக் காட்சி வழங்கிப் பாசுபதாஸ்திரம் கொடுத்தருளிய தலமாதலின் திருவேட்டக்குடி, வேடநாதர் என்ற பெயர் வழங்கலாயின என்பது புராண வரலாறு.

வேடவுருந்தாங்கிய எழுந்தருளுந் திருமேனி மிக அழகாக இங்குள்ளது.

---

## சுவாமி உலாவருங்காலங்களில் நிகழும் - இசைபற்றிய மரபுகள்.

விழாக் காலங்களில் சுவாமி எழுந்தருளும்போது பியாகடைப் பல்லவிகளும், புறப்படும்போது நாட்டையும், நடைவாகனப் பந்தலில் வரும்போது மல்லாரியும், சந்நிதியில் திரும்பும் வரை சதுரஸ்ரஜாதிதிரிபுடையும், அப்புறம் மிஸ்ரஜாதிதிரிபுடையுடன் கூடிய ராகமாலிகை சுரங்களும். கீழச் சந்நிதி தொடங்கித் தெற்குவீதி கட்டளை மடம் வரை கனராகங்களும், மடத்திலிருந்து மேலவீதி பாதிவரை பல்லவிகளும், அதிலிருந்து வடக்குவீதி பெருமாள்கோவில் வரை

கீர்த்தனைகளும், தேவாரம், திருப்புகழ்களும், கடைசியாகச் சந்நிதியில் நோட்டுவகைகளும், அலங்கார மண்டபத்திற்கு முன்பக்கம் சுவாமி வந்ததும் மிஸ்ரஜாதி அல்லது சதுரஸ்ர ஜாதியாகிய வஸந்தா ராகமும், வாசிப்பதும் தட்டுச் சுற்றுவதும் வழக்கம்.

நடராசர் புறப்பாட்டின்போது திருமுன் தன்யாசி முதலான ராகங்களும், மண்டப தீபாராதனையின் பின் தேவார திருவாசகங்களும் வாசிப்பது வழக்கம்.

திருவெம்பாவைத் திருவிழாவில், இருபத்தொரு தீபாராதனை நடக்குங் காலத்தில் மிஸ்ரதாள ஜதியோடு கூடிய சுத்தமத்தளம் வாசிக்கப்படும். நடராசர் புறப்பாட்டில் தேர் மல்லாரியும், கண்டநடை ஜதியோடுகூடிய சுத்தமத்தளமும் வாசிப்பது வழக்கம்.

நடராசர், நந்தி பலிபீடங்களைக் கடந்து வெளியில் வந்ததும் பெரியதாளம், சுத்தமத்தளம் இவைகளை நட்டுவனுர் ஜதிசொல்ல வாசிப்பது வழக்கம். வீதியில் முன் போலவே அந்தந்த இடங்களில் அந்தந்த ராகங்கள் வாசிக்கப் பெறும்.

தட்டுச்சுற்றும்போது ஸ்ரீ ராகம் பதங்கள் வாசிக்கப் பெறும். யதாஸ்தானத்தில் சுவாமியை இறக்கும்போது தவில் முதலியன இல்லாமல் நாதஸ்வரம் மட்டும் கண்ட மல்லாரி வாசிப்பது வழக்கம்.

வஸந்தோற்சவம், தேர் பக்தகாட்சி இவைகளில் தியாகராஜாபுறப்படும்போது சுத்தமத்தளம் பெரியதாளம் இவைகளுடன் உன்மத்த நடனம் நிகழும்போது தத்தளதானபடியான அடதாளத்தை எல்லா ராகங்களுடனும் சுத்தமத்தளம் வாசிப்பது வழக்கம்.

## வரலாற்றுத் தொடர்புடைய கோவில் கிராமங்கள் :

பூண்முலையாள் மங்கலம், அத்திப்படுகை, பேட்டை, கிழாலூர், காக்காமுழி என்பன கோவில் கிராமங்கள். இவற்றில் பூண்முலையாள் மங்கலம் என்பது அம்மையின் திருநாமத்தை நினைவூட்டுவது. நாச்சியார் போனகமாக (நிவேதனத்திற்காக) ராஜராஜன் அளித்த நிபந்தமாக இருக்கலாம்.

### காக்காமுழி :

காகம் சனிபகவானுக்கு வாகனம். ஆதலால் காகபலிக்காக அளித்த நிபந்தமாகவும் இருக்கலாம்.

### கீழாலூர் :

இது அபிஷேகத்திற்குரிய பால், திருவிளக்கு நெய் இவைகளுக்கு சோழ மன்னர்களும், அவன் ஆணைவழி இருக்கும் வேளாளர்களும் முப்பத்திரண்டு பசுக்களை அளிப்பது ஒரு வழக்கம் என்பது கல்வெட்டுகளால் அறியப்படும். அண்மைக் காலத்திலும்கூட கோவிலுக்கென்று பெரிய பசு கிடை இருந்ததாகவும், அதனை மலை நாடுகளில் கொண்டு போய் மேய்த்து தீபநெய் பால் முதலிய வருமானத்தை கோவிலுக்கு அளித்து வந்ததாகவும் செவிவழிச் செய்தியாக அறியப்படுகிறது. பசு வளர்ச்சிக்கும், பராமரிப்பிற்கும், இந்த கீழ ஆலூர் என்னும் கிராமம் அளிக்கப்பட்டதாக இருக்கலாம்.

### அத்திப்படுகை :

இது அரசலாற்றங் கரையில் உள்ள ஒரு படுகை. நல்ல வளமான கிராமம். இங்கே அங்காளம்மன் கோவில் ஒன்று உள்ளது. அது சிவாச்சாரியார், சைவாச்சாரியார், சைவர்கள் ஏனையோர்க்கும் குலதெய்வமாக விளங்குகிறது.

ஒரு காலத்தில் செம்பினால் செய்த சிறிய அம்பாள் விக்ரகமொன்று பரிவாரத்துடன் பெட்டகத்தில் அடக்கம் செய்யப்பெற்று ஆற்றில் மிதந்து வந்ததாகவும், அதனையெடுத்து அங்குள்ள சிறிய கோவிலில் வைத்திருந்ததாகவும், அன்று இரவு எடுத்தவன் கனவில் வந்து இறைவி இங்கே'

எழுந்தருள விரும்புவதாக அறிவித்தார் என்றும், அதனால் அவ்வாலயம் உண்டாயிற்று என்றும் செவிவழிச் செய்தி வழங்குகிறது. இன்று அங்காளம்மன் சிலாவிக்ரகமாக பெரிய திருஉருவிலும் இருக்கிறது. பரிவாரங்களாக இருளன், காட்டேரி, காளி, காத்தவராயன் இவர்களுடைய சுதைத் திருஉருவங்களும் உள்ளன. இக்கோயில் இன்றும் நள்ளாறு தேவஸ்தான பராமரிப்பில் இருக்கிறது. இதற்கு சற்று தூரத்தில் சுமார் ஒரு மைலுக்குள் கார்க்கோடகேஸ் வரம் என்னும் கோவில் தென்கிழக்கில் உள்ளது. சுவாமி பெயர் நாகநாதர், அம்பாள் நாகாம்பிகை. கோவில் மிகக் கிலமாக இடிந்து கிடக்கிறது. கோவில் இடப்பக்கத்தில் இலுப்பைத் தோப்பும் குளமும் உள்ளன. இது நளனை சர்ப்பம் தீண்டிய பாபம் நீங்க கார்க்கோடகனை வழிபட்ட தலம்.

### பேட்டை :

இதுவும் கோவில் கிராமங்களில் ஒன்று. இங்கே மிகப் பிரசித்தமான மாரியம்மன் கோவில் உண்டு. அதில் தீமிதி உற்சவம் மிகச்சிறப்பாக நடைபெறுகிறது.

### பதிக வரலாறு :

திருஞான சம்பந்த சுவாமிகள் நீலகண்ட யாழ்ப்பாண ருடனும் சிவனடியார்களோடும் திருத் தருமபுரம் முதலான தலங்களை வணங்கிக்கொண்டு திருநள்ளாற்றை வந்தடைந் தார். இங்குள்ள அடியார்களும், அன்பர்களும் எதிர்கொண் டழைத்து வந்தனர். பிள்ளையார் திருக்கோயிலுட் சென்று நள்ளாறரை வணங்கி வலம் வந்து, மெய்ம்மயிர் சிலிர்க்க, நாத் தழுதழுக்க, உரைதடுமாறக் கண்ணீர்பெருகக் காதலே வடிவாகிப் பெருமான் சந்நிதியில் நின்று இப்பதிகத்தை யருளிச் செய்தார்.

### பதிகப் பெருமை :

திருஞானசம்பந்த சுவாமிகள் கூன்பாண்டியனுடைய உடற் கூனலையும், உள்ளக் கூனலையும் வெப்பு நோயையும் அகற்றிய பின்னர்ச் சமணர்கள் அரசனை நோக்கிக் கன்னித் தமிழ் நாடாளுங் காவல! தாங்கள் ஆணை தந்தால் இவரை வாது செய்து வெல்வோம் என்றார்கள். மன்னன் வெப்பு

நோய் என் உடலையே விழுங்கியபோது ஒன்றும் செய்ய முடியாத நீங்கள், வாது செய்யப் போகிறீர்களாக்கும்! வாது என்ன வேண்டியிருக்கிறது? என்று நகையாடினன்.

சமணர்கள், அரசே! அவரவர் சமய உண்மைகளை ஓர் ஏட்டில் எழுதித் தீயில் இடுவோம். யார் ஏடு வேகாமல் இருக்கிறதோ அது வென்றதாகக் கருதுவோம் என்றனர்.

இதனைக் கேட்ட மன்னன் மறுமொழி கூறுவதற்கு முன்னமே, ஞானசம்பந்தப் பிள்ளையார் நீங்கள் சொல்லியது நல்லது; அப்படியே செய்வோம் என்றார்கள். அரசன் ஆணையால் அவை முன்னர் ஓரிடத்தில் தீ மூட்டப்பட்டது. ஞானசம்பந்த சுவாமிகள் சிவமே பரம்பொருள் எனத் தாம் உலக மக்களுக்கு உணர்த்திய திருமுறை ஏட்டைக் கையிலெடுத்து, உச்சிமேல் வைத்து, இறைவன் திருவடியை மனத்திலே எண்ணிக் காப்புநாணை அவிழ்த்தார். ஏட்டைப் பிரித்தார். 'போகமார்த்த' என்னும் இப்பதிகம் உதயமாயிற்று. அந்த ஏட்டைக் கழற்றித் தீயிலிட்டார்.

இட்ட ஏட்டினில் எழுதிய செந்தமிழ்ப் பதிகம்
மட்டுலாங்குழல் வனமுலை மலைமகள் பாகத்து
அட்டமூர்த்தியைப் பொருளென உடைமையால் அமர்ந்து;
பட்டதீயிடைப் பச்சையாய் விளங்கிய தன்றே.

ஆதலால் இப்பதிகம் பச்சைப் பதிகம் எனவும், சைவங்காத்த திருப்பதிகம் எனவும் பாராட்டப்படுவது. இப்பதிகத்தைப் பாராயணஞ் செய்யின் வழக்கில் வெல்லலாம். பகையை ஓட்டலாம். அரசியல் வெற்றிகள் அனைத்தும் விளையும்.

# திருமுறைகள்

## திருஞானசம்பந்த சுவாமிகள்

திருச்சிற்றம்பலம்

பண் - நட்டபாடை

பாடக மெல்லடிப் பாவையோடும்
படுபிணக் காடிடம் பற்றிநின்று
நாடக மாடுநள் ளாறுடைய
நம்பெரு மானிது என்கொல் சொல்லாய்
சூடக முன்கை மடந்தைமார்க
டுணைவ ரொடுந்தொழு தேத்திவாழ்த்த
ஆடக மாட நெருங்குகூட
லாலவா யின்கண் அமர்ந்தவாறே. 1

1 பாடகம் என்னுங் காலணியை யணிந்த மெல்லிய திருவடிகளையுடைய உமாதேவியாரோடு, இறந்த பிணங்களையுடைய காட்டையே அரங்கமாகப் பற்றி நின்று நடனம் செய்கின்ற திருநள்ளாறு என்னும் தலத்தைத் தமது வாழிடமாகக் கொண்ட பெருமானே! வளையலை அணிந்த முன் கைகளையுடைய பெண்கள் தத்தங் கணவன்மாரோடு கைதொழுது தோத்தரிக்க, பொன்மயமான மாளிகைகள் நிறைந்த நான்மாடக்கூடல் என்னும் பெயரையுடைய திருவாலவா யாகிய மதுரையிலே எழுந்தருளியிருப்பது என்ன காரணம்? சொல்வாயாக.

திங்களம் போதுஞ் செழும்புனலுஞ்
செஞ்சடை மாட்டயல் வைத்துகந்து
நங்கண் மகிழுநள் ளாறுடைய
நம்பெரு மானிது என்கொல்சொல்லாய்
பொங்கிள மென்முலை யார்களோடும்
புனமயி லாட நிலாமுளைக்கும்
அங்கழ கச்சுதை மாடக்கூட
லாலவா யின்கண் அமர்ந்தவாறே. 2

2 பிறைச் சந்திரனாகிய பூவையும் கங்கை நீரையும் சிவந்த சடையிலே அணிந்து மகிழ்ந்து, நாங்கள் மகிழ்தற்கிடமாகிய நள்ளாற்றிலே எழுந்தருளியிருக்கும் நம் பெரு

மானே! வளர்கின்ற — மெல்லிய முலைகளையுடைய பெண்களோடு காட்டிலுள்ள மயில்களும் ஆட, நிலவு தோன்றுகின்ற அழகிய அழியாத நான்மாடக் கூடலும் திருவாலவாயும் ஆகிய மதுரையில் விரும்பி எழுந்தருளி யிருப்பது என்ன காரணம்? சொல்வாயாக.

தண்ணறு மத்தமுங் கூவிளமும்
வெண்டலை மாலையுந் தாங்கியார்க்கும்
நண்ணல் அரியநள் ளாறுடைய
நம்பெரு மானிது என்கொல்சொல்லாய்
புண்ணிய வாணரும் மாதவரும்
புகுந்துட னேத்தப் புனையிழையார்
அண்ணலின் பாட லெடுக்குங்கூட
லாலவா யின்கண் அமர்ந்தவாறே. 3

3 குளிர்ந்த — மணமுள்ள ஊமத்தம் பூவையும் வில்வத்தையும், வெண்மையான தலை மாலையையும் திருமுடியிலே சுமர்ந்து விளங்கும் அடியார்கள் அல்லாத ஏனையோர் நெருங்குதற்கும் முடியா திருநள்ளாற்றுப் பெருமானே! புண்ணியவான்களும், பெரிய முனிவர்களும் வந்து வழிபட, பெண்கள் பெருமானுகிய உன்னுடைய புகழமைந்த பாடல்களைப் பாடத் தொடங்கும் மதுரையிலே எழுந்தருளியவாறு என்னவோ? சொல்லாய்.

பூவினில் வாசம் புனலிற்பொற்புப்
புதுவிரைச் சாந்தினி னுற்றத்தோடு
நாவினிற் பாடநள் ளாறுடைய
நம்பெரு மானிது என்கொல்சொல்லாய்
தேவர்கள் தானவர் சித்தர்விச்சா
தரர்கணத் தோடுஞ் சிறந்துபொங்கி
ஆவினி லைந்துகந் தாட்டுங்கூட
லாலவா யின்கண் அமர்ந்தவாறே. 4

4 பூவில் மணம் போலவும், நீரில் குளிர்ச்சி போலவும், புதிதாக இழைக்கப்பெற்ற மணமுள்ள சந்தனத்தின் மணம் போலவும் நீ உயிர்களிடத்தில் கலந்திருக்கின்ற தன்மையைச் சிவஞானியார்கள் தம் நாவால் தோத்தரிக்க விளங்கும் நள்ளாற்று நாதனே! தேவர்களும் அசுரர்களும், வித்தியாதரர்களும் மற்றத் தேவகணநாதர்களும்

சிறப்போடு மகிழ்ந்து, பசுவினிடமிருந்து அடையப் பெறும் பஞ்ச கவ்வியங்களைக் கொண்டு அபிஷேகம் செய்யும் மதுரையை யிடமாகக்கொண்டு எழுந்தருளியிருப்பது என்ன காரணம்? சொல்வாய்.

செம்பொன்செய் மாலையும் வாசிகையுந்
　　திருந்துபு கையும் வியும்பாட்டும்
நம்பும் பெருமைநள் ளாறுடைய
　　நம்பெரு மானிது என்கொல்சொல்லாய்
உம்பரு நாக ருலகந்தானு
　　மொலிகடல் சூழ்ந்த வுலகத்தோரும்
அம்புத நால்களா னீடுங்கூட
　　லாலவா யின்கண் அமர்ந்தவாறே. 5

5 செம்பொன்னாற் செய்யப்பெற்ற பொன்னரி மாலையையும், திருவாசிகையையும், திருத்தமான தூபங்களையும், நைவேத்யங்களையும், தோத்திரப் பாடல்களையும் விரும்பும் பெருமையுடைய நள்ளாற்றுப் பெருமானே! தேவர்களும் நாகலோகமும், ஒலிக்கின்ற கடலாற் சூழப்பட்ட பூவுலகத்தவர்களும் வணங்க, மேகங்கள் நாலும் பிரியாத புகழான் உயர்ந்த நான்மாடக் கூடாரம் ஆலவாயும் ஆகிய மதுரையிலே எழுந்தருளி யிருப்பது என்ன காரணம்? சொல்வாயாக.

பாகமுந் தேவியை வைத்துக்கொண்டு
　　பைவிரி துத்திப் பரியபேழ்வாய்
நாகமும் பூண்டநள் ளாறுடைய
　　நம்பெரு மானிது என்கொல்சொல்லாய்
போகமு நின்னை மனத்துவைத்துப்
　　புண்ணியர் நண்ணும் புணர்வுபூண்ட
ஆகமு டையவர் சேருங்கூட
　　லாலவா யின்கண் அமர்ந்தவாறே. 6

6 இடப்பாகத்திலே உமாதேவியையும் வைத்துக்கொண்டு, படம் விரித்தாடும் படப் புள்ளியோடு கூடிய பெரிய பிளந்த வாயையுடைய பாம்பையும் அணிந்த நள்ளாற்றுப் பெருமானே! புண்ணியவான்கள் தேவரீறை மனத்திலே தியானித்துப் போகத்தையும் அதனை யடைதற்கு வழியாகிய புணர்ச்சியையும் பூண்ட உடலையும் உடைய

வர்களாக வழிபடும் மதுரையிலே எழுந்தருளியிருப்பது என்ன காரணம்? சொல்வாயாக.

கோவண ஆடையு நீறுப்பூச்சுங்
 கொடுமழு வேந்தலுஞ் செஞ்சடையும்
நாவணப் பாட்டுநள் ளாறுடைய
 நம்பெரு மானிது என்கொல்சொல்லாய்
பூவண மேனி யிளையமாதர்
 பொன்னும் மணியுங் கொழித்தெடுத்து
ஆவண வீதியி லாடுங் கூட
 லாலவா யின்கண் அமர்ந்தவாறே. 7

7 கோவண ஆடையும், திருநீற்றுப் பூச்சும், கொடிய மழு என்னும் படையை ஏந்துதலும், சிவந்த சடையும், நாக்கிற்கு அழகைத் தரும் வேத கீதமும் உடைய நள்ளாற்றுப் பெருமானே! பூப்போலும் அழகிய உடலையுடைய இளம் பெண்கள் பொன்னையும் இரத்தினங்களையும் சிறு முறத்தால் கொழித்து எடுத்து வைத்துக்கொண்டு விளையாடும் கடைத்தெருவை யுடைய மதுரையில் எழுந்தருளியிருப்பதன் காரணம் என்ன? சொல்வாயாக.

இலங்கை இராவணன் வெற்பெடுக்க
 எழில்விர லூன்றி யிசைவிரும்பி
நலங்கொளச் சேர்ந்தநள் ளாறுடைய
 நம்பெரு மானிது என்கொல்சொல்லாய்
புலன்களைச் செற்றுப் பொறியைநீக்கிப்
 புந்தியி லுந்நினைச் சிந்தைசெய்யும்
அலங்க னல்லார்க ளமருங்கூட
 லாலவா யின்கண் அமர்ந்தவாறே. 8

8 இலங்கை யரசனாகிய இராவணன் கயிலாய மலையைத் தூக்க, அவனை யடக்கி யாள்வதற்காக அழகான பெருவிரலை ஊன்றி, அவன் பாடிய சாமகானத்தை விரும்பி, இன்பமிக எழுந்தருளிய நள்ளாற்றுப் பெருமானே! விஷய சுகங்களாகிற காணுதல், கேட்டல், உண்ணுதல், முகர்தல், புணர்ச்சி ஆகியவற்றை அடக்கி, இவை ஐந்தையும் அனுபவித்தற்குரிய கருவிகளாகிய கண், காது, நாக்கு, மூக்கு, உடல் ஆகிய ஐந்தையும் தத்தம் இஷ்டப்படிச் சென்று போகங்களை நுகராத வண்ணம்

தடுத்து நீக்கி, மனத்திலே உன்னையே தியானம் செய்கின்ற — மாலையை யணிந்த நல்ல அடியார்கள் இருக்கின்ற மதுரையில் நீ எழுந்தருளியது என்ன காரணம்? சொல்வாயாக.

பணியுடை மாலும் மலரினோனும்
    பன்றியும் வென்றிப் பறவையாயும்
நணுகல ரியநள் ளாறுடைய
    நம்பெரு மானிது என்கொல்சொல்லாய்
மணியொலி சங்கொலி யோடுமற்றை
    மாமுர சின்னொலி யென்றுமோவாத்
தனிகிளர் வேந்தர் புகுதுங்கூட
    லாலவா யின்கண் அமர்ந்தவாறே. 9

9 ஆதிசேஷனை அணையாகக்கொண்ட திருமாலும், தாமரைமலரில் இருக்கின்ற பிரமனும், பன்றியாகவும் அன்னப்பறவையாகவும் மாறிப் பறந்தும் தோண்டியுங் கூட நெருங்க முடியாத நள்ளாற்றுப் பெருமானே! மணியோசையும், சங்கோசையும் ஆகிய இவற்றோடு பெரிய முரச வாத்தியங்களின் ஓசையும் என்றும் நீங்காது அழகு வளர்கின்ற அரசர்கள் வந்து வணங்கும் மதுரையில் எழுந்தருளியிருப்பது என்னக் காரணம்? சொல்வாயாக.

தடுக்குடைக் கையருஞ் சாக்கியருஞ்
    சாதியி னீங்கிய வத்தவத்தர்
நடுக்குற நின்றநள் ளாறுடைய
    நம்பெரு மானிது என்கொல்சொல்லாய்
எடுக்கும் விழவு நன்னாள்விழவு
    மிரும்பலி யின்பினோ டெத்திசையும்
அடுக்கும் பெருமைசேர் மாடக்கூட
    லாலவா யின்கண் அமர்ந்தவாறே. 10

10 தடுக்கைக் கையிலே ஏந்தித் திரியும் சமணரும் புத்தரும், சாதியாசாரங்களில் நீங்கிய தவமுடையவர்களும் நடுக்கம் அடைய நின்ற நள்ளாற்றுப் பெருமானே! சிறப்பாகத்தொடங்கும் திருவிழாக்களும், அன்றன்றைக்குச் செய்யப்படும் நாட்பூசையும், பெரிய பலிகளும், இன்பத்

தோடு நாலா பக்கமும் சேர்ந்திருக்கின்ற மதுரையை இடமாகக்கொண்டு எழுந்தருளியிருப்பது என்ன காரணம்? சொல்வாயாக.

அன்புடை யானை யரனைக்கூட
லாலவாய் மேவிய தென்கொலென்று
நன்பொனை நாதனை நள்ளாற்றுனை
நயம்பெறப் போற்றி நலங்குலாவும்
பொன்புடை சூழ்தரு மாடக்காழிப்
பூசுரன் ஞானசம் பந்தன்சொன்ன
இன்புடைப் பாடல்கள் பத்தும்வல்லா
ரிமையவ ரேத்த விருப்பர்தாமே. 11

11 உயிர்களிடத்தில் அன்பு உடையவனாகிய சிவபெருமானை மதுரையிலே நீயிருக்கும் காரணம் என்ன என்று, நல்ல பொன்னைப் போன்றவனும், நாதனும் என திருநள்ளாற்றுத் தேவனை நயமாகத் துதித்து, இன்பம் விளங்குவது, பொன் நாலாபக்கமும் சூழ்ந்த மாடங்களையுடையதுமான சீர்காழியிலே பிறந்த திருஞானசம்பந்தனாகிய யான் சொன்ன இன்பமான பத்துப்பாடல்களையும் வல்லவர்கள் தேவர்கள் வந்து வணங்க இருப்பார்கள்.

திருச்சிற்றம்பலம்.

திருஞானசம்பந்தப்பெருமான், திருத்தருமபுரத்தை வழிபட்டு, அடியார்கள் புடைசூழத் திருநீலகண்ட யாழ்ப்பாணருடன் திருநள்ளாறு எழுந்தருளினர். அங்கே அளவற்ற அன்போடு, மனங்கசிந்து, நள்ளாறுடைய நம்பெருமான் திருமுன் சென்று இப்பதிகத்தை யருளிச்செய்தார். திருநீலகண்டயாழ்ப்பாணர் யாழில் அமைத்து வாசிக்கத் தாமும் பாடி எல்லோரையும் மகிழ்வித்தார்.

இப்பதிகமே சைவ சமயத்தைக்காத்த திருப்பதிகம். ஆதலால் இது 'வெற்றிகண்ட பதிகம்' 'சமயங்காத்த திருப்பதிகம்' என்று பாராட்டப் பெறுகிறது. சேக்கிழார் பெரியபுராணத்து 'பொருவில் திருப்பதிகம்' என்று சிறப்பிக்கின்றார். பொரு—ஒப்பு. பொருவில்—ஒப்பில்லாத என்பதாம்.

**பண்-பழந்தக்க ராகம்**

**திருச்சிற்றம்பலம்**

போகமார்த்த பூண்முலையா டன்னோடும் பொன்னகலம்
பாகமார்த்த பைங்கண்வெள்ளேற் றண்ணல் பரமேட்டி
ஆகமார்த்த தோலுடையன் கோவண வாடையின்மேல்
நாகமார்த்த நம்பெருமான் மேயது நள்ளாறே. 1

1 'போகமார்த்த பூண்முலையாள்' என்னும் உமாதேவியாரை ஒரு பாகம் வைத்துள்ளதால் அர்த்தநாரீஸ்வரராக விளங்கும்மார்பினையுடையவரும், இடபவாகனத்தையுடையவரும், பரமேட்டியும், உடலில் தோலாடையைப் போர்த்தியவரும், கோவண ஆடையின்மேல் பாம்பைக் கட்டியவருமான நம்பெருமான் விரும்பி எழுந்தருளியிருக்குந்தலம் திருநள்ளாறே யாகும்.

தோடுடைய காதுடையன் றோலுடை யன்றொலையாப்
பீடுடைய போர்விடையன் பெண்ணுமோர் பாலுடையன்
ஏடுடைய மேலுலகோ டேழ்கட லுஞ்சூழ்ந்த
நாடுடைய நம்பெருமான் மேயது நள்ளாறே. 2

2 தோடணிந்த காதையுடையவரும், தோலாடையையுடையவரும், அழியாப் பெருமை படைத்த போர் செய்கின்ற இடபவாகனத்தை யுடையவரும், உமாதேவியை உடலின் ஒரு பகுதியாகப் பெற்றவரும், அடுக்கடுக்காக உள்ள ஏழுலகங்களும், ஏழு கடலும், சூழ்ந்த நாடுகளை உடையவரும் ஆன நம்பெருமான் விரும்பி இருக்குந்தலம் நள்ளாறாகும்.

ஆன்முறையா லாற்றவெண்ணீ றாடி யணியிழையோர்
பான்முறையால் வைத்த பாதம் பத்தர் பணிந்தேத்த
மான்மறியும் வெண்மழுவுஞ் சூலமும் பற்றியகை
நான்மறையா னம்பெருமான் மேயது நள்ளாறே. 3

3 பசுக்களிடமிருந்து பெற்ற சாணத்தால் விதிப்படி ஆக்கிய திருநீற்றை அணிந்து, அடியார்கள், உமாதேவியாரை ஒரு பாகமாகக்கொண்ட திருமேனியின் திருவடிகளை வணங்க, மானும் மழுவும் சூலமும் பற்றிய கைகளையுடைய வேதங்களையருளிச் செய்த சிவபெருமான் எழுந்தருளியிருப்பது திருநள்ளாறு ஆம்.

புல்கவல்ல வார்சடைமேற் பூம்புனல் பெய்தயலே
மல்கவல்ல கொன்றைமாலை மதியோ டுடன்சூடிப்
பல்கவல்ல தொண்டர் தம்பொற் பாத நிழற்சேர
நல்கவல்ல நம்பெருமான் மேயது நள்ளாறே. 4

4 தழுவவல்ல நீண்ட சடையிலே கங்கையைச்சூடி, அதன் பக்கத்திலே கொன்றை மாலையையும் பிறைச் சந்திரனை யும் அணிந்து, அடியார்கள் தமது பொன்போன்ற திருவடிகளைச் சேர அருள்வழங்கும் நம்பெருமான் இருக்கிற தலம் திருநள்ளாறே.

ஏறுதாங்கி யூர்திபேணி யேர்கொ ளிளமதியம்
ஆறுதாங்குஞ் சென்னிமேலோ ராடர வஞ்சூடி
நீறுதாங்கி நூல்கிடந்த மார்பி னிரைகொன்றை
நாறுதாங்கு நம்பெருமான் மேயது நள்ளாறே. 5

5 இடபக்கொடியை ஏந்தி, இடபவாகனத்தில் ஏறித் திருமுடிமேல் இளம் பிறையையும், கங்கையையும், ஆடுகின்ற பாம்பையும் அணிந்து, வீபூதியை அணிந்து விளங்கும் திருமார்பிலே பூணூலையும், கொன்றை மாலையையும் அணிந்த நம்பெருமான் விரும்பி எழுந் தருளியிருக்குந்தலம் திருநள்ளாறே.

திங்களுச்சி மேல்விளங்குந் தேவ னிமையோர்கள்
எங்களுச்சி யெம்மிறைவ னென்றடி யேயிறைஞ்சத்
தங்களுச்சி யால்வணங்குந் தன்னடி யார்கட்கெல்லாம்
நங்களுச்சி நம்பெருமான் மேயது நள்ளாறே. 6

6 பிறைமதி திருமுடியின் உச்சிமேல் விளங்கும் தேவ தேவனும், தேவர்கள், ஒவ்வொருவரும் எங்கள் கடவுள் எங்கள் ஒவ்வொருவர் உச்சிமீதும் விளங்குகின்றூர் என்று வழிபட, தலைவணங்கும் அடியார்கள் அனைவ ருக்கும் தலைமேல் ஆனவரும் ஆன நம்பெருமான் எழுந்தருளியிருப்பது திருநள்ளாறு ஆம்.

வெஞ்சுடர்த்தீ யங்கையேந்தி விண்கொண் முழவதிர
அஞ்சிடத்தோர் ஆடல்பாடல் பேணுவ தன்றியும்போய்ச்
செஞ்சடைக்கோர் திங்கள்சூடித் திகழ்தரு கண்டத்துளே
நஞ்சடைத்த நம்பெருமான் மேயது நள்ளாறே. 7

7 தீயைக் கையிலேந்தி, விண்ணிலுள்ள மேகங்கள் முழங்க அஞ்சத்தக்க இடமாகிய மயானத்தில் நடமாடுகின்றதே யல்லாமல், செஞ்சடையிலே பிறையை யணிந்து, விளங்குகின்ற கழுத்திலே நஞ்சையும் அணிந்த நம் பெருமான் எழுந்தருளிய இடம் திருநள்ளாறு ஆகும்.

சிட்டமார்ந்த மும்மதிலுஞ் சிலைவரைத் தீயம்பினால்
சுட்டுமாட்டிச் சுண்ணவெண்ணீ றுடுவ தன்றியும்போய்ப்
பட்டமார்ந்த சென்னிமேலோர் பான்ம தியஞ்சூடி
நட்டமாடு நம்பெருமான் மேயது நள்ளாறே. 8

8 முப்புரங்களையும், மேருமலையாகிய வில்லிலிருந்து எய்த அம்பால் எரித்து, திருநீற்றில் முழுகுவதோ டன்றித் திருமுடியிலே பிறைமதியையும் அணிந்து நடனமாடும் நம்பெருமான் விரும்பி எழுந்தருளியிருக் குந்தலம் திருநள்ளாறும்.

உண்ணலாகா நஞ்சுகண்டத் துண்டுட னேயொடுக்கி
அண்ணலாகா வண்ணனிழ லாரழல் போலுருவம்
எண்ணலாகா வுள்வினையென் றெள்க வலித்திருவர்
நண்ணலாகா நம்பெருமான் மேயது நள்ளாறே. 9

9 எவராலும் உண்ணமுடியாத நஞ்சையுண்டு கழுத்திலேயே வைத்து, ஒருவரும் அணுகமுடியாத அழலுருவாய், வினை வசத்தால் சிவபெருமானை தம் முதல்வன் என்று உணரமாட்டாத விஷ்ணு பிரமர்களால் அணுகவு முடியாத நம் பெருமான் எழுந்தருளிய இடம் திருநள்ளாறும்.

மாசுமெய்யர் மண்டைத்தேரர் குண்டர் குணமிலிகள்
பேசும்பேச்சை மெய்யன் றெண்ணியந்நெறி செல்லன்மின்
மூசுவண்டார் கொன்றைசூடி மும்மதி லும்முடனே
நாசஞ்செய்த நம்பெருமான் மேயது நள்ளாறே. 10

10 அழுக்குப்படிந்த உடலும், பிச்சைப் பாத்திரம் ஏந்திய கையும் உடைய குணமேயில்லாத குண்டர்களாகிய சமணர்கள் பேச்சை நம்பி அவர்கள் வழியிலே செல்லாதீர்கள். கொன்றை மாலையை யணிந்து திரிபுரங்களை அழித்த நம் பெருமான் எழுந்தருளியிருக்குந் தலம் திருநள்ளாறேயாம்.

தண்புனலும் வெண்பிறையுந் தாங்கிய தாழ்சடையன்
நண்புநல்லார் மல்குகாழி ஞானசம் பந்தனல்ல
பண்புநள்ளா றேத்துபாடல் பத்துமி வைவல்லார்
உண்புநீங்கி வானவரோ டுலகி லுறைவாரே. 11

11 கங்கையும் இளம்பிறையுந் தாங்கிய செஞ்சடைப் பெருமானிடம் அன்புகொண்ட அடியார்கள் இருக்கின்ற சீர்காழிப் பதியிலே தோன்றிய ஞானசம்பந்தப் பெருமான், நல்ல குணங்கள் பல நிறைந்த திருநள்ளாற்றைத் துதித்த பத்துப் பாடல்களையும் வல்லார்கள் பிராரத்த வினைகள் நீங்கித் தேவர்களோடு கூடி இன்பம் அடைவார்கள்.

திருச்சிற்றம்பலம்

---

திருவிராகம் பண் - இந்தளம்

திருச்சிற்றம்பலம்.

ஏடுமலி கொன்றையர விந்துவிள வன்னி
மாடவலி செஞ்சடைய மைந்தனிட மென்பர்
கோடுமலி ஞாழல்குர வேறுசுர புன்னை
நாடுமலி வாசமது வீசிய நள்ளாறே. 1

1 இதழ்கள் நிறைந்த கொன்றை மலரையும், பாம்பையும், சந்திரனையும், இள வன்னித் தழைகளையும் அணிந்த சடையையுடைய எமது தலைவனுடைய மாடங்கள் நிறைந்த இடம் என்பார்கள். கிளைகள் நிறைந்த புலிநகக் கொன்றைகளும், குரா மரங்களும், மிக்க சுரபுன்னைகம் என்னும் நாகலிங்க மரங்களும் மலர்ந்தமையால் ஊரெங்கும் நாடெங்கும் வாசனை வீசுகின்ற திருநள்ளாறு.

விண்ணியல் பிறைப்பிள வரைப்புனன் முடித்த
புண்ணிய னிருக்குமிட மென்பர்புவி தன்மேல்
பண்ணிய நடத்தொடிசை பாடுமடியார்கள்
நண்ணிய மனத்தின்வழி பாடுசெய் நள்ளாறே. 2

2 பூமியிலே, அடியார்கள் நடனமாடி இசைபாடி கனிந்து திருவடியை யடைந்த மனத்தோடு வழிபாடு செய்யும் திருநள்ளாறே. வானத்தில் இயங்குகின்ற கீற்று மதி யாகிய பிறைச் சந்திரனையும், கங்கா நதியையும் புனைந்த புண்ணியனாகிய சிவபெருமான் எழுந்தருளி யிருக்கும் இடம் என்பார்கள்.

விளங்கிழை மடந்தைமலை மங்கையொரு பாகத்
துளங்கொள விருத்திய வொருத்தனிட மென்பர்
வளங்கெழுவு தீபமொடு தூபமலர் தூவி
நளன்கெழுவி நாளும்வழி பாடுசெய் நள்ளாறே. 3

3 நளமகராசன் வந்து, வளமான தூப தீபங் கொடுத்து மலர்களால் அருச்சித்து வழிபாடு செய்யும் திருநள்ளாறே, ஆபரணங்களால் விளங்குகின்ற உமாதேவியாரை ஒரு பாகத்திலே விரும்பி இருக்கச் செய்த ஒப்பற்றவனாகிய சிவபெருமானுடைய இடம் என்பார்கள்.

கொக்கரவர் கூன்மதியர் கோபர்திரு மேனிச்
செக்கரவர் சேருமிட மென்பர்தட மூழ்கிப்
புக்கரவர் விஞ்சையரும் விண்ணவரு நண்ணி
நக்கரவர் நாமநினை வெய்தியநள் ளாறே. 4

4 நாகர்களும், வித்யாதரர்களும், தேவர்களும் வந்து பிரமதீர்த்த முதலான தீர்த்தங்களிலே விதிப்படி நீராடி, திருக்கோயிலிலே புகுந்து சிவபெருமானுடைய பெயரை தியானிக்கின்ற திருநள்ளாறே கொக்கின் இறகையும் பாம்பையும் முடியில் அணிந்தவரும், வளைந்த பிறையை அணிந்தவரும், கோபத்தையுடையவரும், செக்கர்வானம் போன்ற திருமேனியையுடையவரும் ஆன பரமசிவன் எழுந்தருளியிருக்கும் இடம் என்பர்.

நெஞ்சமிது கண்டுகொ ளுனக்கென நினைந்தார்
வஞ்சமத றுத்தருளும் மற்றவனை வானோர்
அஞ்சமுது காகியவர் கைத்தொழ வெழுந்த
நஞ்சமுது செய்தவ னிருப்பிடநள் ளாறே. 5

5 தேவர்கள் அஞ்ச, தேவகணங்களுக்கே முதுகான மால் முதலானோர் எங்களைக் காப்பாற்றுக எனக் கைதொழ, பாற்கடலிலிருந்து எழுந்த நஞ்சை உண்டருளிய பெரு

மான் எழுந்தருளிய தலம் திருநள்ளாறே. ஏ மனமே! தியானிக்கின்றவர்களுடைய வஞ்சனைகளைப் போக்கி ஆட்கொள்ளுகின்ற இறைவனை உனக்காக அதாவது நீ பிழைப்பதற்காகத் தரிசித்துக்கொள்.

பாலனடி பேணவவ னாருயிர் குறைக்குங்
காலனுடன் மாளமு னுதைத்தவ னூராம்
கோலமலர் நீர்க்குட மெடுத்துமறை யாளர்
நாலின் வழிநின்றுதொழில் பேணியநள் ளாறே. 6

6 வேதங்களை ஓதிய பிராமணர்கள் அழகான பூக்களையும், நீர் நிறைந்த திருமஞ்சனக் குடங்களையும் தூக்கி வேத விதிப்படி ஒடுகின்று தம் தொழிலாகிய பூசையையே விரும்புந்தலமாகிய திருநள்ளாறே, மார்க்கண்டேயனாகிய இளஞ் சிறுவன் தம் திருவடியைப் பூசிக்க அவனுயிரைக் கொண்டுபோக வந்த காலன் உயிர் மாளும் வண்ணம் உதைத்த காலகாலனாகிய பரம சிவத்தின் ஊராம்.

நீதியர் நெடுந்தகையர் நீண்மலையர் பாவை
பாதியர் பராபரர் பரம்பர ரிருக்கை
வேதியர்கள் வேள்வியொழி யாதுமறை நாளும்
ஓதியரன் னாமமு முணர்ந்திடுநள் ளாறே. 7

7 வேதம் ஓதுகின்ற பிராமணர்கள் யாகங்களை இடைவிடாது செய்தும் வேதங்களை இடைவிடாமல் ஓதியும், சிவ நாமங்களைச் சொல்லியும் அதனையே தியானித்தும் வாழ்கின்ற திருநள்ளாறே, நீதியே வடிவானவரும், பெருந்தன்மை படைத்தவரும், நீண்ட இமயமலையரசன் மகளான உமாதேவியாரை ஒரு பாகத்தில் உடையவரும், மேலானவர்கள் அனைவருக்கும் மேலானவரும், மேலானவற்றிற்கெல்லாம் மேலானவரும் ஆகிய சிவபெருமானுடைய இருப்பிடமாம்.

கடுத்துவ லரக்கன்மு னெருக்கிவரை தன்னை
எடுத்தவன் முடித்தலைகள் பத்துமிகு தோளும்
அடர்த்தவர் தமக்கிடம் தெண்பரளிபாட
நடத்தகல வைத்திரள்கள் வைகிய நள்ளாறே. 8

8 வண்டுகள் ஒலிக்க, நடனம் புரிகின்ற அன்னக் கூட்டங்கள் இருக்கின்ற திருநள்ளாறே, இராவணனை முன்னே கோபித்து, அவனை மலையின் கீழேயே வைத்து நெருக்கி, அவனுடைய முடித்தலைகள் பத்தும், மிகுந்த இருபது தோள்களும் வருந்தச் செய்தவராகிய சிவபெருமானுக்கு உகப்பான இடம் என்பார்கள்.

உயர்ந்தவ னுருக்கொடு திரிந்துலக மெல்லாம்
பயந்தவன் நினைப்பரிய பண்பனிட மென்பர்
வியந்தமரர் மெச்சமலர் மல்குபொழி லெங்கும்
நயந்தரும் வேதவொலி யார்திருநள் ளாறே. 9

9 பூக்கள் நிறைந்த பொழில்கள் எங்கும், தேவர்கள் ஆச்சரியப்பட்டு பாராட்ட விரும்பி யோதப்படுகின்ற வேதவோசை பொருந்திய திருநள்ளாறே, எல்லாரினும் உயர்ந்தவனும், உயிர்கள்மேல் வைத்த கருணையால் உருவங்கொண்டு உலகத்திலே திரிந்தவனும், உலகம் அனைத்தையும் படைத்தவனும், யாராலும் நினைத்தற்கரிய குணங்கள் வாய்ந்தவனுமான சிவபெருமான் இடம் என்பர்.

சிந்தை திரு கற்சமணர் தேரர்தவ மென்னும்
பந்தனை யறுத்தருளு கின்றபர மன்னூர்
மந்தமுழ வந்தரு விழாவொலியும் வேதச்
சந்தம்விர விப்பொழின் முயங்கிய நள்ளாறே. 10

10 மனம் மாறுபட்ட சமணர்களும் புத்தர்களுமாகிய இவர்களின் தவம் என்னும் பாசத்தை யறுத்து ஆட்கொண்டருளுகின்ற பரமசிவனுடைய ஊர், மந்தஸ்தாயியில் முழவம் ஒலிக்கின்ற திருவிழாக்களின் ஓசையும், வேதங்களின் சந்தமும் கலந்து ஒலிக்கும் சோலைகள் சூழ்ந்த திருநள்ளாறும்.

ஆடலர வார்சடையன் ஆயிழைதன் னோடும்
நாடுமலி வெய்திட இருந்தவன் நள்ளாற்றை
மாடமலி காழிவளர் பந்தனது செஞ்சொல்
பாடலுடை யாரையடை யாபழிகள் நோயே. 11

11 ஆடுகின்ற பாம்பைச் சுற்றிய செஞ்சடையை யுடையவனும், நாடுகள் வளம் பெருகிச் செழிக்க உமாதேவியா

ரோடு இருந்தவனும் ஆன சிவபெருமான் எழுந்தருளி யிருக்கின்ற திருநள்ளாற்றை, மாடங்கள் நிறைந்த சீகாழியிலே அவதரித்து வளர்கின்ற திருஞானசம்பந்தப் பெருமான் சொன்ன செஞ்சொல்லா லாகிய பாடல்களை உடைய ஆன்மாக்களைப் பழியும் பாவமும் நோயும் பொருந்தாவாம்.

திருச்சிற்றம்பலம்

---

திருவிராகம் பண் - சாதாரி.

திருச்சிற்றம்பலம்

தளிரிள வளரொளி தனதெழில் தருதிகழ் மலைமகள்
குளிரிள வளரொளி வனமுலை யிணையவை குலவலின்
நளிரிள வளரொளி மருவுநள் ளாறர்தந் நாமமே
மிளிரிள வளரெரி யிடிலிவை பழுதிலை மெய்ம்மையே. 1

1. தளிர்போலும் இளமையான ஒளியோடு கூடிய தனது அழகை வெளிப்படுத்தி விளங்குகின்ற மலையரசன் மகளாகிய உமாதேவியாருடைய குளிர்ந்த இளமையான ஒளியோடு விளங்குகின்ற அழகிய தனங்களோடு குலாவுதலால், குளிர்ச்சி பொருந்திய இளமையும் ஒளியும் பொருந்திய திருநள்ளாற்றுப் பெருமானுடைய திருநாமம், விளங்குகின்ற ஓங்கி எரிகின்ற நெருப்பிலிட்டாலும் பழுதடையாவாம். இது சத்தியம்.

போதமர் தருபுரி குழலெழின் மலைமகள் பூணணி
சீதம தணிதரு முகிழிள வனமுலை செறிதலின்
நாதம தெழிலுரு வனையநள் ளாறர்தந் நாமமே
மீதம தெரியினி லிடிலிவை பழுதிலை மெய்ம்மையே. 2

2 பூக்களை யணிந்த கூந்தலையுடைய உமாதேவியாரின் ஆபரணங்களை யணிந்தனவும், குளிர்ந்தனவும் அழகியனவும், மொட்டுப் போன்றனவும் ஆகிய முலைகளை அணைதலால், நாதமே வடிவான நள்ளாறர் நாமம் மேலோங்கி எரிகின்ற தீயிலிட்டாலும் பழுதடையாது இது சத்தியம்.

இட்டுறு மணியணி யிணர்புணர் வளரொளி யெழில்வடம்
கட்டுறு கதிரிள வனமுலை யிணையொடு கலவலின்
நட்டுறு செறிவயன் மறுவுநள் ளாறரர்தந் நாமமே
இட்டுறு மெரியினி லிடிலிவை பழுதிலை மெய்ம்மையே. 3

3 நவமணிகளை யழுத்திச் செய்யப்பட்ட ஆபரணங்களை யணிந்த உமாதேவியாரின் தனங்களோடு குலாவுதலால் நட்டுச் செறிந்து வளர்ந்து கிடக்கின்ற வயல்களோடு கூடிய திருநள்ளாற்று நாதருடைய நாமம், எரியிலிட்டாலும் பழுதுபடாது. இது சத்தியம்.

மைச்சணி வரியரி நயனிதொன் மலைமகள் பயனுறு
கச்சணி கதிரிள வனமுலை யவையொடு கலவலின்
நச்சணி மிடறுடை யடிகணள் ளாறரர்தந் நாமமே
மெச்சணி யெரியினி லிடிலிவை பழுதிலை மெய்ம்மையே. 4

4 மை பூசப்பட்டு, செவ்வரிகளோடு கூடி அழகான கண்களையுடைய உமாதேவியாரின் இன்பமிக்கனவும், கச்சு என்னும் ரவிக்கை யணிந்தனவுமான தனங்களோடு கலந்திருப்பதால், விஷத்தையுண்டு, அதனையே அணியாகவும் கழுத்தில் அணிந்து விளங்குகின்ற திருநள்ளாறர் தம் நாமம், எல்லாரானும் மெச்சப்படுகின்ற எரியிலிட்டாலும் பழுதில்லையாம். இது சத்தியம்

பண்ணியல் மலைமகள் கதிர் விடு பருமணி யணிநிறக்
கண்ணியல் கலசம தனமுலை யிணையொடு கலவலின்
நண்ணிய குளிர்புனல் புகுதுநள் ளாறரர்தந் நாமமே
விண்ணிய லெரியினி லிடிலிவை பழுதிலை மெய்ம்மையே. 5

5 பண்ணிசையை ஒத்த மொழிகளையுடைய உமாதேவியாரின் ஒளி வீசுகின்ற பருத்த மாணிக்கங்களாலான பொற்கலசங்களையொத்த தனங்களோடு கலந்திருப்பதால், குளிர்ந்த நீர் வயல்களில் புகும் நள்ளாறர்தம் நாமம், ஆகாயத்தை எட்டி எரிகின்ற தீயில் இட்டாலும் பழுது இல்லை. இது சத்தியம்.

போதுறு புரிகுழன் மலைமக ளிளவளர் பொன்னணி
சூதுறு தளிர்நிற வனமுலை யவையொடு துதைதலின்
தாதுறு நிறமுடை யடிகணள் ளாறரர்தந் நாமமே
மீதுறு மெரியினி லிடிலிவை பழுதிலை மெய்ம்மையே. 6

6 பூக்களையணிந்த கூந்தலையுடைய உமாதேவியாரின், இளமை குன்றாது வளர்கின்றனவும், பொன்னணிகளை யணிந்தனவும், சூதாட்டக் காய்களையொத்தனவும், மாந் தளிர் போன்ற நிறம் உடையனவும் ஆன தனங்கள் அணைதலால், பொன்னையொத்த திருமேனியையுடைய நள்ளாறர்தம் நாமம், மேலோங்கி எரிகின்ற தீயில் இட்டாலும் பழுதில்லையாம். இது சத்தியம்.

கார்மலி நெறிபுரி சுரிகுழன் மலைமகள் கவினுறு
சீர்மலி தருமணி யணிமுலை திகழ்வொடு செறிதலின்
தார்மலி நடுதலை யுடையநள் ளாறர்தந் நாமமே
ஏர்மலி யெரியினி லிடிலிவை பழுதிலை மெய்ம்மையே. 7

7 கருமை நிறம் மிகுந்த, சுருண்டு விளங்குகின்ற கூந்தலை யுடைய உமாதேவியாருடைய, சிறந்த ரத்னாபரணங்களை அணிந்த முலைகளோடு கூடுதலால் தலைமாலையை யணிந்த நள்ளாறர்தம் நாமம், எழுந்து எரிகின்ற தீயிலிட்டாலும் பழுதில்லையாம். இது சத்தியம்.

மன்னிய வளரொளி மலைமக டளிர்நிற மதமிகு
பொன்னியன் மணியணி கலசம தனமுலை புணர்தலின்
தன்னிய றறமுக னெரியநள் ளாறர்தந் நாமமே
மின்னிய லெரியினி லிடிலிவை பழுதிலை மெய்ம்மையே. 8

8 வளர்கின்ற ஒளி நிலைபெற்ற உமாதேவியாரின் பொன் னணிகளையணிந்த தனங்களோடு கூடுதலால், இராவ ணன் நெரிந்து வருந்தச் செய்த நள்ளாறர்தம் நாமம் மின்னுகின்ற எரியிலிட்டாலும் பழுதில்லை. இது சத்தியம்.

கான்முக மயிலியன் மலைமகள் கதிர்விடு கணமிகு
பான்முக மியல்பணை யிணைமுலை துணையொடு பயிறலின்
நான்முக னரியறி வரியநள் ளாறர்தந் நாமமே
மேன்முக வெரியினி லிடிலிவை பழுதிலை மெய்ம்மையே. 9

9 காட்டு மயிலையொத்த சாயலையுடைய உமாதேவியின் ஒளிவிடுகின்ற மணிகள் அணிந்த பாலோடு கூடிய தனங் களோடுப் புகுதலால், திருமாலும் பிரமனும் அறிய முடியாத நள்ளாறர்தம் நாமம் மேல்நோக்கி எரிகின்ற தீயிலிட்டாலும் பழுதில்லையாம். இது சத்தியம்.

அத்திர நயனிதொன் மலைமகள் பயனுறு மதியச்
சிந்திர மணியணி திகழ்முலையிணையோடு செறிதலின்
புத்தரொ டமணர்பொய் பெயருநள் ளாறரர்தந் நாமமே
மெய்த்திற ளெரியினி விடிலிவை பழுதில மெய்ம்மையே. 10

10 அம்புபோலுங் கண்களையுடைய உமாதேவியாரின், தொய்யில் என்னும் சித்திரம் எழுதப்பெற்றனவும், நவமணிகளாலான ஆபரணங்களைத் தரித்தனவும் ஆன தனங்களோடு கூடுதலால், புத்தரும் சமணருமாகிய பொய்யார்கள் புறங்கொடுத்து ஓடச்செய்யும் நள்ளாறர்தம் நாமம் உண்மையான—திரண்ட எரியிலிடப்படினும் பழுதில்லை, இது சத்தியம்.

சிற்றிடை யரிவைதன் வனமுலை யிணையொடு செறிதரும்
நற்றிற முறுகழு மலநகர் ஞானசம் பந்தன்
கொற்றவ னெதிரிடை யெரியினி விடிலிவை கூறிய
சொற்றெரி யொருபது மறிபவர் துயரிலர் தூயரே. 11

11 சிறிய இடுப்பினையுடைய உமாதேவியாரின் அழகான முலைகளோடு அனவரமும் கூடியிருப்பதால் நன்மை மிகுந்து விளங்கும் நாதன் எழுந்தருளியுள்ள சீர்காழிப் பதியிலே தோன்றி ஞானசம்பந்தன், அரசனாகிய கூன் பாண்டியன் எதிரிலே நள்ளாறர் நாமத்தைத் தீயிலிடுவதற்காகச் சொன்ன சொற்கள் பத்தையும் அறிந்த மக்கள் உலகில் துன்பம் இல்லாதவர் ஆவர். தூயரும் ஆவர்.

திருச்சிற்றம்பலம்.

திருக்குறுந்தொகை

## திருநாவுக்கரசு சுவாமிகள்

திருச்சிற்றம்பலம்

உள்ளா ருதடுதோர் புண்டரி கத்திரள்
தொள்ளா ருச்சிவச் சோதித் திரளினைக்
கள்ளா ருதபொற் கொன்றை கமழ்சடை
நள்ளா றுவென நம்வினை நாசமே. 1

1 மனமாகிய குவியாத – உதிராத தாமரையின் கூட்டத்தில் தொளைபொருந்தாத சிவமாகிய ஒளிப்பிழம்பை உற்று நோக்கி, தேன் வற்றாத பொன்னிறமான கொன்றை மாலை மணம் வீசுகின்ற சடையினையுடைய திருநள் ளாறு! என்று ஒருகால்கூற நாம் முற்பிறவிகளில் செய்த வினைகள் அனைத்தும் நாசமாம்.

ஆர ணப்பொரு ளாமரு ளாளனுர்
வார ணத்துரி போர்த்த மணாளனுர்
நாரணன் னண்ணி யேத்துநள் ளாறனுர்
கார ணக்கலை ஞானக் கடவுளே. 2

2 வேதங்களின் உட்பொருளாக விளங்கும் கருணையே வடிவானவரும், யானைத் தோலைப் போர்த்திய நித்ய கல்யாணப் பெருமானும் ஆகிய நாராயணன் நாடோறும் எண்ணி எண்ணி வழிபாடு செய்யும் நள்ளாற்றுப் பெருமானே உலக காரணனுகவும், கலைகள் அனைத் திற்கும் காரணனுகவும் விளங்கும் ஞானமயமான நாதனுவான்.

மேகம் பூண்டதோர் மேருவிற் கொண்டெயில்
சோகம் பூண்டழல் சோரத்தொட் டானவன்
பாகம் பூண்டமால் பங்கயத் தானொடு
நாகம் பூண்டுகூத் தாடுநள் ளாறனே. 3

3 மேகங்கள் சூழ்ந்த மேரு மலையை வில்லாக வளைத்து, முப்புரங்களும் துன்பத்துள் சிக்கித் தீப்பற்றி எரிய அம்பு தொடுத்தவனும், பக்கத்தில் நிற்கின்ற திருமா லும் பிரமனுமாகிய இவர்களோடு, பாம்பையும் அணிந்து திருநடம் புரிகின்ற திருநள்ளாறனே.

மலியும் செஞ்சடை வாளர வம்மொடு
பொலியும் பூம்புனல் வைத்த புனிதனூர்
கலியுங் கூற்றை நலிந்தநள் ளாறர்தம்
வலியுங் கண்டிறு மாந்து மகிழ்வனே. 4

4 நிறைந்த செஞ்சடையிலே, ஒளி பொருந்திய பாம்பையும், பொங்கி எழும் கங்கா நதியையும் சூடிய புனிதப் பெருமானாகிய கலியையும் கூற்றையும் வருத்துகின்ற நள்ளாற்றுப் பெருமானுடைய வலிமையைக் கண்டு 'இத்தகைய பேரருளாளன் நமக்குத் துணையாகின்றானே' என்று இறுமாந்து மகிழ்வேன்.

உறவ னாய்நிறைந் துள்ளங் குளிர்ப்பவன்
இறைவ னாகினின் றெண்ணிறைந் தானவன்
நறவ நாறும் பொழிற்றிரு நள்ளாறன்
மறவ னாய்ப்பன்றிப் பின்சென்ற மாயமே. 5

5 எனக்கு உறவுடையவனாக என் உள்ளத்திலே நிறைந்து குளிரச் செய்பவன், எல்லாப் பொருளுக்கும் இறைவனாகி அவரவர் எண்ணங்களில் எல்லாம் நிறைந்தவனாகிய, தேன் மணக்கும் சோலை சூழ்ந்த திருநள்ளாற்றுப் பெருமான், வேடனாகிக் காட்டுப் பன்றியைத் துரத்திக்கொண்டு அதன்பின் சென்ற மாயம் என்னே!

செக்க ரங்கழி செஞ்சுடர்ச் சோதியர்
நக்கரங்கர வார்த்தநள் ளாறனார்
வக்க ரன்னுயிர் வவ்விய மாயற்குச்
சக்க ரம்மருள் செய்த சதுரரே 6

6 செவ்வானத்தையும் வெல்லும் சிவந்த சுடரோடுகூடிய சோதி வடிவானவரும், திசைகளையே ஆடையைக் கொண்ட நக்கரும் ஆன பாம்பையணிந்த திருநள்ளாறர் வக்கிராசுரனைக் கொன்ற திருமாலுக்குச் சக்கராயுதம் அருளிச் செய்த வலிமையுடையவர் ஆவர்.

வஞ்சநஞ் சிற்பொலி கின்ற கண்டத்தர்
விஞ்சையிற் செல்லப் பாவைக்கு வேந்தனார்
வஞ்ச நெஞ்சத் தவர்க்கு வழிகொடார்
நஞ்ச நெஞ்சர்க் கருளுநள் ளாறனே 7

7 வஞ்சனை பொருந்திய நஞ்சினால் விளங்குகின்ற கழுத்தை யுடையவரும், வித்யை வடிவான அந்த உமாதேவிக்குத் தலைவரும், வஞ்சனை பொருந்திய மனம் உடையவர் களுக்கு நல்லவழியைக் கொடுக்காதவரும் ஆன நள்ளாரர் நஞ்சுபோலும் கொடிய மனம் உடையவர் களுக்கும் அருள் செய்வர்.

அல்ல னென்ற மலர்க்கரு ளாயின
சொல்ல னென்றுசொல் லாமறைச் சோதியான்
வல்ல னென்றுவல் லார்வள மிக்கவர்
நல்ல ளென்றுநல் லார்க்குநள் ளாறனே. 8

8 இவன் முழுமுதற் கடவுள் அல்லன் என்று கூறும் ஆணவமல வலிமையுடைய அஞ்ஞானிகட்கு அருள்வடி வாக விளங்காதவரும், சொற்கள் எல்லாவற்றிற்கும் தந்தையாவான் இவனே என்று சொல்வடிவான வேதங் களிற் கூறப்படும் ஞானவடிவான வரும் ஆகிய இறைவன் எல்லாம் வல்லவன் என்று கூறும் ஞான வல்லமை பெற்றவர்கள் வாழ்க்கையில் இம்மையிலும் மறுமையிலும் வளம் பெற்றவர்கள் ஆவார்கள். அன்றி யும், நள்ளாற்றுப் பெருமான் நல்லவர்கட்கு என்றும் நல்லவனுவான்.

பாம்ப ணைப்பள்ளி கொண்ட பரமனும்
பூம்ப ணைப்பொலி கின்ற புராணனும்
தாம்ப ணிந்தளப் பொண்ணுத் தனித்தழல்
நாம்ப ணிந்தடி போற்றுநள் ளாறனே. 9

9 ஆதிசேஷனுகிய படுக்கையில் அறிதுயில் கொள்கின்ற மகா விஷ்ணுவும், தாமரைப் பூவாகிற இடத்திலே விளங்குகின்ற முதற்றொழிலாகிய படைப்பைச் செய் கின்ற பிரமனும், வணங்கித் தாழ்ந்தும் அளக்க இயலாத ஆற்றலையும் உருவையும் உடைய ஒப்பற்ற தழல்மேனியனும், ஆக விளங்குபவன், நாம் அனைவரும் வணங்கித் துதிக்கும் திருவடிகளையுடைய திருநள் ளாறனே.

இலங்கை மன்ன னிருபது தோளிற
மலங்க மால்வரை மேல்விரல் வைத்தவர்
நலங்கொ ணீற்றர்நன் னாறரை நாடொறும்
வலங்கொள் வார்வினை யாயின மாயுமே. 10

10 இலங்கையரசனாகிய இராவணனுடைய இருபது தோள்களும் ஒடியும்படி, அவன் மயங்கி, அவனால் தூக்கப் பெற்ற கைலைமலையின்மேல் ஒருவிரலை ஊன்றியவரும், நன்மைகள் அனைத்தையும் வழங்கும் திருநீற்றையணிந்தவரும் ஆகிய திருநள்ளாற்று பெருமானை நாளும் வலங்கொண்டு வழிபாடுகள் செய்பவர்களுடைய வினைகள் அனைத்தும் அழியும்.

திருநாவுக்கரசு சுவாமிகள் பலதலங்களையும் வணங்கித் திருப்புகலூரில் எழுந்தருளியிருக்கின்ற காலத்து, திருச்செங்காட்டங்குடியை வணங்கித் திருவாரூருக்குச் செல்கின்றவர்கள் வழியிலே இத்தலத்தை யடைந்து இக்குறுந் தொகையை யருளிச் செய்தார்கள்.

திருச்சிற்றம்பலம்.

---

## திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

ஆதிக்க ணான்முகத்தி லொன்று சென்று
வல்லாத சொல்லுரைக்கத் தன்கைவாளால்
சேதித்த திருவடியைச் செல்ல நல்ல
சிவலோக நெறிவகுத்துக் காட்டுவானை
மாதிமைய மாதொருகூ றாயினானை
மாமலர்மே லயனோடு மாலுங்காணா
நாதியை நம்பியை நள்ளாற் றானை
நானடியே நினைக்கப்பெற் றுய்ந்தவாறே. 1

## இதுவும் அது

1 படைப்புத்தொழிலோனாகிய பிரமனுடைய முகங்களில் ஒன்று ஐந்து முகம் உடைமையால் நாமும் சிவமாவோம் என்ற தகாத சொல்லை உரைக்க, தன் கையிலுள்ள வாளால் ஐந்தாவதான தலையைக் கிள்ளி எறிந்த சிவபெருமானை — உண்மையன்பு பூண்ட மக்கள் அனைவரும் சென்றடைய நல்ல ஞானவழியை வகுத்துக் காட்டிய

வள்ளலை—உமாதேவியை ஒரு பாகத்தில் உடையவனை—பிரமனும், திருமாலும் அறியப்பெறாத ஆதாரமான வனை—குணங்களால் நிறைந்த நம்பியை—நள்ளாற்றுப் பெருமானை நினைக்கப்பெற்று அடியேன் உய்ந்தேன்.

படையானைப் பாசுபத வேடத் தானைப்
பண்டனங்கற் பார்த்தானைப் பாவ மெல்லாம்
அடையாமைக் காப்பானை அடியார் தங்க
ளருமருந்தை யாவாவென் றருள்செய் வானைச்
சடையானைச் சந்திரனைத் தரித்தான் றன்னைச்
சங்கத்த முத்தனைய வெள்ளை யேற்றின்
நடையானை நம்பியை நள்ளாற் றானை
நானடியே நினைக்கப்பெற் றுய்ந்த வாறே. 2

2 மழுப்படையை யுடையவரும், பாசுபத மதத்தினர்போல் வேடம் பூண்டவரும், முன்பு மன்மதனை நெற்றிக்கண்ணாற் பார்த்தவரும், எமக்குப் பாவங்களனைத்தும் வந்து சேரா வண்ணம் காப்பவரும், அடியார்களுக்குக் கிடைத்தற்கு அரிய தேவாமுதத்தை ஒப்பவரும், ஆ! வா என்று அழைத்து அருள் செய்பவரும், சிவந்த சடையை உடைய வரும், அதில் சந்திரனைத் தரித்தவரும், சங்கிலிருந்து உண்டான வெண்மையான முத்தை ஒத்த வெள்ளை இடபத்தின் மேலிருந்து நடப்பவரும், குணங்களால் நிறைந் தவரும் ஆன நள்ளாற்றுநாதனை அடியேனாகிய யான் இடைவிடாது நினைக்கப்பெற்று உய்ந்தவாறு இதுவாம்.

படவரவ மொன்றுகொண் டரையி லார்த்த
பராபரனைப் பைஞ்ஞீலி மேவி னானை
அடலரவம் பற்றிக் கடைந்த நஞ்சை
யமுதாக வுண்டானை யாதி யானை
மடலரவ மன்னுபூங் கொன்றை யானை
மாமணியை மாணிக்காய்க் காலன் றன்னை
நடலரவஞ் செய்தானை நள்ளாற் றானை
நானடியே னினைக்கப்பெற் றுய்ந்த வாறே. 3

3 படத்தோடு கூடிய பாம்பு ஒன்றைத் திருவரையில் அணியாகக் கட்டிய, மேலான பொருள்களுக்கெல்லாம் மேலானவரும், திருப்பைஞ்ஞீலியென்னுந் தலத்தில் எழுந்தருளியிருப்பவரும், வலிமையோடுகூடிய வாசுகி என்னும் பாம்பைக் கடை கயிறாகப் பூட்டிக் கடைந்த நஞ்சினை

அமுதமாக உண்டருளியவரும், எல்லாவற்றிற்கும் முதலாகவுள்ளவரும், இதழ்களோடு கூடியதும் வண்டொலி நீங்கப் பெறாததுமான கொன்றை மலரை யணிந்தவரும், பெரிய மணி போன்றவரும், பிரமசாரி மார்கண்டேயருக்காக எமனை உதைத்து நடனஞ் செய்தவரும் ஆன திருநள்ளாற்றினை நினைக்கப்பெற்று அடியேன் உய்ந்தேன்.

கட்டங்க மொன்றுதங் கையி லேந்திக்
கங்கணமுங் காதில்விடு தோடுமிட்டுச்
சுட்டங்கங் கொண்டு துதையப் பூசிச்
சுந்தரனாய்ச் சூலங்கை யேந்தி னானைப்
பட்டங்க மாலை நிறையச் சூடிப்
பல்கணமுந் தாமும் பரந்த காட்டில்
நட்டங்க மாடியை நள்ளாற் றானை
நானடியே னினைக்கப்பெற் றுய்ந்த வாறே. 4

4 மழுப்படையைக் கையில் தாங்கி, ஒரு கையிற் கங்கணமும், அதற்கு நேரான காதிலே தோடும் அணிந்து, சுட்ட சாம்பராகிய விபூதியை கொண்டு உடல் நிரம்பப் பூசி, பேரழகனாகச் சூலத்தைக் கையில் ஏந்தியவரும், பட்டையும் எலும்பு மாலைகளையும் நிரம்ப அணிந்து, பல பூதகணங்களும், தாமுமாகப் பரந்த சுடுகாட்டிலே நடனம் ஆடினவரும் ஆன நள்ளாற்றினை நான் நினைக்கப் பெற்று உய்ந்தவாறு இதுவாம்.

உலந்தார்தம் அங்கங்கொண் டுலக மெல்லாம்
ஒருநொடியி லுழல்வானை யுலப்பில் செல்வம்
சிலந்திதனக் கருள்செய்த தேவ தேவைத்
திருச்சிராப் பள்ளியெஞ் சிவலோகனைக்
கலந்தார்தம் மனத்தொன்றுங் காத லானைக்
கச்சியே கம்பனைக் கமழ்பூங் கொன்றை
நலந்தாங்கு நம்பியை நள்ளாற்றானை
நானடியே னினைக்கப்பெற் றுய்ந்த வாறே. 5

5 இறந்த பிரமன் திருமால் இவர்களுடைய எலும்புகளை யணிந்து ஒரு நொடிப் பொழுதிலே உலகெங்கும் திரிபவரும், சிலந்திப் பூச்சிக்கு வற்றாத செல்வத்தை யுதவிய தேவதேவரும், திருச்சிராப்பள்ளிமலையிலே யுள்ள எமது சிவலோகநாதரும், தம்மோடு கலந்து பழகும் மெய்யன்பர்கள் உள்ளத்திலே என்றும்

விருப்பம் உடையவரும், காஞ்சிபுரத்திலுள்ள ஏகாம்பர நாதரும், மணம் வீசுகின்ற கொன்றைப் பூமாலையை அணிந்த அழகிய நம்பியும் ஆன நள்ளாற்றனை நினைக்கப்பெற்று அடியேன் உய்ந்தவாறு இதுவாம்.

குலங்கெடுத்துக் கோணிக்க வல்லான் றன்னைக்
குலவரையின் மடப்பாவை யிடப்பா லானை
மலங்கெடுத்து மாதீர்த்த மாட்டிக் கொண்ட
மறையவனைப் பிறைதவழ்செஞ் சடையி னானைச்
சலங்கெடுத்துத் தயாமூல தன்ம மென்னும்
தத்துவத்தின் வழிநின்று தாழ்ந்தோர்க் கெல்லா
நலங்கொடுக்கு நம்பியை நள்ளாற் றானை
நானடியே நினைக்கப்பெற் றுய்ந்த வாறே. 6

6 வினைக்கூட்டங்களைப் போக்கி, கோள்களால் வரும் தீமைகளையுங் களைய வல்லவரும், இமய அரசன் மகளாகிய உமாதேவியாரை இடப் பாகத்தில் கொண்டவரும், ஆணவமலத்தின் வலிமையைப் போக்கிக் கங்கையைத் தம் திருமுடியில் ஏற்ற அந்தணரும், பிறைமதி தவழுகின்ற செஞ்சடையை உடையவரும், வஞ்சனையைத் தொலைத்து, கருணைக்கு மூலமான தத்துவத்தின் நெறியிலே நின்று வணங்கிய அடியார்கட்கு எல்லாம் இன்பத்தையே யளிக்கவல்ல நம்பியும் ஆன நள்ளாற்று நாதனை அடியேனாகிய நான் தியானிக்கப்பெற்று உய்ந்தவாறு இதுவாம்.

பூவிரியு மலர்க்கொன்றைச் சடையி னானைப்
புறம்பயத்தெம் பெருமானைப் புகலூ ரானை
மாவிரியக் களிறுரித்த மைந்தன் றன்னை
மறைக்காடும் வலிவலமு மன்னி னானைத்
தேவிரியத் திகழ்தக்கன் வேள்வி யெல்லாஞ்
சிதைத்தானை யுதைத்தவன்றன் சிரங்கொண் டானை
நாவிரிய மறைநவின்ற நள்ளாற் றானை
நானடியே னினைக்கப்பெற் றுய்ந்த வாறே. 7

7 கொன்றை மலர் அணிந்த சடையை யுடையவரும், திருப்புறம்பயத்தில் எழுந்தருளியுள்ள பெருமானும், திருப்புகலூரில் உள்ளவரும், விலங்குகள் அஞ்ச யானையை யுரித்துப் போர்த்திய வீரரும், திருமறைக் காடு என்னும் வேதாரண்யத்தையும், திருவலிவலத்தை

யும் இடமாகக்கொண்டு எழுந்தருளியவரும், தேவர்கள் அனைவரும் அஞ்சியோட தக்கனுடைய யாகத்தையழித்தவரும், அவனைத் திருவடியால் உதைத்து, அவனுடைய தலையை யறுத்தவரும், நாவானது விரிவடைய வேதங்களை அருளிச் செய்தவரும் ஆன நள்ளாற்று நாதனை அடியேனாகிய நான் தியானிக்கப் பெற்று உய்ந்தேன்.

சொல்லானைச் சுடர்ப்பவளச் சோதியானைத்
  தொல்லவுணர் புரமூன்று மெரியச் செற்ற
வில்லானை யெல்லார்க்கு மேலா னானை
  மெல்லியலாள் பாகனை வேத நான்கும்
கல்லாலின் கீழிருந்த் றறங்கண் டானைக்
  காளத்தி யானைக் கயிலை மேய
நல்லானை நம்பியை நள்ளாற் றானை
  நானடியே னினைக்கப்பெற் றுய்ந்த வாறே. 8

8 சொற்களின் வடிவானவரும், ஒளிவிடுகின்ற செம்பவளத்தின் சோதி போன்ற ஒளிபடைத்த திருமேனியையுடையவரும், பழைமையான அசுரர்களாகிய திரிபுராரிகளின் முப்புரங்களையும் எரித்த மேருமலையாகிய வில்லையுடையவரும், அனைவருக்கும் மேலாக விளங்குபவரும், உமாதேவியை இடப்பாகத்தில் உடையவரும், அறத்தையும், நான்கு வேதங்களையும் கல்லால மரத்தின் கீழே இருந்து அருளியவரும், திருக்காளத்தி என்னும் தலத்தில் இருப்பவரும், திருக்கயிலாய மலையில் எழுந்தருளியவரும் ஆகிய நள்ளாற்றானை அடியேனாகிய நான் நினைக்கப்பெற்று உய்ந்தேன்.

குன்றாத மாமுனிவன் சாபம் நீங்கக்
  குரைகழலாற் கூற்றுவனைக் குமைத்த கோனை
அன்றாக வவுணர்புர மூன்றும் மேவ
  வாரழல்வா யோட்டி யடர்வித் தானைச்
சென்றாது வேண்டிற்றொன் றீவான் றன்னைச்
  சிவனேயெம் பெருமானென் றிருப்பார்க் கென்றும்
நன்றாக நம்பியை நள்ளாற் றானை
  நானடியே னினைக்கப்பெற் றுய்ந்த வாறே. 9

9 தவத்திலும், சிவபக்தியிலும் குறையாத பெரிய முனிவராகிய மார்க்கண்டேயரின் சாபம்நீங்க யமனைத் திருவடியால் உதைத்து அழித்தவரும், அன்றைக்கு முப்புரங்களும் வெந்தழிய தீயைப் பரப்பிக் கொளுத்தியவரும், அனுக்

கத்திற் சென்று யாதொன்றை வேண்டினாலும் அதனைக் கொடுத்தருள்பவரும், 'சிவபெருமானே எம்பெருமான்' என்று உறுதிகொண்ட அடியார்களுக்கு நன்மையே விளையச் செய்பவரும், நம்பியும் ஆன நள்ளாற்றுப் பெருமானை அடியேன் தியானிக்கப்பெற்று உய்ந்தேன்.

இறவாமே வரம்பெற்றே னென்று மிக்க
விராவணனை யிருபதுதோ ணெரிய வூன்றி
உறவாகி யின்னிசைகேட் டிரங்கி மீண்டே
யுற்றபிணி தவிர்த்தருள வல்லான் றன்னை
மறவாதார் மனத்தென்று மன்னி னானை
மாமதிய மலர்க்கொன்றை வன்னி மத்தம்
நறவார்செஞ் சடையானை நள்ளாற் றானை
நானடியே னினைக்கப்பெற் றுய்ந்த வாறே. 10

10 'சாகாவரம் பெற்றேன்' என்று இறுமாப்புக்கொண்டிருந்த இராவணனை, அவனுடைய இருபது தோள்களும் நெரியும்படித் திருவடியை ஊன்ற, அவன் அன்பு கொண்டு உறவாகிச் சாம வேதத்தைப்பாட, அதனைக் கேட்டுத் திருவுள்ளம் இரங்கி, மீண்டும் அவன் அடைந்த வருத்தம் எல்லாவற்றையும் போக்கி அருளியவரும், மறவாமல் என்றும் நினைப்பார்களுடைய மனத்திலே என்றும் நிலைபெற்றிருப்பவரும், பிறைமதி, கொன்றை மலர், வன்னியிலை, ஊமத்தம்பூ, இவைகளின் மணம் நிறைந்த செஞ்சடையை யுடையவரும் ஆன நள்ளாற்று நாதனை அடியேன் நினைக்கப்பெற்று உய்ந்தேன்.

திருச்சிற்றம்பலம்.

## சுந்தரமூர்த்தி சுவாமிகள்

பண் - தக்கேசி

திருச்சிற்றம்பலம்.

செம்பொன் மேனிவெண் ணீறணி வானைக்
கரிய கண்டனை மாலயன் காணாச்
சம்பு வைத்தழ லங்கையி னானைச்
சாம வேதனைத் தன்னொப் பிலானைக்
கும்ப மாகரி யின்னுரி யானைக்
கோவின் மேல்வருங் கோவினை யெங்கள்
நம்ப னைநள் ளாறனை யமுதை
நாயி னேன்மறந் தென்னினைக் கேனே. 1

1 சிவந்த பொன்போலும் திருமேனியின்மீது வெண்மை யான விபூதியை அணிந்தவரும், கருமையான கழுத்தை யுடையவரும், திருமாலும், பிரமனும் அறியமுடியாத சம்புவும், அனலை உள்ளங்கையில் ஏந்தியவரும், சாமவேதத் தையருளிச் செய்தவரும், தனக்கு ஒப்பாவார் வேறெவரும் இல்லாதவரும், யானைத்தோலைப் போர்த்தவரும், இடபத்தின்மேல் வருகின்றவரும் எங்கள் தலைவரும், அமுதம் போல என்றும் இனிப்பவரும் ஆன நள்ளாறனை மறந்து நாயை யொத்து இழிந்த யான்என் நினைப்பேன்.

விரைசெய் மாமலர்க் கொன்றையி னானை
வேத கீதனை மிகச்சிறந் துருகிப்
பரசு வார்வினைப் பற்றறுப் பானை
பாடலொ டானஞ்சு மாடவல் லானைக்
குரைச டல்வரை யேழுல குடைய
கோனை ஞானக் கொழுந்தினைத் தொல்லை
நரைவிடை யுடைநள் ளாறனை யமுதை
நாயி னேன்மறந் தென்னினைக் கேனே. 2

2 மணம் வீசுகின்ற கொன்றை மலர் மாலையை அணிந்தவரும், வேத இசையைப் பாடுபவரும், மிக அன்பு சிறந்து மனம் உருகி வணங்கும் அடியார்களின் வினைகளையும்—பாசத்தையும் நீக்குபவரும், பால் முதலான பஞ்ச கவ்வியங்களில் திருமஞ்சனங் கொள்பவரும், கடலை எல்லையாகவுடைய ஏழுலகங்களையும் தமக்கு உடமையாகப் பெற்றவரும், சிவஞானக் கொழுந்தும், முல்லை நிலத்திலுள்ள வெள்ளை யிடபவாகனத்தில் வருபவரும் ஆகிய நள்ளாற்றுப் பெருமானை நாயேன் மறந்து என்னினைப்பேன்.

பூவில் வாசத்தைப் பொன்னினை மணியைப்
புவியைக் காற்றினைப் புனலனல் வெளியைச்
சேவின் மேல்வருஞ் செல்வனைச் சிவனைத்
தேவ தேவனைத் தித்திக்குந் தேனைக்
காவியங் கண்ணி பங்கனை கங்கைச்
சடைய னைக்கா மரத்திசை பாட
நாவி லூறுநள் ளாறனை யமுதை
நாயினேன்மறந் தென்னினைக் கேனே. 3

3 ஓர் மலரில் மணம்போல நீக்கமின்றி விளங்குபவரும் பொன்போற் போற்றத்தக்கவரும், மாணிக்கம்போல உயர்ந்தவரும், மண், காற்று, நீர், நெருப்பு ஆகாயமான ஐம் பூதங்களாக விளங்குபவரும், இடப வாகனத்தின் மேல் வரும் செல்வரும், தேவ தேவரும், என்றும் தித்திக்கும் தேன் போன்றவரும், நீலப்பூப் போலுங் கண்களை யுடைய உமாதேவியை ஒரு பாகத்தில் உடையவரும், கங்கா தேவியைச் சடையில் அணிந்தவரும், சீகாமரம் என்னும் பண்ணைப் பாட நம் நாவில் ஊறும் அமுதம் போல, அமுதம் போன்றவருமான நள்ளாற்றுச் சிவ பெருமானை நாயேன் மறந்து வேறு என்ன நினைப்பேன்,

தஞ்ச மென்றுதன் றுளது வடைந்த
பாலன்மேல் வந்த காலனை யுருள
நெஞ்சி லோருதை கொண்டபி ரானை
நினைப்ப வர்மன நீங்ககில் லானை
விஞ்சை வானவர் தானவர் கூடிக்
கடைந்த வேலையுண் மிக்கெழுந் தெரியும்
நஞ்சமுண்டநள் ளாறனை யமுதை
நாயி னேன்மறந் தென்னினைக் கேனே. 4

4 'பெருமானே' அடைக்கலம் என்று அபயக்குரல் கூவிக் கொண்டு திருவடியை வந்து அடைந்த மார்க்கண்டேயன் என்னும் பாலன்மேல் எதிர்த்துவந்த காலனை உருண்டொழியும்படித் திருவடியால் நெஞ்சில் உதைத்த பிரானும், இடைவிடாது நினைக்கின்ற அடியார்களின் மனத்தைவிட்டு நீங்காதவரும், வித்தைகளில் வல்ல தேவர்களும் அசுரர்களும் ஒன்றுகூடிக் கடைந்த பாற்கடலிலிருந்து உண்டான கொழுந்து விட்டெரியும் நஞ்சை அமுது செய்தவரும் ஆன நள்ளாற்றுப் பெருமானை மறந்து நாயேன் வேறு எதனை நினைப்பேன்.

மங்கை பங்கனை மாசிலா மணியை
வான நாடனை யேனமோ டன்னம்
எங்கு நாடியுங் காண்பரி யானை
யேழை யேற்கெளி வந்தபி ரானை
அங்க நான்மறை யானிறை கின்ற
வந்த ணாள ரடியது போற்றும்
நங்கள் கோனைநள் ளாறனை யமுதை
நாயி னேன்மறந் தென்னினைக் கேனே. 5

5 உமாதேவியாரை ஒருபக்கம் உடையவரும், குற்றமற்ற மாணிக்கம்போல்பவரும், விண்ணுலகமாகிய நாட்டையுடையவரும், அன்னமும் பன்றியுமாகிய பிரமனும் திருமாலும் எங்குந் தேடியும் காணுதற்கு அருமையானவரும், எளியேற்கு எளிவந்த கருணையோடு எழுந்தருளிய பெருமானும், வேதங்களாகிய ஆருலும், வேதங்களாகிய நான்காலும் நிறைந்து விளங்குகின்ற அந்தணர்கள் திருவடியை வணங்குகின்ற நமது தலைவரும் ஆன நள்ளாற்றுப் பெருமானை மறந்து நாயேன் வேறு எதனை நினைப்பேன்.

கற்ப கத்தினைக் கனகமால் வரையைக்
　　காமகோபனைக் கண்ணுத லானைச்
சொற்ப தப்பொரு ளிருளறுத் தருளுந்
　　தூய சோதியை வெண்ணெய்நல் லூரில்
அற்பு தப்பழ வாவணங் காட்டி
　　யடியனு வென்னை யாளது கொண்ட
நற்ப தத்தைநள் ளாறனை யமுதை
　　நாயி னேன்மறந் தென்னினைக் கேனே. 6

6 கற்பக விருட்சம்போல நினைத்ததையெல்லாம் கொடுப்பவரும், பொன் மலையை ஒத்தவரும், மன்மதனைக் கோபித்து எரித்தவரும், நெற்றியில் கண்ணுடையவரும், சொல்லும்—பொருளும் ஆகிய அளவில் நிற்கும் உணர்வாகிய அறியாமையைப் போக்கி ஞான ஒளியைத் தந்தருளும் சுத்த சோதியானவரும், திருவெண்ணெய் நல்லூரில் அற்புதமான பழைய ஓலையைக் காட்டி அடியனுக என்னை ஆளாக ஏற்றுக்கொண்ட நல்ல நிலையானவரும் ஆன நள்ளாறனை மறந்து நாயேன் வேறு எதனை நினைப்பேன்!

மறவ னையன்று பன்றிப்பின் சென்ற
　　மாயனை நால்வர்க் காலின்கீ ழுரைத்த
அறவ னையம ரர்க்கரி யானை
　　யமரர் சேனைக்கு நாயக னை
குறவர் மங்கைதன் கேள்வனைப் பெற்ற
　　கோனை நான்செய்த குற்றங்கள் பொறுக்கும்
நறை விரியுநள் ளாறனை யமுதை
　　நாயி னேன்மறந் தென்னினைக் கேனே. 7

7 அன்றொருநாள், வேடர் தலைவனாகிப் பன்றியைவெருட்டிக்கொண்டு அதன்பின் ஓடிய மாயம் வல்லவரும், சனகாதி முனிவர் நாறுபேர்க்கும் கல்லாலின் கீழே யிருந்து அறமுரைத்தவரும், தேவர்கட்கு அருமையானவரும், தேவசேனைகட்குத் தலைவனாகிய வள்ளிமணாளனைப் பெற்ற தந்தையும், நான் செய்த குற்றங்கள் அனைத்தையும் பொறுத்தாட்கொள்ளும் மணம் வீசுகின்ற நள்ளாற்று நாதனை மறந்து நாயேன் வேறு எதனை நினைப்பேன்.

மாதி னுக்குடம் பிடங்கொடுத் தானை
மணியினைபணி வார்வினை கெடுக்கும்
வேதனை வேத வேள்வியர் வணங்கும்
விமல னையடி யேற்கெளி வந்த
தூதனைத் தன்னைத் தோழமை யருளித்
தொண்ட னேன்செய்த துரிசுகள் பொறுக்கும்
நாத னைநள் ளாறனை யமுதை
நாயி னேன்மறந் தென்னினைக் கேனே. 8

8 தம் திருமேனியில் ஒருபாதியை உமாதேவியாருக்கு அளித்தவரும், மாணிக்கம் போன்றவரும், வணங்குகின்ற உண்மையடியார்களின் துன்பங்களைத் துடைக்கும் ஞானவடிவானவரும், வேதங்களை ஓதி யாகங்களைச் செய்யும் அந்தணர்கள் வணங்கும் இயல்பாகவே மலம் இல்லாத தூய்மையானவரும், அடியேனுக்கு எளிமையாகித் தூது செல்ல எழுந்தருளியவரும், தன்னையே அடியேற்குத் தோழனாகத் தந்து அடியேன் செய்த குற்றங்களை அனைத்தையும் பொறுக்கும் தலைவரும் ஆன நள்ளாற்று நாதனை மறந்து நாயேன் வேறு எதனை நினைப்பேன்,

இலங்கை வேந்த னெழிறிகழ் கயிலை
யெடுப்ப வாங்கிம வான்மக ளஞ்சத்
துலங்கு நீள்முடி யொருபதந் தோள்க
ளிருப துந்நெரித் தின்னிசை கேட்டு
வலங்கை வாளொடு நாமமுங் கொடுத்த
வள்ளலைப் பிள்ளை மாமதிச் சடைமேல்
நலங்கொள் சோதிநள் ளாறனை யமுதை
நாயி னேன்மறந் தென்னினைக் கேனே. 9

9 இலங்கை வேந்தனுகிய இராவணன் அழகுமிக்க திருக் கயிலையைத் தூக்க, அதனைக் கண்டு இமய அரசன் புத்திரியாகிய பார்வதிதேவியார் நடுங்க விளங்குகின்ற பெரிய கிரீடங்கள் பத்தும் தோள்கள் இருபதும் நெரிய அவன் செய்த சாமகானத்தைக் கேட்டு, வெற்றியைத் தரும் வாளோடு, வெற்றியையுந்தந்த கொடைப் பெருமையுடையவரும், பிறைச்சந்திரனைத் திருமுடியின்மேல் வைத்து இன்பங்கொள்ளச்செய்யும் சோதிவடிவான திருநள்ளாறனை மறந்து நாயேன் வேறு எதனை நினைப்பேன்.

செறிந்த சோலைகள் சூழ்ந்த நள்ளாற்றஞ்
சிவனை நாவலூர் சிங்கடி தந்தை
மறந்து நான்மற்று நினைப்பதே தென்று
வனப்பகை யப்ப னூரவன் ளெண்டன்
சிறந்த மாலைக ளஞ்சினோ டஞ்சுஞ்
சிந்தையுள் ளுருகிச் செப்ப வல்லார்க்‌
கிறந்து போக்கில்லை வரவில்லை யாகி
யின்ப வெள்ளத்து ளிருப்பார்க ளினிதே. 10

10 சோலைகள் நெருங்கிய திருநள்ளாற்றிலுள்ள எம் பெருமானை, திருநாவலூரிலே தோன்றிய சிங்கடியின் தந்தையான நான் மறந்து வேறு எதனை நினைப்பது என்று, வனப்பகை என்னுங் கன்னியின் தந்தையும், ஆரூரனும், வன்றெண்டனும் ஆன அடியேன் சொன்ன, எல்லாவகையினும் சிறந்த மாலைகள் பத்தையும் மனம் உருகிச் சொல்லவல்லவர்கட்கு இறந்து போதல் இல்லை யாம் மீட்டும் பிறந்து வருதல் இல்லையாம் என்றும் இன்பக்கடலில் மூழ்கி இனிதே இருப்பார்கள்.

சுந்தரர் திருவாரூரில் தங்கிப்பிற தலங்களையும் வணங்கிக்கொண்டு திருநள்ளாற்றையடைந்தார்கள். ஆலயத்தை வலம்வந்தார்கள். மண்டிய பேரன்பினேடு இப்பதிகத்தை யருளினர்கள்.

திருச்சிற்றம்பலம்.

# திருத்தொண்டர் புராணம்

## திருநாவுக்கரசு சுவாமிகள் எழுந்தருளியது

திருச்சிற்றம்பலம்.

சீர்தரு செங்காட்டங்குடி நீடுந் திருநள்ளா
றூர்தரு சோலை சூழ்தரு சாந்தை அவயந்தி
வார்திகழ் மென்முலை யாளொரு பாகன் திருமருகல்
ஏர்தரு மன்பால் சென்று வணங்கி யின்புற்றார். 1

## சுந்தரமூர்த்தி சுவாமிகள் எழுந்தருளியது

திருச்சிற்றம்பலம்.

பரிசனமு முடன்போதப் பாங்கமைந்த பதிகடொறும்
கரியுரிவை புனைந்தார்தங் கழல்தொழுது மகிழ்ந்தேத்தித்
துரிசறு பெருந்தொண்டர் நள்ளாறு தொழுவதற்குப்
புரிவுறுமெய்த் திருத்தொண்ட ரெதிர்கொள்ளப் புக்
[கணைந்தார். 2

விண்ணு தடவு கோபுரத்தைப் பணிந்துகர மேற்குவித்துக்
கொண்டுபுகுந் தண்ணலார் கோயிலினை வலஞ்செய்து
மண்டியபே ரன்பினொடு மன்னிதிரு நள்ளாறர்
புண்டரிகச் சேவடிகீழ்ப் பொருந்தநில மிசைப்பணிந்தார். 3

திருச்சிற்றம்பலம்.

## திருஞானசம்பந்த சுவாமிகள் எழுந்தருளியது

திருச்சிற்றம்பலம்

பங்கையப்பா சடைத்தடஞ்சூழ் பழனநாட்
டகன்பதிகள் பலவும் நண்ணி
மங்கையொரு பாகத்தார் மகிழ்கோயில்
எனைபலவும் வணங்கிப் போற்றித்
தங்கிசையாழ்ப் பெரும்பாண ருடன்மறையோர்
தலைவனூர் சென்று சார்ந்தார்
செங்கைமான் மழுவேந்தும் சினவிடையார்
அமர்ந்தருளுந் திருநள் ளாறு. 4

நள்ளாற்றி லெழுந்தருள நம்பர்திருத்
தொண்டர்குழாம் நயந்து சென்று
கொள்ளாற்று லெதிர்கொண்டு குலவியுடன்
சூழ்ந்தணையக் குறுகிக் கங்கைத்
தெள்ளாற்று வேணியர் தந்திருவளர்கோ
புரம்இறைஞ்சிச் செல்வக் கோயில்
உள்ளாற்ற வலங்கொண்டு திருமுன்பு
தாழ்ந்தெழுந்தார் உணர்வின் மிக்கார். 5

உருகியவன் புறுகாத லுள்ளுருகி
நனையிரம் பெற்றாற்போல
மருவுதிரு மேனியெல்லாம் முகிழ்த்தெழுந்த
மயிர்ப்புளகம் வளர்க்கு நீராய்
அருவிசொரி திருநயனத் தானந்த
வெள்ளமிழிந் தலைய நின்று
பொருவில்பதி கம்போக மார்த்தபூண்
முலையாளென் றெடுத்துப் போற்றி. 6

யாழ்நரம்பி லாரவியல் விசைக்கூடப்
பாடியே எண்ணில் கற்பகச்
சேணளவு படவோங்குந் திருக்கடைக்காப்
புச்சாத்திச் செங்கண் நாகப்

பூண்கலத் தவர்பாதம் போற்றிசைத்துப்
புறத்தணைந்து புவன மேத்தும்
பாணனார் யாழிலிடப் பாலரு
வாயருள் பணித்த போது. 7

பிள்ளையார் திருத்தாளங் கொடுபாடப்
பின்புபெரும் பாண னார்தாம்
தெள்ளமுத வின்னிசையின் தேம்பொழிதந்
திரியாழைச் சிறக்க வீக்கிக்
கொள்ளவிடும் பொழுதின்கட் குவலயத்தோர்
களிகூறக் குலவு சண்பை
வள்ளலார் திருவுள்ளம் மகிழ்ந்துதிருத்
தொண்டருடன் மருவுங் காலை. 8

மன்னுதிரு நள்ளாற்று மருந்தைவணங்
கிப்போந்து வாச நன்னீரப்
பொன்னிவளந் தருநாட்டுப் புறம்பணைசூழ்
திருப்பதிகள் பலவும் போற்றிச்
செந்நெல்வயற் செங்கமல முகமலருந்
திருச்சாத்த மங்கை மூதூர்
தன்னிலெழுந் தருளினார் சைவசிகா
மணியார்மெய்த் தவத்தோர் சூழ. 9

திருச்சிற்றம்பலம்.

தலபுராணம்

## சனீஸ்வரர் துதி

பெருவாச நளனெடும்வந் தவன்றீர்த்த மாடுதலாற்
பெற்ற பேற்று
லொருவாவந் தெம்பெருமா னருள்பெற்று மிகவுமண
முவகை பூப்பக்
கருவாசற் புக்காற்போற் புகுந்தொளிரு நள்ளாற்றுக்
கனக வச்ரத்
திருவாச விடனின்ற மந்தனிரு செந்தளிர்த்தாள்
சிந்தை செய்வோம்.

பச்சையொண்கிரி போலிருமா தன
முற்றி தம்பொறி சேர்குழல்வாளயில்
பற்றுபுண்டரி காமென ஏய்கயல் விழிஞான

பத்திவெண்டர ளாமெனும் வாணகை
வித்ருமஞ்சிலை போல்நு தலாரிதழ்
பத்மசெண்பக மாமனுபூதியி னழகாளென்

நிச்சையந்திரி பார்வதி மோகினி
தந்தைபொன்கவி னுலிலைபோல்வயி
றிற்பசுங்கிளி யானமினூலிடை யபிராமி

எக்குலங்குடி லொடுலகியாவையு
மிற்பதிந்திரு நாழிநெலாலற
மெப்பொதும்பகிர் வாள்குமரா என வுருகேனோ

கச்சையுந்திரு வாளுமீராறுடை
பொற்புயங்களும் வேலுமீராறுள
கட்சிவங்கம லமுகமாறுள முருகோனே

கற்பகந்திரு நாடுயர்வாழ்வுற
சித்தர்விஞ்சையர் மாகர்சபாசென
கட்டவெங்கொடு சூர்கிளைவேறற விடும்வேலா

நச்சுவெண்பட மீதணைவார்முகில்
பச்சைவண்புய னூர்கருடாசனர்
நற்கரந்தனு கோள்வளைநேமியர் மருகோனே

நற்புனந்தனில் வாழ்வளிநாயகி
யிச்சைகொண்டரு வாணரம்தொடு
நத்திவந்துந ளாறுறைதேவர்கள் பெருமாளே.

---

... PUBLIC LIBRARY
13 JUL 1972
MADRAS

காவேரி கலர் பிரஸ், கும்பகோணம்.